# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

அக்டோபர் 2007

விலை ரூ.10/-








மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், விழாப்பேருரையாற்றி,
பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.
உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர். (29.9.2007)

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
புரட்டாசி - ஐப்பசி அக்டோபர் 2007
மலர் : 39 இதழ் : 4



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர்.ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.வெ.பியார் சாக்ரடீசு**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர்.பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

பிழைதிருத்துபவர்

**ஜி.சந்தானம்**



சென்னை – தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.



தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்**

உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்தறிந்து செயல்பட்டால்
உலகமேகூடக் கைக்குள் வந்துவிடும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்


❖ சேது சமுத்திரத் திட்டம் தேவை அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை. ........ 2
❖ ஏழை-எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் பல மடங்கு அதிகம் வழங்கிய ஆட்சி ..... 10
❖ மனித உயிர்கள் சுகமாக வாழ சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மரங்களை வளர்ப்போம் .......... 18
❖ ஓய்வு பெற்றவர்கள் தங்கள் உழைப்பை சமுதாயத்திற்குத் தந்திட வேண்டும் ........ 22
❖ தமிழகம், மருத்துவத்துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது ........ 25
❖ தமிழ்நாட்டின் வளம்பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை ........ 29
❖ கடந்த ஓராண்டு கால கழக அரசு 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் செய்துகொண்ட ஒப்பந்தங்களின் மூலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது ........ 35
❖ தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி அளவு ரூ.20 ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டது .. 46
❖ கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருது ........ 51
❖ பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும் ........ 53
❖ 2,82,674 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் உதவித்தொகை ........ 55
❖ காமன்வெல்த் மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக விளையாட்டு வீரர்களுக்கு 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசுகள் ........ 57
❖ பார்வையற்ற மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் விலக்களித்து ஆணை ........ 58


## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்


❖ அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை ........ 61
❖ சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கண்கவர் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகள் ........ 65
❖ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பல்வேறு நிலைகளில் பணி நியமனங்கள் ........ 66
❖ ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் ........ 68
❖ நிலக்கோட்டை சிப்காட் வளாகத்தில் இரண்டு தொழில் நிறுவனங்கள் அமைக்க ஒப்பந்தம் கையெழுத்து ........ 70
❖ சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 32 பெண் மருத்துவர்களுக்குப் பணி நிரந்தர ஆணை ........ 72
❖ நகராட்சி நிருவாகத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை ........ 74
❖ பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் திகழும் தமிழக அரசின் செய்தித்துறை - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள் ........ 75


## அட்டைப் பட விளக்கம்

*முதலாம் பக்க அட்டை :* அண்ணல் காந்தியடிகளின் 139ஆவது பிறந்தநாள் விழாவில் மேதகு ஆளுநர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (2.10.2007)

*இரண்டாம் பக்க அட்டை :* திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள் (29.9.2007)

*நான்காம் பக்க அட்டை :* தந்தை பெரியாரின் 129ஆவது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாலையணிவிப்பு (17.9.2007)



# சேது சமுத்திரத் திட்டம் தேவை. அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை.

**செ**ன்னையில் 16.10.2007 அன்று நடைபெற்ற 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுக்களுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

இந்த விருதுகள் வழங்குகின்ற விழாவில் தலைசிறந்த நடிகர்கள் இருவர் தங்களுடைய வாழ்த்துக்களை வழங்கியிருக்கிறார்கள். என்னுடைய அன்புக்கும் பாசத்திற்கும் உரிய தம்பி ரஜினிகாந்த் அவர்கள், ஒரு வேண்டுகோளையும் இந்த விழாவிலே வைத்திருக்கின்றார். வேண்டு கோள் வைக்கப்பட வேண்டிய இடங்கள் என்பது எது என்று அவருக்குத் தெரிந்திருந்தாலுங்கூட இந்த வழியாக அந்த வேண்டுகோள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேரட்டும், போய்ச் சேரும் என்ற நம்பிக்கையோடு அவர் இந்த வேண்டுகோளை வைத்திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

இந்த இனிய விழாவில், அந்தப் பிரச்சினை குறித்து நான் ஆழமாகவோ அல்லது விரிவாகவோ இப்பொழுது பேச விரும்பவில்லை. இருந்தாலும், முதலில் விருதுகளும் பரிசுகளும் பெற்ற நம்முடைய கலை உலகத்துக் காவலர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.

## கலை உலகத் தொடர்பு

கடந்த இரண்டு ஆண்டு காலமாக 2005, 2006 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளிலும் வழங்குவதற்கு தவறிப்போன அல்லது தட்டிப்போன அந்த விருது வழங்கும் விழாவை இன்றைக்கு நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக இங்கு வரவேற்புரையாற்றிய தம்பி பரிதி இளம்வழுதி கூட இந்த அரசு கலை உலகத்திற்கு எத்தகைய நன்மைகளைச் செய்தது, சாதனைகளைப் புரிந்திருக்கின்றது என்பதைக் கூறி தம்பி கலைஞானி கமல் அவர்களும் அதைத் தொடர்ந்து சுட்டிக்காட்டினார்.




நான், இன்று நேற்றல்ல; 1950 ஆண்டிலே இருந்து கலை உலகத்திலே தொடர்பு கொண்டவன். என்றைக்கு அந்தத் தொடர்பு நின்றது என்று யாரும் கணக்கிட முடியாது. காரணம், தொடர்ந்து கொண்டே இருக்கின்ற தொடர்பு, இந்தத் தொடர்பு அதனால்தான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஆட்சிச் சக்கரத்தை சுழற்றுகின்ற வாய்ப்பு ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் அந்த வாய்ப்பை தமிழ்நாட்டு மக்கள் எனக்குத் தந்த காலத்திலும் சரி, தராத காலத்திலும் சரி, அந்த நேரங்களில் நான் என்னுடைய கடமை – ஒரு பொறுப்பு கையிலே கொடுக்கப்பட்டாலும், கொடுக்கப்படா விட்டாலும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்கின்ற பொறுப்பு எனக்குத் தரப்பட்ட ஒன்று என்ற அந்த உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக் கின்றேன்.

ரஜினிகாந்த் அவர்கள் நான் எழுதிய மந்திரிகுமாரி படத்தில் இயக்குனருக்கு வேண்டிய குறிப்புக்களை எல்லாம் கூட எழுதி வைத்தேன் என்பதை இங்கே குறிப்பிட்டார். இதை நம்முடைய கமல் போன்ற நண்பர்களும் சில இடங்களிலே குறிப்பிட்டதாக எனக்கு நினைவு. நான் ஒரு காலத்திலே இயக்குனராகக்கூட ஆக வேண்டும் என்று விரும்பாவிட்டாலும்கூட பட அதிபர்கள் விரும்பி அதற்கான வாய்ப்பை எனக்கு நான் விரும்புகின்ற அளவிற்கு தொகை தந்து வழங்குவதற்குத் தயாராக இருந்தபோதும் கூட நல்ல வேளையாக நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் பொதுவாழ்க்கையிலே நான் முழு நேரமும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தப் பணியிலே தொடர்ந்து இருக்கிறேன்.






நம்முடைய செய்தித்துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி இங்கே பேசும்போது, கலை கலைக்காக என்ற உரையை மாற்றி கலை மக்களுக்காக, நல்ல காரியங்களுக்காக சில கொள்கைகளைப் பரப்புவதற்காக என்ற நிலையை திராவிட இயக்கம் தான் உருவாக்கிற்று என்று சொன்னார். இது அப்படியே பதிவாகுமேயானால், நான் இதை மறுக்கவில்லை – மறுக்க முடியாது. ஏனென்றால் அதிலே உண்மையும் இருக்கிறது. ஆனால் அரசியல் கருத்துக்களை, நாட்டுக்குத் தேவையான கருத்துக்களை, மக்களுக்குத் தேவையான கருத்துக்களை, சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை, திராவிட இயக்கத்திற்கு முன்பு கூட கலை உலகத்திலே பலர் புகுத்தி இருக்கிறார்கள்.

பதிபக்தி என்ற ஒரு படமானாலும், தேச பக்தி என்ற ஒரு படமானாலும், திரு.கே.பி.கேசவன் என்ற பழம்பெரும் நடிகர் அந்தக் காலத்திலே எடுத்த படங்கள் நாட்டு பக்தியை, தேச பக்தியை நாட்டு விடுதலைக்காக போராட வேண்டும் என்கின்ற உணர்ச்சியை மக்களிடத்திலே ஏற்படுத்துவதற்கு பயன்பட்ட திரைப்படங்கள் ஆகும்.

**இதிகாசம் – வரலாறு**

கல்கி அவர்கள் எழுதிய பாபநாசம் சிவன் அவர்கள் நடித்த "தியாக பூமி" என்பது கூட வழக்கமான கதையல்ல. வழக்கமாக சொல்லப்படுகின்ற படம் அல்ல. அதுகூட





கொஞ்சம் திசை திரும்பி, தேசத்திற்காக, சமுதாயத்திற்காக, மக்களுக்காக பாடுபட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்திய படம். எனவே பூரண உரிமையை இந்தப்பிரச்சினையிலே நானோ அல்லது என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களோ பெற்று அதற்கான உரிமையைக் கொண்டாடுவதைவிட எங்களுக்கு முன்பே எங்களுக்கு வழிகாட்டியவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தார்கள்; அவர்கள் நாட்டுப்பற்றை படங்களின் மூலமாக வளர்த்தார்கள் என்ற உண்மையை நாம் மறந்துவிட முடியாது. ஏனென்றால் வரலாறு உண்மையை மறைக்கப் பயன்படுமேயானால், சேது சமுத்திரத் திட்டமாக ஆகிவிடும்.

இதிகாசத்தையும் வரலாற்றையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். இதிகாசம் வேறு, வரலாறு வேறு, இதிகாசம் என்பது நாமாக செய்து கொள்கின்ற கற்பனை–சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் – அதாவது மூதறிஞர் இராஜாஜி அவர்கள், இந்திய இதிகாசங்களை அவருடைய நடையிலே எழுதுவதில் வல்லவர். அவருக்கு இராஜரிஷி என்ற பெயரும் உண்டு. மூதறிஞர் என்றும் நாம் அவரை அழைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட இராஜாஜி அவர்கள் "சக்கரவர்த்தி திருமகன்" என்ற ஒரு தொடர் ஓவியத்தை பத்திரிகையிலே எழுதினார். அது புத்தகமாக வந்திருக்கிறது. இன்றைக்கும் அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்தால் அவர் அதில் எழுதிய முன்னுரையிலே என்ன





குறிப்பிட்டிருக்கிறார் என்றால்; "இராமாயணம் என்பது ஒரு இதிகாசமே தவிர சரித்திரம் அல்ல. நான் இதிலே அடையாளம் காட்டுகின்ற இராமன் கடவுள் அவதாரம் அல்ல. இராமன் மனிதன்தான், ஒரு இராஜகுமாரன்தான், நல்லவன், நல்ல காரியங்களைச் செய்தவன், அவனிடத்திலே தெய்வீக அம்சம் என்று சொல்லப்படுகின்ற சில விஷயங்கள் இருந்தாலும்கூட இராமன் செய்ததை கடவுளின் வேலை என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்று நான் அல்ல, நம்முடைய அன்புக்கும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மூதறிஞர் ராஜாஜி அவர்களே எழுதியிருக்கிறார். புத்தகம் இருக்கிறது, தம்பி ரஜினி அவர்களுக்கு சந்தேகம் தேவையில்லை, இருக்காது. நான் சொன்னால் அவர் நம்புவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு வேளை நம்பாவிட்டால் காலையிலே அந்தப் புத்தகத்தை – பக்கத்திலேதான் வீடு – கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எழுதியதைப் பார்க்கலாம்.

## அறிவியக்கம்

எப்படி பெரியாருடைய கருத்துக்கள் முதலிலே சந்தேகத்திற்கு உரியவைகளாக இருந்து இன்றைய தினம் ரஜினி அவர்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டு பரிமாறப்பட்ட பத்துப் பண்டங்களிலே எனக்கு பிடித்த பண்டங்களை நான் சுவைப்பேன், சுவைக்கிறேன் என்று குறிப்பிட்டாரோ, அதைப்போல ராஜாஜி அவர்கள் படைத்த பண்டங்களில் எங்களுக்குப் பிடித்த பண்டம் இராமன் ஒரு ராஜகுமாரனே தவிர, அவதாரப் புருஷன் அல்ல என்று இராஜாஜி குறிப்பிட்டதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? வேண்டாமா? நாங்கள் அனைவரும் இந்த இயக்கத்தை ஒரு அறிவியக்கமாக நீண்ட காலமாக வளர்த்து ஆளாக்கி இன்றைக்கு பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம் சமுதாயத் துறையிலே என்றால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தின் சார்பாக இன்னும் கூட சொல்கிறேன். அவர்கள் குறிப்பிட்டார்கள், சேது சமுத்திரத் திட்டப் பிரச்சினையிலே இந்தியாவிலே இருக்கின்ற தலைவர்களோடு அமர்ந்து பேசி ஒரு நல்ல முடிவிற்கு வாருங்கள் என்று கேட்டார்கள். இது உள்ளபடியே சந்தேகம் எழுந்தால் போக்கலாம். யார் இதை முதன்முதலாக ஆரம்பித்தார்கள் என்பதை என்னுடைய அருமைத் தம்பி ரஜினிகாந்த் அவர்களுக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அவருக்கும் தெரியும்.

## தலைசிறந்த திட்டம்

ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளைக்காரன் காலத்தில் அவர்களுடைய ஆட்சி நடைபெற்றபோது இந்தத் திட்டத்திற்கான கருத்துரை வழங்கப்பட்டு வெள்ளைக்காரன் காலத்தினுடைய பொறியாளர்கள் எல்லாம் விஞ்ஞானிகள் எல்லாம் அதை ஆராய்ந்து அப்பொழுது எட்டுக்கோடி, பத்துக்கோடி என்ற அளவிலே இந்தத் திட்டம் நிறைவேறும் என்ற அளவிலே சிந்திக்கப்பட்டு ஏதோ சில தடங்கல்கள் ஏற்பட்ட காரணத்தால் அது நின்றுபோய் 1963–ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக தமிழகத்திலே இருந்தபோது பண்டித ஜவகர்லால் நேரு பிரதமர் என்ற முறையிலே அதைச் சிந்தித்து பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துச் சொல்லி அது மத்தியிலே ஆராயப்பட்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு என்ன காரணத்தினாலோ அது நின்று விட்டது.

அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் ஒரு முதலமைச்சர் என்ற முறையிலே அவரே அதை ஒரு கடிதம் எழுதி டெல்லிக்குத் தெரிவிக்கலாம் என்று விரும்பினாலும்கூட "எழுச்சி நாள்'' என்ற ஒரு நாளை குறிப்பிட்டு அந்த எழுச்சி நாளில் சேது சமுத்திரத் திட்டம் தமிழர்களுக்குத் தேவை என்ற உணர்வை உருவாக்கி தமிழகம் முழுவதும் எழுச்சிநாள் கொண்டாடப்பட்டு அதற்கு அடுத்து பேரறிஞர் அண்ணா மறைவிற்குப் பிறகு





தி.மு.கழகம் தேர்தலிலே நின்றபோதும் சரி, அ.தி.மு.க தேர்தலிலே நின்றபோதும் சரி, கம்யூனிஸ்ட்டுகள் தேர்தலில் நின்றபோதும் சரி, அவர்கள் வெளியிட்ட ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் தலைசிறந்த திட்டம் சேது சமுத்திரத் திட்டம், அதை எங்களுக்கு உருவாக்கித் தர வேண்டுமென்று மத்திய சர்க்காரை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறோம். அதன் தொடர்ச்சி தான் இது.

இப்படி கேட்டுக் கொண்டு வந்த போது யாரும் இதற்கு தெய்வீக முலாம் பூசவில்லை அல்லது மத வர்ணம் யாரும் இதற்கு அளிக்கவில்லை. இது ஒரு திட்டம். எப்படி பாம்பன் கால்வாய், எப்படி தேம்ஸ் நதி என்றெல்லாம் திட்டங்கள் இருக்கிறதோ, எப்படி பக்ரா நங்கல் திட்டம் இருக்கிறதோ அதைப் போலத் தான் இந்தத் திட்டம். இது ஒரு வழிப்பாதை – ஒரு பாலம் அல்ல – அந்த வழியை பொருளாதாரத்திலே சிக்கனத்தைக் கடைப் பிடிக்கவும், தமிழகம் வளம் பெறவும், வியாபார ரீதியாக உலகத்தோடு பல தொடர்புகளைக் கொள்ளவும் நம்முடைய கடல் வழி சுருக்கமாக, குறுகிய காலத்திலே போய்ச் சேரக் கூடியதாக அமைய வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை யோசித்தோம்.



இதை இன்னும் சொல்லப்போனால், அறிஞர் அண்ணா அவர்களின் அந்த முயற்சிக்குப் பிறகு இடைக்காலத்திலே நாங்கள் கடிதம் மூலமாக நான் முதல் அமைச்சராக இருந்த போது கடிதம் மூலமாக இதை வலியுறுத்தி இருக்கிறேன். டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே வலியுறுத்தியிருக்கிறேன். அதற்குப் பிறகு திரு.வாஜ்பாய் அவர்கள் பிரதமராக இருந்த போது, அவர்தான் இந்தத் திட்டத்தை முதன் முதலாக நீண்ட நாட்களுக்குப் பிறகு அறிவித்து, அதை சென்னையிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில், அண்ணா பிறந்த நாளில் வாஜ்பாய் அவர்களே இதை அறிவித்து, அந்தத் திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும் என்று அவரும் சொன்னார்.

## ரூ.2,400 கோடி மதிப்பில் திட்டம்

அதற்குப் பிறகு பா.ஜ.க. வைச் சேர்ந்த டெல்லியிலே இருந்த அமைச்சர்கள் எல்லாம் – என்னுடைய தம்பி திருநாவுக்கரசு உட்பட அந்தத் திட்டத்தை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு சேது சமுத்திரத் திட்டத்திற்கான வழிமுறைகள் எல்லாம் செய்யப்பட்டன. இடையிலே வந்த தேர்தலில் பா.ஜ.க. ஆட்சிக்கு வர இயலவில்லை. நம்முடைய சோனியா காந்தி அவர்கள் தலைமையில் ஒரு வழி காட்டுதலோடு திரு.மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சி இங்கே நடைபெறுகிறது.

நாம் தொடர்ந்து கேட்ட நிலையில் அதைக் கேட்டோம். அவர்களும் அதை ஆலோசித்து, அதற்கான அனுமதியைத் தந்து, நம்முடைய தம்பி டி.ஆர். பாலு அவர்களிடம் அந்தத் துறையின் அமைச்சர் என்ற முறையிலே பொறுப்பை ஒப்படைத்து ஏறத்தாழ இரண்டாயிரத்து நானூறு கோடி ரூபாய் மதிப்பில் திட்டத்தை அறிவித்து முக்கால்



பகுதி பணி முடிந்துவிட்டது. இந்த நிலையில் தம்பி ரஜினிக்கு நன்றாகத் தெரியும். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பத்திரிகை படிப்பவர்களுக்கெல்லாம் தெரியும். வரலாற்றைப் படிப்பவர்களுக்கும் தெரியும். இந்திய அரசின் திட்டங்களைப் பற்றி தெரிந்து கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் தெரியும். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் என்ற நிலையிலே இந்த ராமர் பிரச்சினையை யார் முதன் முதலாக எழுப்பினார்கள் என்றால், நாம் அல்ல. இது ராமர் கட்டிய பாலத்தை இடிக்கிறார்கள் என்று சொல்லி, இந்தத் திட்டத்தையே குலைப்பதற்காக சில பேர் இந்தத் திட்டம் நமக்கு வரக் கூடாது என்பதற்காக, தமிழ்நாட்டிற்கு வரக் கூடாது, வந்தால் தமிழ்நாடு வளர்ந்து விடும், பொருளாதாரத் துறையில் எல்லாத் துறையிலும் வளர்ந்து விடும், தமிழ்நாடு என்ற மாநிலம் வளர்ந்தால், மற்ற மாநிலங்கள் எல்லாம் குறிப்பாக வட மாநிலங்களுக்கு இதனால் ஏதோ ஆபத்து ஏற்படும் என்று தவறாகக் கருதி, இதைக் கெடுப்பதற்காக சில யோசனைகளைச் செய்து இதற்கு ராமரைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். ராமரிடத்திலே எங்களுக்கு எந்தவிதமான விரோதமும் கிடையாது. ராமருக்கும் எங்களுக்கும் இடையில் தனிப்பட்ட விரோதம் கிடையாது. ராமரை நாங்கள் வெறுப்பவர்கள் அல்ல. எந்த அவதார புருஷர்களாக இருந்தாலும், அவர்கள் அவதார புருஷர்களாக இருந்து நன்மைகளைச் செய்திருந்தால், அந்த நன்மைகளைப் பாராட்டக் கூடியவர்கள்தான் நாங்கள். ராமர் என்பதற்காக ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று கூற மாட்டோம். கிருஷ்ணா என்பதற்காக கிருஷ்ணா நதி நீரை வேண்டாமென்று சொல்லி விட்டோமா? கிருஷ்ணா நதிநீர் எங்களுக்கு வேண்டும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடியுங்கள் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகனும், தம்பி மு.க.ஸ்டாலினும் தூதே போய் விட்டு வந்தார்கள். ஆந்திராவிலே இருக்கின்ற சாய்பாபா அவர்களிடத்தில் சென்று கிருஷ்ணா நதி திட்டத்தை நிறைவேற்றிக் கொடுங்கள் என்று சொல்லி, இங்கேயுள்ள அமைச்சர்களை அங்கே போகச் சொல்லி, அவரும் நிறைவேற்றுவதாகச் சொல்லி என்னுடைய இல்லத்திற்கே வந்து நிறைவேற்றித் தருகிறேன், பயப்படாதீர்கள் என்று கூறி விட்டுப்போய் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், நான் அவரிடத்திலே கிருஷ்ணா என்று திட்டத்தின் பெயர் இருக்கக் கூடாது என்று சொன்னேனா? நீங்கள் கிருஷ்ணா என்று மாத்திரம் அல்ல, ராமகிருஷ்ணா திட்டம் என்றே வைத்துக் கொள்ளுங்கள், ராமனையும் சேர்த்து.

இப்போது என்ன சொன்னேன்? என்ன சொல்கிறேன்? சேது சமுத்திரத் திட்டம் என்பதில் சேது என்கின்ற பெயர் உங்களுக்குப் பிடிக்காவிட்டால், சேது மன்னர்களின் பெயரால்



அமைந்த ஒரு பகுதி அது, சேது மன்னர்கள் ஆண்ட பகுதி அது, நம்முடைய கமல் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அவருடைய பரமக்குடி எல்லாம் அந்தச் சேது பூமியைச் சேர்ந்த இடம் ஆகும். அப்படிப்பட்ட சேது பூமிக்கு மன்னர்களாக இருந்தவர்கள் பெயரால்தான் சேது சமுத்திரம் என்ற அந்தப் பெயர் உருவாயிற்று. அந்தச் சேது திட்டத்தைதான் நாம் நிறைவேற்ற



வேண்டுமென்று சொல்கிறாமே அல்லாமல், அந்தப் பெயர் வைக்கக் கூடாது என்று சொல்லவில்லை. ஆயிரம் வருடமோ, இரண்டாயிரம் வருடமோ, வெள்ளைக்காரன் காலத்திலோ அல்லது அதற்குப் பிறகோ அதற்கு ராமர் பாலம் என்று பெயர் இருந்திருக்குமேயானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், உறுதியாகச் சொல்கிறேன் அந்தத் திட்டத்தை அந்தப் பெயரால் நிறைவேற்றுங்கள் என்று சொல்லியிருப்பேனே அல்லாமல், அந்தப் பெயர் வேண்டாம் என்று சொல்கின்ற முட்டாள் அல்ல நான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆக எங்களுக்கு சேது சமுத்திரத் திட்டம் தேவை. அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திற்கு வளம் தேவை. வாழ்வு தேவை. தமிழர்கள் வெளி நாட்டோடு தொடர்பு கொள்ள வசதிகள் வாய்ப்புகள் தேவை. அதற்காகத் தான் அந்தத் திட்டத்தை நாம் கோருகிறோம். அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எனக்கு ஒரு யோசனையை தம்பி ரஜினி சொன்னார். என்னை விட அதிகமாக வடநாட்டிலே சுற்றுப் பயணம் செய்யக் கூடிய வாய்ப்பும் வசதியும் படைத்தவர் அவர். அவர் நினைத்தால் இமயமலை வரை சென்று சாமியார்களை யெல்லாம் சந்திக்கக் கூடிய வாய்ப்பு அவருக்கு உண்டு. எனவே நீங்கள் அங்கே செல்லும் போது இதைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லுங்கள். "கருணாநிதி நாத்திகன்தான், அது வேறு விஷயம். ஆனால் கருணாநிதி ராமர் என்ற அந்தப் பெயரை வெறுப்பவனல்ல. என்னுடைய தலைவர் பெரியாருக்கு பெயரே ராமசாமி. ஆகவே ராமர் என்ற பெயரை வெறுப்பவனல்ல" என்று இந்த உண்மையை ரஜினி போன்றவர்கள் அவர்களுடைய செல்வாக்கோடு அங்குள்ள சாமியார்களுக் கெல்லாம் சொல்லி, அந்தச் சாமியார்கள் திருந்தினால் நாடு திருந்தும் என்பதை இந்த விழாவினுடைய செய்தியாக நான் தம்பி ரஜினி அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் எனக்கொரு வேண்டுகோளை விடுத்தார்கள். நான் அவர்களுக்கு இந்த வேண்டுகோள் விடுக்கிறேன். இது அண்ணன், தம்பிக்குள் ஒரு கருத்துப் பரிமாற்றம். இரண்டு பேரும் சேர்த்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருக்கிறோம். நான் பரிமாறியதை அவர் மனதிலே இருத்தி, அவரும் சேர்ந்து இந்தத் திட்டத்திற்கு உறுதுணையாக இதனால் ஏற்படக் கூடிய நன்மைகளை – இதிலே மதம் குறுக்கிடக்கூடாது, சாதி குறுக்கிடக் கூடாது, இதிலே கடவுள் தன்மை குறுக்கிடக் கூடாது. இதில் இதிகாசம் குறுக்கிடக்கூடாது. இதிலே குறுக்கிட வேண்டியதெல்லாம் நம்முடைய நல்வாழ்வு, எதிர்காலம், வருங்காலம் என்பதைப் பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும் என்ற அந்த உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறக் கூடிய அந்தப் பொறுப்பை – தம்பி ரஜினி ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே நான் இப்போது இங்கே அவருக்கு விருது மட்டும் வழங்கவில்லை, இந்த வேண்டுகோளையும் வழங்கி விடைபெறுகிறேன்.

* * *

# ஏழை - எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் பல மடங்கு அதிகம் வழங்கிய ஆட்சி



**புதுக்கோட்டையில் 28.09.2007 அன்று ஐந்தாவது கட்டமாக இலவசமாக நிலம் மற்றும் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த மகத்தான விழா மக்கள் பணியாற்றுகின்ற நம்முடைய பெரும் பணியில் ஒரு பணியாக நாமெல்லாம் கலந்து கொண்டு மக்களைச் சந்தித்து அவர்களுடைய தேவையை உணர்ந்து அவற்றை வழங்குகின்ற நிகழ்ச்சியாகும். இந்த நேரத்தில் புதுக்கோட்டையில் வெயில் ஒரு புறம் கொளுத்தினாலுங்கூட, பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தப் பந்தல் வழிய வழிய அமர்ந்திருக்கின்ற காட்சியினைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன், பாராட்டுகின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள், அவர்களுக்குத் துணையாக தோழமைக் கட்சிகளின் நண்பர்கள், மேலும்



துணையாக ஆளும் கட்சியின் நண்பர்கள் இவர்களெல்லாம் ஒருங்கிணைந்து ஒரு இரண்டு நாள் அல்லது மூன்று நாள் அவகாசத்தில் மாநில மாநாடு போன்ற விழாவை இங்கே நடத்தியிருக்கின்ற இந்த மாண்பினைக் கண்டு நான் உள்ளபடியே பெருமையடைகிறேன். ஒரு புறத்திலே பொறாமையும் அடைகிறேன். பொறாமை அடைவதற்குக் காரணம் இவ்வளவு ஆற்றலையும், இவ்வளவு நேர்த்தியாக காரியம் ஆற்றுகின்ற திறமையையும் பெற்றிருக்கின்ற நீங்கள் இன்னமும் நல்ல முறையிலே பணியாற்றலாமே. அப்படி பணியாற்றக்கூடிய உங்களிடத்திலே நான் இதை எதிர்பார்ப்பது தவறல்லவே என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

மூன்று இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது என்று கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டில் தலைமைச் செயலகத்தில் ஒரு முடிவெடுத்து அதை அறிவித்த போது தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் குறிப்பாக நம்முடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்னும் சிறப்பாக அந்த மனைகள் வழங்க வேண்டும் என்பதற்காகப் பாடு பட்டுக் கொண்டிருக்கின்ற இடதுசாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள். உடனடியாக இந்த 3 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். அதுமாத்திரமல்ல, சொன்னபடி செய்வோமோ இல்லையோ என்ற சந்தேகமும் அவர்களுக்கு ஏற்பட்டது.

நம்முடைய நண்பர் இராஜசேகரனுக்கு வேண்டுமானால் ஏற்படாமல் இருக்கலாம். வேறு சிலருக்கு ஏற்பட்ட காரணத்தால் அதை ஞாபகப்படுத்தும் விதத்திலே பல ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தி நம்முடைய கவனத்தையும் கவர்ந்தார்கள். அத்தகைய தூண்டுதலான நிகழ்வுகளை நடத்தியதன் காரணமாக நம்முடைய அரசும், அரசுத் துறையிலே உள்ள அதிகாரிகளும், என்னுடைய வேண்டுகோளின்படி மேலும் மேலும் முயன்று, அயராது பாடுபட்டு இப்பொழுது மூன்று இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களின் எண்ணிக்கையை நெருங்குகின்ற அளவிற்கு தங்களுடைய பணியை வெற்றிகரமாக ஆற்றியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்**

பொதுவாக தமிழகத்திலே கழக அரசு அமைகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும், வீடில்லாத ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டத்திற்கு தனி உரிமை அளிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றது. **1967, 1975**ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அண்ணா தலைமையிலே அமைந்து நடைபெற்ற அந்த காலகட்டத்தில், அதாவது கழக அரசின் பணியினால் **5** இலட்சத்து **3** ஆயிரத்து **697** பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் பிறகு 1989 – 1990 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 95 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளன.

1996 – 1997 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 10 ஆயிரம் ஏழைகளுக்கு இந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1997–1998 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 50 ஆயிரத்து 800 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 1998–1999 ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 27 ஆயிரத்து 416 ஏழை மக்களுக்கு இந்த இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 2000–2001ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 63 ஆயிரத்து 829 ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1996–2001ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் மொத்தம் 9 இலட்சத்து 50 ஆயிரத்து 400 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதை நான் சொல்வதற்குக் காரணம், இவற்றை நீங்கள் கணக்கிலே வைத்துக் கொண்டு, ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 2001 – 2006 இந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாக்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 60 ஆயிரம் தான்.

நான் இங்கு எடுத்துச்சொன்ன அந்தக் கணக்கையும், இந்தக் கணக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தி.மு.க. ஆட்சியிலேதான் ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அ.தி.மு.க. ஆட்சியை விட பலமடங்கு அதிமாக வழங்கப்பட்டிருக்கின்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

இது ஏதோ புள்ளி விவரங்களைச் சொல்லி அது பெரிதா, இது பெரிதா, அது பெருமையுடையதா – அது சிறப்புடையதா? இது பெருமையுடையதா – இது சிறப்புடையதா – என்ற ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக் காட்டுவதற்காக நான் இங்கே வரவில்லை.

புதுக்கோட்டைக்கு நான் வருவது என்பது இது முதல் தடவையல்ல. புதுக்கோட்டைக்கு நான் என்னுடைய இளமைக் காலத்திலிருந்து எத்தனை முறை வந்திருக்கிறேன் என்பதைச் சொல்லக்கூடிய அளவில் புதுக்கோட்டை வட்டாரத்திலே மிகச் சிலர் தான் இன்றைக்கு இருக்க முடியும். அத்தனை முறை இந்த மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். புதுக்கோட்டை நகரத்திலே பேசியிருக்கிறேன். யார் யார் இங்கு வாழ்ந்தார்கள், யார் யார் இந்த இயக்கத்தைக் கட்டி காத்தார்கள், யார் யார் இங்கு மக்கள் தொண்டர்களாகத் திகழ்ந்தார்கள், யார் யார் எனக்கு நண்பர்களாக விளங்கினார்கள், யார் யார் மூலம் இந்த வட்டாரத்திலே என்னுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்ல அவர்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டேன். அவர்கள் எப்படி என்னை பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதையெல்லாம் நான் விளக்கிச் சொல்ல நேரம் போதாது.

ஆனால், முதல் முதலாக நான் புதுக்கோட்டைக்கு வந்தவுடன் ஏதோ இன்னொரு கோட்டையைப் பிடிப்பதற்காக வந்தேன் என்று சொல்லிவிட்டு உங்களை சந்திக்கவில்லை. நான் புதுக்கோட்டை வருவதாகச் சொல்வதற்கு முன்பு பல கோட்டைகளுக்குச் சென்று வந்தவன்.

பல கோட்டைகளில் ஒன்று; பாளையங்கோட்டை, இப்படி பல கோட்டைகளுக்கு, எங்கெங்கே சித்திரவதை செய்யப்பட வேண்டுமோ, அந்தக் கோட்டைகளுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டவன். இப்படி கோட்டைகள் பலவற்றைக் கடந்து, காராக்கிரகங்களைச் சந்தித்து, தியாகக்குண்டங்களைத் தாண்டி அதற்குப் பிறகுதான் புதுக்கோட்டைக்கு நான் அமைச்சராக வந்தேன். இப்பொழுது 5 ஆவது முறையாக முதலமைச்சராக வந்திருக்கிறேன் என்றால், நான் கடந்து வந்த பாதை, என்னைப் பற்றி மாத்திரம் நினைக்காமல், புதுக்கோட்டை மாவட்ட மக்களையெல்லாம் எப்படி மன நிறைவு கொள்ளச் செய்தேன், அவர்களுடைய தேவைகளை எந்த அளவிற்கு நிறைவு செய்தேன் என்பதை நம்முடைய தோழமைக் கட்சி நண்பர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் இங்கே எடுத்து சொல்லியிருக்கின்றார்கள்.

### சேது சமுத்திரத் திட்டம்

இந்த வட்டாரத்திலே தி.மு.க. ஆட்சியின் காரணமாக என்னென்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன, என்னென்ன சாதனைகள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் எனக்கு அவர்கள் நினைவூட்டுகின்ற அளவிற்கு இங்கே பேசிவிட்டு, இன்னமும் சிலவற்றை கோரிக்கைகளாக வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளில் ஒன்றுதான் கோதையாறு திட்டம் – சுமார் 300 கோடி ரூபாய் அளவில் திட்டத்தை அறிவித்தீர்களே எப்போது கொண்டு வருவீர்கள் என்று அவர் கேட்டார். நான் அறிவித்ததை மறுபடியும் நிறைவேற்றாமல் இருக்கவில்லை என்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது.

அறிவித்தவைகள், அறிவிக்கப்பட்ட அடுத்த ஆண்டிலே நிறைவேறாவிட்டாலும் கூட 5 ஆண்டு காலத்திற்குள்ளே அவைகள் நிறைவேறின என்பதற்கான சான்றுகள் நூற்றுக்கணக்கிலே உண்டு. அதிலே ஒன்றுதான் இங்கே நம்முடைய தம்பி எல்.கணேசன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல சேது சமுத்திரத் திட்டம்.

சேது சமுத்திரத் திட்டத்தை நூறாண்டு காலமாகத் தமிழர்கள் கேட்டு வருகிறார்கள் தமிழ்நாட்டு மக்கள் கேட்டு வருகின்றனர். அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே இருந்த அரசுகள் எல்லாம் முயற்சித்தன. ஆனால் நிறைவேறவில்லை. நிறைவேற முடியாமல் பல தடங்கல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அதை நிறைவேற்றக்கூடிய நல்ல எண்ணம் கொண்ட ஒரு அரசு மத்தியிலே அமைந்தது. நாமும் அந்த அரசுக்குத் தோழமைக் கட்சியாக அமைந்தோம். அப்படி அமைந்த காரணத்தால் திருமதி. சோனியாகாந்தி அவர்களைச் சந்தித்து, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்து, வாதாடி அவர்களிடத்திலே வலியுறுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எடுத்துச் சொல்லி அவர்களும் அதற்கான அனுமதியை அளித்தார்கள்.

இந்த அனுமதியை அளிப்பதற்கு முன்பு, ஏற்கெனவே மத்தியிலே ஆட்சியிலே இருந்த நம்முடைய அன்புக்குரிய நண்பர், பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்கள் அதற்கான அனுமதியை அளித்தார். சேது சமுத்திரத் திட்டத்திற்கான அனுமதியை முதலில் அளித்ததே வாஜ்பாய்தான்.

## செம்மொழித் தகுதி

அனுமதியை அளித்து இந்த வழியாகத்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றப்பட வேண்டும். இந்த முறையிலேதான் நிறைவேற்றப்பட வேண்டும் என்று திட்டம் வகுத்துக் கொடுத்ததும் வாஜ்பாய்தான். பா.ஜ.க. ஆட்சியிலேதான் இந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு அதற்கான வழிமுறைகளெல்லாம் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க. மத்தியிலே ஆட்சிக்கு வரமுடியாமல் தோல்வியுற்று, மன்மோகன் சிங் அவர்களுடைய தலைமையிலே நம்முடைய கூட்டணி ஆட்சி அங்கே அமைந்தது. அமைந்தவுடன் நான் அந்த ஆட்சிக்கு நினைவூட்டியது இரண்டு; ஒன்று – உணர்வுபூர்வமானது. மற்றொன்று, நம்முடைய வாழ்வு பூர்வமானது. உணர்வு பூர்வமானதுதான், எங்களுடைய மொழிக்கு "செம்மொழி" என்ற அந்தத் தகுதியைத் தரவேண்டும் என்பது. ஏனென்றால் ஹீப்ரு, லத்தீன் போன்ற மொழிகளெல்லாம் உலகத்திலே செம்மொழி அந்தஸ்தைப் பெற்றிருக்கும்போது, எல்லா வளமும் பொருந்திய இலக்கிய நயம் பொருந்திய, இலக்கண வளம் பொருந்திய தமிழுக்குச் செம்மொழி என்ற அந்தஸ்து இல்லை, தகுதியில்லை. அது வேண்டும் என்று வலியுறுத்தினோம். அதை நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வலியுறுத்தி பாடுபட்டவர் யார் என்பதும், அவருடைய பெயர் சூரிய நாராயண சாஸ்திரி என்பது தெரிந்திருந்தும் கூட, சாஸ்திரி சொன்னால் என்ன, சர்மா



சொன்னால் என்ன – தமிழ் செம்மொழி ஆகவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, நாங்கள் தொடர்ந்து இதைச் சொல்லுகிறோம் என்று சொல்லி, அந்தக் கருத்துக்கு வலுவேற்றி இப்பொழுது அதைச் செம்மொழி என்று அறிவித்தது மாத்திரமல்ல, அதற்கான ஒரு செயலாற்றுக் குழுவையும் சென்னையிலே அமைத்து அதனுடைய தொடக்க விழாவிற்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் வந்தார் என்பதும் நம்முடைய எண்ணம் எந்த வகையிலே ஈடேறியது என்பதும் நீங்கள் அறிந்த ஒன்றாகும்.

அதைப்போலத்தான் நம்முடைய வாழ்வாதாரத்திற்கு, நம்முடைய பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஒரு காலத்திலே திராவிடத்தினுடைய வணிகத் தொடர்பும் உலகெல்லாம் பரவியிருந்தது. பெருமையோடு சொல்லிக்கொள்வோம். நம்முடைய தமிழ்நாட்டு முத்துக்களை ''கிளியோபாட்ரா அவள் குடிக்கின்ற சாராயத்தில் போட்டு கலக்கிக் குடித்தாள்'' என்றெல்லாம் நம்முடைய முத்து வியாபாரத்தில் உள்ள பெருமையை அந்தக் காலத்திலேயே நாம் பேசியிருக்கின்றோம். அப்படிப்பட்ட உலகத் தொடர்புக்கு வழிவகுக்கக்கூடிய வாணிப வியாபாரத்திலே முன்னேற்றம், பொருளாதாரத்திலே வலிவு இவ்வளவும் உண்டாக்கக்கூடிய ஒரு திட்டம்தான் சேது சமுத்திரத் திட்டம். தமிழன் என்றைக்கும் தலைதாழாமல் பிறரை எதிர்பார்க்காமல் வாழ வைக்கின்ற திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் அளவிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு ஒத்துக் கொண்டு அதற்கான கால்கோள்விழா மதுரை மாநகரத்திலே நடைபெற்றது. சோனியா காந்தி அவர்கள் வந்திருந்தார்கள், மன்மோகன் சிங் வந்திருந்தார். தோழமைக் கட்சிகளின் தலைவர்களெல்லாம் நான் உட்பட அத்தனை பேரும் கலந்துகொண்ட பெருவிழா, திருவிழாவாக நடைபெற்றது. அதற்கு பிறகு அந்த முயற்சி மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலு அவர்கள் மூலமாகத் தொடர்ந்து, அது முடியும் தருவாயிலே, விரைவிலே அது முடியப்போகிறது என்று எல்லோரும் முகமலர்ந்திருக்கின்ற நேரத்தில் திடீரென்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்று சிலர் கொடி பிடிக்கிறார்கள். தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டு அரசியல் எந்த அளவிற்கு தமிழன் தன்னையே அடமானம் வைத்துவிட்டு தன்னையே பலிகொடுத்து விட்டு, தமிழ்ச் சமுதாயத்தையே காவு கொடுத்துவிட்டு நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற அரசியலா? அல்லவா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

**எழுச்சி நாள்**

சேது சமுத்திரத் திட்டத்தை அறிஞர் அண்ணா தொடங்கினார். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற குரலை முதலில் தொடங்கியவர் அறிஞர் அண்ணா. எப்போது? 1967ல் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகம் முழுவதும் ''எழுச்சி நாள்'' கொண்டாடினார்– சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்கம், சேலம் இரும்புத் தொழிற்சாலை இவைகளையெல்லாம் இணைத்து தமிழ்நாடு முழுவதும் ''எழுச்சி நாள்'' கொண்டாடியவர் முதலமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள். முதலமைச்சர், மத்திய அமைச்சரைப் பார்த்து வலியுறுத்தி கோரிக்கை வைக்கலாமா, மக்களிடத்திலே போய் இதைப் பிரச்சாரம் செய்யலாமா, முதலமைச்சராக இருப்பவர் தன்னுடைய மாநிலத்திற்கு வேண்டியவைகளைப் போராடி பெறலாமா என்றெல்லாம் கேட்கிறார்களே அவர்களுக்குத் தருகின்ற பதில்தான், அன்றைக்கு முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த அண்ணா அவர்கள். பொறுப்பேற்ற 3 மாத காலத்திற்கெல்லாம் தமிழகத்திற்கு இன்னின்ன வளமான திட்டங்கள் தேவை என்று கொண்டாடிய நாள்தான் ''எழுச்சி நாள்'' என்பதை அவர்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி கொண்டாடப்பட்ட அந்த நாள் உடனடியாக வெற்றிகரமாக அமையாவிட்டாலும் கூட நாளாவட்டத்தில் நாம் வலியுறுத்தி வலியுறுத்தி இறுதியாக அந்தத் திட்டம் நிறைவேறுகின்ற தருவாயில் அப்பொழுது யார் யார் நம்முடைய அண்ணாவோடு சேர்ந்து இந்தத் திட்டம் தேவைதான் என்று சொன்னார்களோ, அவர்களெல்லாம் இந்தத் திட்டத்திற்கு எதிராக இன்றைக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருப்பதை நீங்கள் காண்கின்றீர்கள்.

நான் அரசியல் அனுபவம் உள்ளவர்களைக் கேட்கிறேன் அல்லது அரசியலை அறிந்து கொள்ள வேண்டுமென்று கருதுகின்ற இளைஞர்களைக் கேட்கின்றேன். படித்த வாலிபர்களைக் கேட்கிறேன். உள்ளபடியே தமிழ்நாட்டின் மீது அன்பும், அக்கறையும், ஆர்வமும் உள்ளவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த தேர்தல் அதற்கு முந்தைய தேர்தல் இந்த இரண்டு தேர்தலிலும் வெளியிடப்பட்ட கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை வாங்கிப் படித்துப் பாருங்கள். தி.மு.க தேர்தல் அறிக்கையானாலும், பா.ம.க.வின் தேர்தல் அறிக்கையானாலும், அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையானாலும் இந்தத் தேர்தல் அறிக்கைகளையெல்லாம் வாங்கி தயவுசெய்து



படித்துப் பாருங்கள். அதில் என்ன இருக்கிறது? சேது சமுத்திரத் திட்டத்தை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்ற வாதாடுவோம், போராடுவோம், வலியுறுத்துவோம், அது நிறைவேறப் பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறோம். நம்மைப் போலவேதான்; அ.தி.மு.க. அந்தக் கட்சியினுடைய தலைமையும் வெளியிட்டிருக்கின்ற தேர்தல் அறிக்கையில் “இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலே உள்ள “ஆடம்ஸ் பிரிட்ஜ்” பகுதியில் கப்பல் போக்குவரத்திற்குத் தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் இவற்றையெல்லாம் வெட்டி, அகற்றி, ஆழப்படுத்திவிட்டு கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம்”.

சொன்னது யார் தெரியுமா? இன்றைக்கு அதை “ராமர் பாலம்” என்று சொல்லி அதைத் தடுக்கின்ற அம்மையார் தான் அன்றைக்கு அவர் கைப்பட எழுதிய தேர்தல் அறிக்கையில் சொல்லுகிறார். இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலே உள்ள “ஆடம்ஸ் பாலம்” பகுதியில் கப்பல் போக்குவரத்திற்கு தடையாக உள்ள மணல் மேடுகள், பாறைகள் இவைகளையெல்லாம் வெட்டி, அகற்றி, ஆழப்படுத்தி கால்வாய் அமைப்பதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் தலையாய நோக்கம். சொன்னது யார்? அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே ஜெயலலிதா வெளியிட்டிருக்கிறாரா இல்லையா? அதைத்தான் தொடர்ந்து நாம் மாத்திரமல்ல, எல்லாக் கட்சிகளும் சொல்லி வருகின்றார்கள். அவைகளையெல்லாம் அகற்றிவிட்டு அந்த திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் சொல்லி வருகின்றார்கள். சொல்லி வந்திருக்கின்றார்கள். ஆனால் இவர்கள் மாத்திரம் இப்பொழுது தங்களுடைய தேர்தல் அறிக்கையையே மறந்துவிட்டு – மன்னிக்க வேண்டும் –அவர்கள் மறந்துவிட வில்லை மக்கள் மறந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு நாம் கேட்கிறோமாம், மத்திய சர்க்கார் செய்கிறதாம், அதனால் நமக்குப் பெயர் வந்துவிடுமாம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறியது என்று ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி உலகத்திற்குக் கிடைத்தால், அடுத்து வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றுவிடுவோமாம். “சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிய சோனியா காந்தி அவர்களுக்கு வாக்களியுங்கள்,” “சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிய மத்தியிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய வெற்றிக்கு உதவுங்கள்” என்று சொல்லுவோமாம். அதனால் சேது சமுத்திரத் திட்டம் வேண்டாமாம். எவ்வளவு நல்ல எண்ணம் (?) பாருங்கள். எப்படிப்பட்டவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே இந்த மாபெரும் திட்டத்தை நம்முடைய தமிழகமும் குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், சிறப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் தென்னகம் பயன்பெறக்கூடிய திட்டத்தை, போக்குவரத்து சிரமத்தைக் குறைக்கக் கூடிய திட்டத்தை, பொருளாதார வளத்தை மேலும் கொழிக்க வைக்கக்கூடிய திட்டத்தை, வேண்டாம் என்று இன்றைக்குச் சொல்லுவதற்கு காரணம்–அந்தப் பெயரும் புகழும் எங்கே கருணாநிதிக்கு வந்துவிடுமோ, சோனியாகாந்திக்கு வந்துவிடுமோ, மன்மோகன் சிங்கிற்கு வந்துவிடுமோ, இந்தத் தோழமைக் கட்சிகளுக்கெல்லாம் வந்துவிடுமோ என்கின்ற அச்சத்திலேதான் திட்டமே வேண்டாம் என்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலே எந்தத் திட்டத்திற்காக வாதாடினார்களோ, எந்தத் திட்டத்திற்காக அவர்கள் முரசு கொட்டினார்களோ, அந்தத் திட்டம் இன்றைக்கு வேண்டாம் என்று சொல்லுகின்ற அளவிற்கு தேவையில்லாமல் ராமரைக் கொண்டுபோய் நிறுத்துகிறார்கள். நீங்கள்தான் பாவம் செய்கிறீர்கள், அந்தப் பாவத்திற்கு துணையாக ஏன் ராமரை இழுக்கிறீர்கள், அவர் பாவம் என்ன செய்தார் உங்களுக்கு, இது ராமர் கட்டிய பாலம், அதனால் இடிக்கக்கூடாது என்கிறார்கள்– யார் சொன்னது ராமர் கட்டிய பாலம் என்று நீங்கள் தேர்தல் அறிக்கையிலே போன தேர்தலிலும், அதற்கு முந்தைய தேர்தலிலும்– அந்தத் தேர்தல் அறிக்கைகளிலே ராமர் பாலம் பகுதியில் சேது சமுத்திரத் திட்டம் வேண்டாம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களா? அப்படி குறிப்பிட்டிருந்தால் நாளைக்கே கொண்டு வந்து காட்டுங்கள். நான் அரசியலை விட்டு விலகத் தயாராக இருக்கிறேன்.

நாங்கள் சேது சமுத்திரத் திட்டத்தை அங்கீகரிக்கவில்லை, அனுமதிக்கவில்லை என்று வாஜ்பாய் சொல்லட்டும். நான் அத்வானியிடத்திலே கேட்கவில்லை, ஏனென்றால் நான் வாஜ்பாயை நம்புகிறவன். அவர் யோக்கியர். வாஜ்பாயைப் பொருத்தவரையில் நிதானமான நண்பர், வாஜ்பாயை பொருத்தவரையில் சத்தியசீலர். இன்றைக்கும் அவருக்கும் எனக்கும் சில மன கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கூட, அவருடைய மனிதாபிமானத்தை, அவருடைய பெருந்தன்மையை, அவருடைய அரசியல் நாகரிகத்தை மதிப்பவன். நான் அத்வானி சொல்வதற்காகக் கேட்கமாட்டேன். இது ராமர்தான் கட்டினார் என்று வாஜ்பாய் சொல்லட்டும். நாங்கள் அன்றைக்கு இதை அனுமதித்தபோது, நாங்கள் தெரிந்துதான் அனுமதித்தோம் என்று சொல்கிறாரா, இல்லை தெரியாமல் அனுமதித்துவிட்டோம் என்று வாஜ்பாய் சொல்கிறாரா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, வேண்டுமென்றே ஒரு நல்ல காரியத்தை மக்களுக்காக, நாட்டுக்காக, நம்முடைய எதிர்கால வளங்களுக்காக செய்யப்படுகின்ற பெரிய திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அந்தத் திட்டத்தையே அழித்து ஒழிப்பதற்கு எதிர்க்கட்சியிலே உள்ள சிலபேர் ஆண்டு அனுபவித்துவிட்டு இன்று ஆட்சி கைவிட்டு போய்விட்டதே என்று ஆலாய் பறந்துகொண்டு இருக்கிறார்களே அவர்களுக்கு–



துடித்து துவளுகிறார்கள் ஐயோ, பேரும் புகழும் இவர்களுக்கு போய்விடுமே என்று—சேது சமுத்திரத் திட்டம் என்பது யாருக்குப் பெயர் வருவது, யாருக்குப் புகழ் வருவது என்ற அந்தக் கேள்வியின் அடிப்படையிலே இன்றைக்கு பார்க்கப்படுகின்ற ஒன்றாக இருக்கிறதே அல்லாமல் தி.மு.கழகமோ அல்லது இடதுசாரி கட்சிகளோ அல்லது காங்கிரஸ் இயக்கமோ அல்லது கூட்டணியில் உள்ள கட்சிகளோ எண்ணுவதைப் போல இது நாட்டு நலனுக்காக எதிர்கால நன்மைக்காக, நம்முடைய பொருளாதார வளங்களுக்காக, உலகத்திலே இருக்கின்ற நாடுகளோடு தொடர்பு கொள்வதற்காக இந்தத் திட்டம் என்று நாம் எண்ணுவதைப்போல அவர்கள் எண்ணவில்லை. நமக்கு பேரும் புகழும் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தத் திட்டத்தை உருக்குலைக்க எண்ணுகின்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகின்றேன். தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகளல்ல. அவர்கள் இவர்களுடைய பேச்சைக் கேட்டு இந்தத் திட்டத்தை எதிர்க்கக்கூடியவர்கள் அல்ல.

புதுக்கோட்டைக்கு நான் புதியவனல்ல. தொடக்கத்தில் சொன்னதைப் போல புதுக்கோட்டையிலே எனக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு. அதிலே இருப்போர் சிலர், இறந்தோர் பலர். நாம் இழந்தோர் பலர். அவர்கள் எல்லாம் இருந்து இவ்வளவு பெரிய மகத்தான கூட்டத்தை நாம் சந்திக்கின்ற ஒரு சூழ்நிலை இல்லையே என்ற வருத்தம் இருந்தாலுங்கூட, புதுக்கோட்டைக்கு இன்றல்ல, இன்னும் பல முறை வருவேன்.

ஒன்று சொல்கிறேன். எந்த இடத்திற்கு வந்தாலும், எந்த இடத்திற்குச் சென்றாலும், நான் பழைமையை மறப்பவனல்ல. புதுமையைக் கண்டு வியப்பவனுமல்ல. பழைமை தான் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. பழைய நிகழ்ச்சிகள் தான் பழைய நண்பர்கள் தான் அவர்கள் ஊட்டிய உணர்வுகள் தான் இந்தக் கருணாநிதி என்கிற உருவம் என்பதை நீங்கள் மறந்து விட மாட்டீர்கள், நானும் மறந்து விடவில்லை. ஆகவே இந்தப் புதுக்கோட்டைக்கு நான் வந்த நிகழ்ச்சி அருணாசலம் என்ற நண்பரின் இல்லத்திற்கு நான் வந்தேன். அவர் நடத்திய ஒரு கூட்டத்திற்கு வந்தேன். எந்த நிலையில் வந்தேன் என்று அருணாசலத்தின் மகனைக் கேட்டால் அவர் சொல்வார். அருணாசலம் இப்போது இல்லை. நெருங்கிய நண்பர். இங்கே கூட்டம் நடத்தினார். கூட்டத்திற்கு தேதியெல்லாம் அறிவித்து, விளம்பரம் எல்லாம் செய்தார். நான் திருவாரூரிலிருந்து வரவேண்டும். நான் இன்று காலையிலே புறப்பட வேண்டுமென்றால், காலையிலே என்னுடைய மனைவிக்கு உயிருக்குப் போராட வேண்டிய ஒரு சூழ்நிலை. டாக்டர்கள் கை விட்டு விட்டார்கள். நான் புறப்படுவதா இல்லையா என்று தயங்கிக் கொண்டிருந்தேன். அங்கே அருணாசலமே வந்து விட்டார். வந்து பாருங்கள் மனைவியை என்றேன். எப்படியும் கூட்டம் நடத்த வேண்டும், ஏனென்றால் விளம்பரம் எல்லாம் செய்து விட்டேன் என்று சொன்னார். என் மனைவியின் நிலையைப் பார்த்து விட்டு அவரும் அழுதார். வீட்டிலே உள்ளவர்கள் எல்லாம் அழுதார்கள். இந்த நிலையில் அழைத்துக் கொண்டு போகிறேன் என்கிறீர்களே, நியாயமா என்று கூட அவரைக் கேட்டார்கள்.

கேட்டவர்களின் கண்ணீரைத் துடைத்து விட்டு வாருங்கள் போகலாம் என்று அருணாசலத்துடன் இங்கே வந்தேன். பொதுக்கூட்டம் பேசினேன். பேசி விட்டுத் திரும்பிச் செல்ல ரயிலோ பேருந்தோ கிடைக்காத காரணத்தால் ஒரு லாரியிலே ஏறி திருவாரூரைச் சேர்ந்தேன். லாரியில் இறங்கி என்னுடைய மனைவியைப் பார்க்க உள்ளே போனால், மனைவியைப் பார்க்க முடியவில்லை. மனைவியின் சடலத்தைத்தான் பார்த்தேன். நான் என்னுடைய கடைசி முத்தத்தை என் மனைவிக்கு அந்தச் சடலத்தின் முகத்திலே தான் தந்தேன். இது தான் என்னுடைய பொது வாழ்க்கை.

ஆகவே பொது வாழ்க்கையிலே நான் கண்ட இன்பங்களில் ஒன்று இது. பொது வாழ்க்கையிலே நான் சந்தித்த நிகழ்ச்சிகளிலே இது ஒன்று. புதுக்கோட்டை என்றால் இந்த நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வராமல் போகாது. அதைப்போல அருணாசலம் என்றாலும் இந்த நிகழ்ச்சி என் முகத்திலே உடனடியாக பளிச்சிடாமல் இருக்காது. அப்படிப்பட்ட ஒரு நினைவு நிகழ்ச்சியை என்றென்றும் என் நெஞ்சத்தில் தேக்கி வைத்திருக்கின்ற இந்தப் புதுக்கோட்டையில் உங்களைக் காண்பதும், உங்களுடைய மலர்ந்த முகங்களை ரசிப்பதும் நான் செய்த பெரும்பேறு, எனக்குக் கிடைத்த பாக்கியம் என்ற முறையில் உங்களையெல்லாம் இந்த நேரத்தில் சந்திப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்த புதுக்கோட்டையிலே உள்ள நம்முடைய அரசு அதிகாரிகளுக்கும், குறிப்பாக கழகத் தோழர்களுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், ஒற்றுமையாக இருந்து இவர்கள் செய்த இந்தக் காரியத்திற்காக அவர்களுக்குப் பல்லாண்டு வாழ்த்துக் கூறி இன்று போல் என்றென்றும் வாழ்க என்று மணமக்களை வாழ்த்துவதைப் போல, இங்கேயுள்ள கழகத் தோழர்களையெல்லாம் இன்று போல் என்றென்றும் வாழ்க, அப்போது தான் கழகம் வாழும், நீங்கள் வாழ்வீர்கள், நாடு வாழும் என்று குறிப்பிட்டு இந்த அளவோடு என் உரையை நிறைவு செய்கிறேன். ●



# மனித உயிர்கள் சுகமாக வாழ சுற்றுச் சூழலைப் பாதுகாக்க மரங்களை வளர்ப்போம்

*ஈஷா அறக்கட்டளை சார்பில், சென்னையில் 23.9.2007 அன்று நடைபெற்ற விழாவில் இரண்டரை கோடி மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.*

இன்று மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த மரம் நடுகின்ற திட்டத்தின் தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வெள்ளம் போல் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காண்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மரம் நடும் விழாக்கள், அதற்கான தொடக்க நிகழ்ச்சிகள் பல நேரங்களில் நடந்து அதிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பை நான் அப்போதெல்லாம் பெற்றிருக்கிறேன். ஆனால் அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல் இன்றையதினம் நம்முடைய சத்குரு அவர்களுடைய பெருமுயற்சியினாலும், சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர், நண்பர் கார்த்திகேயன் அவர்களுடைய அரிய முயற்சியினாலும் பல்லாயிரக்கணக்கிலே பட்டணங்கள், பஞ்சாயத்து கிராமங்கள், பட்டிதொட்டிகள் இங்கெல்லாம் இருந்து ஏராளமான மக்கள் வருகை தந்திருப்பதைக் காணும் பொழுது நீங்கள் மரம் நடுகின்ற இந்த பெரும்பணியில் எந்த அளவிற்கு மனதைப் பறி கொடுத்திருக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது.

**துறவிகளிடத்திலே பற்று—பாசம்**

பெருமதிப்புக்குரிய அருட்திரு சத்குரு அவர்களின் முயற்சியும், அவருடைய வார்த்தைகளும், அவர் மக்கள் பால் எடுத்து வைக்கின்ற வாதங்களும், அவர் மணிப்பிரவாளமாக, அருவியாக வழிய விடுகின்ற அருள் மொழிகளும் எந்த அளவிற்கு – சில பட்டணங்களிலே மாத்திரமல்லாமல், பட்டிதொட்டிகளிலே உள்ள மக்களையும் கவர்ந்திருக்கிறது என்பதை என்னால் உணர முடிகிறது.

நான் அவர்களையும் உங்களையும் நோக்குகின்ற நேரத்தில், துறவிகளாக இருப்பவர்கள் எல்லாம் இப்படியிருந்தால் இந்த நாடு, இந்த உலகம் எந்த அளவிற்கு முன்னேறும், எந்த அளவிற்கு உயர்ந்து நிற்கும் என்று எண்ணி பெருமூச்சு விடுகிறேன். இந்தப் பெருமூச்சு பக்கத்திலே உள்ள அவருக்கு விசிறி போல ஒரு காற்றை எப்படி வீசிப் பயன்படுமோ, அதைப் போலப் பயன்படும் என்று நான் நம்புகின்றேன்.

நான் துறவிகளிடம் கொண்டுள்ள பற்று, பாசம் எத்தகையது என்பதையும், எப்படிப்பட்ட துறவிகளிடத்திலே பற்றும் பாசமும் கொண்டிருப்பேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், நான் இந்து மதத்திலே பெரும் துறவியாகக் கருதப்படுகின்ற மறைந்த குன்றக்குடி அடிகளார் இடத்தில் எனக்கு மிகுந்த அன்பு உண்டு. காரணம், அவரிடத்திலே குடி கொண்டிருந்த தமிழ் மீது – இப்போது இளைய தம்பிரான், இளைய மடாதிபதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரிடமும் அதே அன்பு தொடருகிறது. காரணம் அவர்கள் தமிழ் வளர்ப்பதால். நம்முடைய சத்குரு அவர்களிடம் அன்பு பெருகக் காரணம், அவர்கள் தமிழ் வளர்க்கிறார்கள், இவர்கள் மனிதர்களுக்குத் தேவையான மரம் வளர்க்கிறார் என்பது தான். மதத்தை வளர்க்காமல், மரத்தை வளர்ப்பவர்களை நான் பெரிதும் நம்புகிறவன். மதத்தை வளர்த்தால் தலையைக் கொண்டு வா, கையைக் கொண்டு வா, நாக்கைக் கொண்டு வா என்று சொல்லத் தோன்றும். மரத்தை வளர்த்தால் மக்களை வாழ வைக்கப் பயன்படும் என்ற நல்லுரையை அவர்களுக்கு வழங்கிட முடியும். அதைத் தான் நம்முடைய சத்குரு அவர்கள் செய்கிறார்கள். நான் அவரையும் பார்த்து, இந்தக் கூட்டத்தையும் நினைத்தால், ஏ அப்பா, இவரா இவ்வளவு பெரிய கூட்டத்தைக் கூட்டினார் என்று நான் மலைத்துப் போகிறேன்.

நாங்கள் ஒரு பெரிய கட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஆங்காங்கு ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கிளைக்கழகச் செயலாளர்கள், இவர்களை அன்னியில் அமைச்சர்கள், அவர்களுக்கு உதவியாளர்கள் என்றெல்லாம் ஏராளமான தோழர்கள் இருந்தாலுங்கூட, அமைப்பு முறைகள் இருந்தாலுங்கூட அவர்களையெல்லாம் ஒரே நாளில் கூட்டிக் காட்ட முடியாத ஒரு பெரிய மாநாட்டை சத்குரு அவர்கள் இன்றைக்குக் கூட்டிக் காட்டியிருக்கிறார் என்றால் நான் இனி தமிழ்நாட்டு மக்களுக்கெல்லாம் கொள்ளை இலாபம், கொள்ளை அதிருஷ்டம் என்று தான் நம்பி மகிழ வேண்டியிருக்கின்றது.



மரத்தை ஏன் வளர்க்க வேண்டும் ? இது இன்றைக்கு மக்களிடத்தில் ஒரு ஸ்லோகம் என்று வடமொழியில் சொல்வார்களே, அதைப் போல ஒரு பொன்மொழியாகவே ஆகிவிட்டிருக்கிறது. ஒரு அறிவுரையாகவே ஆகிவிட்டிருக்கிறது. அந்த அறிவுரையைப் பின்பற்றி நடக்க வேண்டும், அதைச் செய்கின்ற காரணத்தால் நான் மாத்திரமன்று, நாடு வாழ நலிவு தீர இன்றைக்கு சாதாரணமாகத் தோன்றுகின்ற ஒன்று, பிரமாண்டமான பயனை நாட்டிற்குத்தரும் என்ற அந்த எண்ணத்தை மெல்ல மெல்லத்தான் மக்களிடத்திலே பரப்ப முடிந்தது. அதை அரசின் சார்பாகத்தான் செய்ய வேண்டியிருந்தது. இன்றைக்கு துறவிகள் செய்கிறார்கள். முற்றும் துறந்தவர்கள் செய்கிறார்கள். வீட்டை மறந்தவர்கள் செய்கிறார்கள். ஆனால் அன்றைக்கு அரசு தான் இதைச் செய்ய முடிந்தது.

நாம் பழைய சரித்திரப் புத்தகங்களை பால பாடங்களை எடுத்து இன்றைக்குப் படித்துப் பார்த்தால் அசோகன் என்ன செய்தார் ? அக்பர் என்ன செய்தார் என்றெல்லாம் அவர்கள் செய்த நன்மைகளை எடுத்துப் பார்க்கும்போது அசோகன் சாலையோரங்களில் எல்லாம் மரம் நட்டான் என்பது தான் பெரிதாக அந்தக் காலத்து சரித்திரப் புருஷர்களைப் பற்றி, அவர்கள் செய்த சாதனைகளைப் பற்றி, புத்தகங்களில் இப்போதும் வெளியிடப்படுகின்ற செய்திகளை நாமறிகிறோம். ஆக மன்னர் காலத்திலே கூட மரங்களை வளர்ப்பது சர்வ சாதாரணமாக இருந்திருக்கின்றது. மக்கள்



ஆட்சிக் காலத்தில் அது மேலும் பெருகிட வேண்டும் என்ற எண்ணத்தினாலேதான் நமது இந்திய அரசு மரம் வளர்ப்பதற்கு ஒரு முக்கியத்துவத்தை தந்து மர வாரம் என்ற ஒரு வாரத்தையே உருவாக்கி, அந்த வாரம் முழுவதும் மரம் நடுகின்ற வாரம் என்று அந்த வாரம் முழுவதும் கொண்டாடப்பட்டது. ஆனால் மரத்தை நடுகின்ற நேரத்திலே இருக்கின்ற ஆர்வம், அதை வளர்ப்பதிலே காட்டுவதில்லை. நம்முடைய அதிகாரிகள் ஒரு அரசின் ஆணையை ஏற்றுச் செயல்படும் போது, அந்த அதிகாரிகளோடு நின்று விடாமல் அவர்களுக்குக் கீழே இருக்கின்ற அதிகாரிகள், அவர்களுக்கு கீழேயிருக்கின்ற சிப்பந்திகள் வரையிலே நடப்பட்ட அந்த மரங்களைப் பற்றிய நாட்டமும், அதற்கு நாம் தரவேண்டிய ஊட்டமும் அடங்கியிருக்கின்ற காரணத்தால் நாளாவட்டத்தில் நாம் நடுகின்ற மரங்கள் – என்ன மரம் என்பதை ருசி பார்க்க தெருவிலே மேய்ந்து கொண்டிருக்கின்ற ஆடுகள் முனைகின்றன. ஆடுகளுக்கு நாம் எப்போது மரம் நடுவோம் என்று மரம் நடுகின்ற விழாவையே எதிர்பார்ப்பது இன்றைக்கு வேலையாக ஆகிவிட்டது. ஆகவே ஆடுமாடுகள் நாம் நட்ட மரங்களை சேதப்படுத்தாமல், அவைகளை அழித்து விடாமல் பாதுகாக்கின்ற அந்தப் பணியையும் செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தால் தான் அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அரசாங்கத்தை மாத்திரம் நம்பி, அவர்களே இந்தக் காரியத்தைச் செய்வார்கள் என்று விட்டு விடாமல் ஒவ்வொருவருக்கும் ஒரு மரத்தை நட்டால் அதை வளர்த்து ஆளாக்கி விட்ட பெரும் பொறுப்பு இருக்கிறது என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

அந்தப் பெரும் பொறுப்பை உணர்ந்தவர்களின் தலைவராகத் தான் நம்முடைய சத்குரு அவர்கள் விளங்குகிறார் என்பதால் அவரை வாழ்க, வாழ்க என்று நான் வாழ்த்துகிறேன்.

**மழை தேவை என்றால்**
**மரம் தேவை**

"மரத்தை நாம் வளர்த்தால், மரம் நம்மை வளர்க்கும்'' என்று நான் ஒரு முறை சொன்னேன். ஒரு முறை சொல்லி அதையும் விளக்கியும் இருக்கிறேன். நாம் ஒரு மரத்தை வளர்த்தால், அந்த மரம் எப்படி நம்மை வளர்க்கும் என்றால், மரங்கள் பெருகி, அவை பெருங்காடாகி, அந்த மரங்களிலிருந்து வெளி வருகின்ற குளிர்காற்று, மேக மண்டலத்தை முத்தமிட்டு, அதன் காரணமாக மழை பொழிந்து, அந்த மழை பொழிந்த காரணத்தால் மாநதிகள் உருவாகி, மாநதிகளிலிருந்து வெள்ளம் வாய்க்கால் வழியோடி நம்முடைய வயல்களுக்கும் பாய்ந்து, கழனிகளிலே கதிர் குலுங்கி, அந்தக் கதிர்களிலே தோன்றுகின்ற நெல்மணிகளோ, கோதுமை மணிகளோ எந்த உணவு மணிகள் ஆயினும் அது நம்முடைய உயிரை வளர்க்கப் பயன்படுகின்றன. ஆகவே மழை தேவை என்றால் மரம் தேவை. மரத்திற்கும், மழைக்கும் என்ன தொடர்பு என்பதை இன்றைக்கு பால பாடத்திலேயே, இரண்டாவது மூன்றாவது படிக்கின்ற சிறுவர்களே கூட தெரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு ஆசிரியர்கள் கற்றுத் தருகின்றார்கள். எனவே மரம் வளர்ப்பது சாதாரண விஷயமல்ல. அது ஒரு நாட்டின் உயிரை நீண்ட காலத்திற்கு வாழ வைக்கக் கூடிய, நீட்டிக்கக் கூடிய ஆற்றல் பெற்றது மரம் என்பதை யாரும் மறந்திடக் கூடாது. அதனால் தான் இதை அலட்சியப்படுத்தக் கூடாது என்று பெரியவர்கள் இதை இன்றைக்கு கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.




மரங்கள் நிறைந்த மாநகரம் என்று டெல்லிப் பட்டணத்தைச் சொல்கிறோம். அதைப் போல பெங்களூர் சென்றால், அங்கே சாலையோரங்களிலே நடு வீதிகளிலே இருக்கின்ற மரங்கள், அழகழகாக வளர்ந்திருக்கின்ற தருக்கள் இவைகளைக் கண்டு மரங்கள் அடர்ந்த ஊர் என்று பெங்களூரைப் புகழ்கிறோம். நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். பெங்களூரைப் புகழ்வதைப் போலவோ, டெல்லி மாநகரத்தைப் புகழ்வதைப் போலவோ சென்னையைப் புகழ என்னால் முடியவில்லை. காரணம் அந்த அளவிற்கு ஒழுங்கான முறையிலே சென்னை மாநகரத்தின் வீதிகளை, சாலைகளை நாம் வைத்திருக்கவில்லை. இங்கே சாலைகளிலே மரங்களுக்குப் பதிலாக பெரிய பெரிய பேனர்களை வைக்கிறோம். பெரிய பெரிய விளம்பரங்களை வைக்கிறோம். கோபுர உயரத்திற்கு இருக்கின்ற பட விளம்பரங்களை வைக்கிறோம். அரசியல் விளம்பரங்களை வைக்கிறோம். விளம்பரங்கள் வைப்பது பார்ப்பதற்காக, ஒரு நாள் இரு நாள் என்றில்லாமல் வாரம் முழுவதும் வைக்கிறோம், மாதம் முழுதும் வைக்கிறோம். ஏன் சில நேரங்களில் ஆண்டு முழுவதும் வைக்கிறோம். அப்படி வைக்கின்ற காரணத்தால், அந்த மரங்கள் வளருவதற்கும் வழியில்லாமல், மரங்கள் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்வதற்கும் வழியில்லாமல் மரங்களால் ஒரு நகரத்திற்கு ஏற்பட வேண்டிய எழில் குலுங்குகின்ற அந்தத் தன்மையும் இன்றைக்குப் பறிக்கப்பட்டு விடுகிறது.

எனவே வெளியூர்களிலிருந்து வந்திருக்கின்ற இந்தப் பெரும் கூட்டத்தின் எதிரொலியாக சென்னை மாநகரம் இனி மேலாவது எழிலோடு விளங்க வேண்டுமென்பதற்கு ஏற்ற வகையில் நான் மாத்திரமல்ல, நான் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, என்னுடைய அதிகாரிகளும் கவலைப்பட வேண்டும். அதிகாரிகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, சிப்பந்திகளும் கவலைப்பட வேண்டும். சிப்பந்திகள் கவலைப்பட்டால் மாத்திரம் போதாது, நாங்கள் இங்கே விளம்பர போர்டுகளை வைத்துத் தான் தீருவோம் என்று நீதிமன்றத்திற்கு சென்று "தடையாணை" வாங்குகிறார்களே சில பேர், அவர்களும் கவலைப்பட வேண்டும். "தடையாணை" வாங்குபவர்களும் கவலைப்பட வேண்டும், தடையாணையைக் கொடுக்கின்ற நீதிமன்றங்களும் கவலைப்பட வேண்டும். எல்லோரும் சேர்ந்து கவலைப்பட்டால் தான் மரங்களை வளர்க்க முடியும், மரங்கள் வளர்ந்தால் தான் மனித உயிர்கள் வாழும், மனித உயிர்கள் ஆரோக்கியமாக வாழ நிம்மதியாக வாழ சுகமாக வாழ சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக் கொண்டு வாழ முடியும். எனவே மரங்களை வளர்ப்போம். மரங்களை நாம் வாழ வைப்போம். அப்போதுதான் மரங்கள் நம்மை வாழ வைக்கும் என்ற அந்த உண்மையை உணருவோம், அனுபவரீதியாக உணர்வோம், அதை உணரக் கூடிய வகையிலே இங்கே வெள்ளம் போல் மக்கள் கூட்டத்தை கூட்டிக் காட்டிய நம்முடைய சத்குரு அவர்களுக்கும், நண்பர் கார்த்திகேயன் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்து உங்களை யெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக, இந்த வாய்ப்பை உருவாக்கியவர்களுக்கு நன்றியினை நவின்று விடைபெறுகிறேன்.

# ஓய்வு பெற்றவர்கள் தங்கள் உழைப்பை சமுதாயத்திற்குத் தந்திட வேண்டும்



**சேலத்தில் 14.09.2007 அன்று நடைபெற்ற தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் மாநிலச் சங்க முப்பெரும்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

இன்றைய தினம் சேலத்தில் நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வந்துள்ள என்னை நீங்கள் அழைத்து வரவேற்றுப் பாராட்டி, உங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டு என்னிடத்திலே நான் மேடைக்கு வந்த பிறகு தான், என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தால், அவைகளையெல்லாம் படித்துப் பார்த்து, அலுவலர்களோடு கலந்து பேசி, அதிகாரிகள் மட்டத்திலே சிந்தித்து ஆவன செய்வேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருப்புமுனை

நீங்கள் ஓய்வு பெற்றவர்கள் – ஓய்வூதியத்தினுடைய ஏற்றத்தாழ்வு, அதை வகைப்படுத்தி வழங்குதல், இன்னபிற பிரச்சினைகளில் எத்தனையோ கோரிக்கைகளை வைத்து, இந்த அரசின் சார்பாக அவற்றையெல்லாம் பெற்றிருக்கிறீர்கள். இந்த அரசு அவற்றை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றது. அதில் நாங்களும் பெருமையடைகிறோம், நீங்களும் மகிழ்ச்சி அடைகின்றீர்கள். என்னைப் பொறுத்தவரையில் ஓய்வு பெற்றவர்களைப் பார்த்து பொறாமை கொள்பவன். ஏனென்றால் எனக்கு இன்னும் ஓய்வு கிடைக்கவில்லையே என்ற காரணத்தினால் பொறாமைப்படுபவன். அது சேலத்திற்கு பிறகாவது எனக்குக்



கிடைக்கவேண்டும், ஏனென்றால் சேலம் திராவிட இயக்கச் சரித்திரத்தில் சில முக்கியமான திருப்பு முனைகளை உருவாக்கிய இடம், உருவாக்கக் கூடிய இடம், இனிமேலும் உருவாக்கும் என்று நான் எதிர்பார்க்கின்ற இடம். ஆகவே ஓய்வு பெற்ற உங்களையெல்லாம் நீங்கள் இருக்கும் உற்சாகத்தைக் கண்டு, நானும் ஓய்வு பெற்றால் எவ்வளவு உற்சாகமாக இருக்கலாம், இந்த உபத்திரவம் எல்லாம் இல்லாமல் என்கின்ற அந்த எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. இதை வைத்தே நாளை சில பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதும், சில வாரப் பத்திரிகைகள் யூகங்களை வெளியிடும். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவாவது இந்த வாசகங்களை நான் இங்கே சொல்ல வேண்டுமென்று எண்ணி சொல்லியிருக்கிறேன், வேறொன்றுமில்லை. ஒன்றுமில்லை என்றால் ஒன்றுமே இல்லை என்று அர்த்தமல்ல, ஒன்றிரண்டு இருக்கிறது என்பதை என்னுடைய தம்பிமார்கள் அறிவார்கள்.

### பண்டிகை முன்பணம் உயர்வு

உங்களுடைய கோரிக்கைகளில் மிக முக்கியமாக ஓய்வூதியர்களுக்குப் பண்டிகை முன் பணமாக, 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்பதாகும். ஓய்வூதியர்களுக்குப் பண்டிகை முன்பணம் 500 ரூபாய் வழங்கப்பட்டு, இந்த முன்பணம் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் என பத்து மாத தவணைகளில் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தப் பண்டிகை முன் பணம் 1992ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அண்மையில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணமாக 1,000 ரூபாய் என்பதை 2,000 ரூபாயாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டதையும், தற்போது உங்களுக்கு நடைமுறையில் உள்ள 500 ரூபாய் என்பது 92ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது என்பதையும் கருத்தில் கொண்டு ஓய்வூதியதாரர்களுக்குப் பண்டிகை முன் பணமாக 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கலாம் என்று கருதியிருக்கிறோம். இந்த மகிழ்ச்சியான செய்தியை ஓய்வூதியர்கள் குழுமியிருக்கின்ற இந்த மாநாட்டில் நான் மிகுந்த பெருமையோடும் பூரிப்போடும் நீங்கள் எல்லாம் நிச்சயமாக நிம்மதி அடைவீர்கள் என்ற கருத்தோடும் வெளியிடுகின்றேன்.

அதைப் போலவே 1–6–1988 முதல் 31–12–1995 வரையில், ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறும்போது பெற்ற அகவிலைப்படி முழுவதையும், ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் உங்கள் முதல் கோரிக்கையாக வைத்துள்ளீர்கள். அதுபற்றி இங்கே பேசிய நண்பர் கூடக் குறிப்பிட்டார். இதுபற்றி நிதித் துறைச் செயலாளர்களோடு நான் ஏற்கெனவே ஒரு முறை கலந்து பேசியிருக்கிறேன். இந்தக் கோரிக்கை வரும் என்று தெரிந்து இதைப் பற்றிப் பேசிய போது, அவர்கள் சொன்ன குறிப்பினை உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இப்படி படித்துக் காட்டுவதால் அந்தக் கோரிக்கையை விட்டு விட்டு, வேறு பிரச்சினைக்குச் செல்கிறேன் என்று நீங்கள் யாரும் கருதத் தேவையில்லை.

### சொன்ன சொல் வீண் போகாது

நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி 31–5–1988 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கு, அவர்கள் ஓய்வு பெறும் தருணத்தில் பெற்ற அகவிலைப் படியினை ஊதியத்தோடு இணைத்து, ஓய்வூதியம் கணக்கிட ஆணையிடப்பட்டது. இந்தச் சலுகை 1–6–1988 முதல் 31–12–1995 வரை ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்திலே, இந்தச் சங்கம் மற்றும் ஓய்வூதியர்கள் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாக உயர்நீதி மன்றத்தால் அளிக்கப்பட்டது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள்படி, இதனை 1–10–1984 முதல் 31–5–1988 வரை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும், 1–6–1988க்குப்




பின் இதனுடைய பரிந்துரையை நடைமுறைப்படுத்த இயலாது. எனவே, அரசு இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து தடையாணை பெற்றது. இந்த வழக்கின் மீது விசாரணை முடிந்து தீர்ப்பு நிலுவையிலேயே உள்ளது. சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்புப் பெறப்பட்டவுடன் அந்த அடிப்படையில் இந்தக் கோரிக்கையின் மீது முடிவெடுக்கலாம் என்று அதிகாரிகள் மட்டத்தில் யோசித்து வைத்திருக்கிறோம். எனவே, தீர்ப்பு வந்த பிறகு இதைப்பற்றி யோசித்து உங்களுக்கு நன்மை கிட்டுகின்ற வகையில், உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில், எப்படி அந்தத் தீர்ப்பை அணுகலாம் என்ற முறையிலே இந்த அரசு செயல்படும் என்பதை உங்களுடைய நம்பிக்கைக்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படாமல் நான் நிறைவேற்றித் தருவேன் என்பதையும் – இந்த முதல் கோரிக்கையை, முதன்மையான கோரிக்கையை இங்கே என் முன்னிலையிலே எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கோரிக்கையைப் பற்றி என் கருத்தினை வெளியிட்டிருக்கிறேன். நான் இங்கே சொன்ன சொல் வீண் போகாது, காப்பாற்றப்படும், காப்பாற்றப்படுவதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலிலே சொன்னதைப் போல உங்களையெல்லாம் இங்கே சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஓய்வு பெற்று விட்டோம் என்று அத்துடன் நம்முடைய கடமைகளை மறந்து விடக் கூடாது. ஒருவர் ஓய்வு பெற்று விட்டால்கூட, ஓய்வு பெற்ற பிறகு தான் அவர்களுக்கு நிரம்பப் பணிகள் சமுதாயத்திலே இருக்கின்றன என்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஓய்வு பெறுகிற வரையிலே ஒரு பணி தான். ஓய்வு பெற்று விட்டால் பல பணிகள். பல பணிகளிலே அவர்கள் ஈடுபட வேண்டும். அப்படிப்பட்ட பணிகளிலே முதன்மைப் பணியாக இந்தச் சமுதாயத்திலே பகுத்தறிவு கொளுத்துகின்ற, இந்தச் சமுதாயத்திலே மூட நம்பிக்கைகளை வீழ்த்துகின்ற, இந்தச் சமுதாயத்திலே சாதி மத பேதங்களை அகற்றுகின்ற, இந்தச் சமுதாயத்தில் முன்னேற்றக் கருத்துக்களை முகிழ்க்கச் செய்கின்ற அந்தப் பணிகளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். அந்தப் பணிகளிலே நீங்கள் ஈடுபடவேண்டும். இதுவரையில் நீங்கள் ஆற்றிய பணிகளுக்காக, நிரம்ப ஊதியம் பெற்றிருக்கிறீர்கள், ஓய்வு பெற்ற பிறகு நீங்கள் ஆற்றவிருக்கின்ற பணிக்கு, நீங்கள் பெறக் கூடிய ஊதியம், நீங்கள் இந்த உலகத்திலே வாழ்கின்ற வரையிலே மாத்திரமல்ல, நம்முடைய வாழ்வு, ஓய்வு பெற்றவர்களுடைய வாழ்வு முடிந்த பிறகும் கூட, அவர்களுடைய வாழ்வுக்கு நல்ல புகழ் தரத் தக்க ஒரு பயனை தரக் கூடிய அளவிற்கு அமைய வேண்டுமேயானால், நம்மால் உருவாக்கப்பட்ட பணிகளால், நம்மால் வடிவமைக்கப்பட்ட பணிகளால், இந்தச் சமுதாயம் பெரும் ஏற்றத்தைப் பெற்றிருக்கிறது. இந்தச் சமுதாயம் மற்றச் சமுதாயங்களோடு போட்டி போடுகின்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. மற்றவர்களோடு போட்டி போட்டு முன்னேறுகின்ற அளவிற்கு பொருளாதாரத்தில், சமுதாயத் துறையில், அரசியலில் விழிப்புற்றிருக்கிறது என்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், ஓய்வு பெற்றிருக்கின்ற நீங்கள் தான் அதற்காக உழைக்க வேண்டும். ஓய்வு பெற்று விட்டோம் என்று எண்ணத் தேவையில்லை, ஓய்வு பெற்ற பிறகு நாம் செய்ய வேண்டிய, வழங்க வேண்டிய உழைப்பை எண்ணிப் பார்த்து, அந்த உழைப்பை இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உங்களுடைய அன்பான வரவேற்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

*தொகுப்பு :*

**தா. மனோகரன்,** செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம் மாவட்டம்.

# தமிழகம், மருத்துவத் துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் பெருமிதம்!

டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் 17–ஆவது பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய சிறப்புரை – 11.10.2007.

மேதகு தமிழக ஆளுநரும் – பல்கலைக்கழக வேந்தருமான சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்– இணை வேந்தர் கே.கே.எஸ்.எஸ்ஆர்.இராமச்சந்திரன் அவர்களே!

துணைவேந்தர் டாக்டர் மீர் முஸ்தபா உசேன் அவர்களே!

ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களே! ஆசிரியர் பெருமக்களே! மருத்துவத் துறை நண்பர்களே! பட்டம் பெறும் பாசத்திற்கினிய கண்மணிகளே! என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தினை 31.8.1989 அன்று இதே மாமன்றத்தில் தொடங்கி வைத்து 14.10.1990 அன்று நடந்த முதல் பட்டமளிப்பு விழாவிலும், 21.3.1997 அன்று நடந்த ஏழாவது பட்டமளிப்பு விழாவிலும், 22.4.1999 அன்று நடந்த ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவிலும் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய பசுமையான நினைவுகளோடு இன்று 17–ஆவது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்பினையும் பெற்றுள்ளமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன்.

31.7.1998 அன்று இப்பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு என்னுடைய அருமை நண்பர் மறைந்த எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்த அந்த நிகழ்வையும் இவ்வேளையில் மகிழ்வுடன் நினைவு கூர்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் இரண்டாவது மருத்துவப் பல்கலைக்கழகம் என்னும் பெருமைக்குரிய இப்பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் அருமை மருத்துவமாமணிகளுக்கு என் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் உரித்தாக் குகிறேன்.

இன்று பட்டம் பெறுவோரின் எண்ணங்களில் வண்ணக் கனவுகள் எண்ணற்றவையாய் இருந்திடக் கூடும். அவை அனைத்தும் நிறைவேறிட வேண்டுமென விரும்புகிறேன்.

**மருத்துவர்களின் திறமை**

இந்தியத் திருநாட்டில் தமிழகம் இன்று பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. குறிப்பாக சென்னை மாநகரம் பல்வேறு சிறப்புகளைப் பெற்று வருகிறது. இந்தியாவின் மிகச் சிறந்த மாநகராட்சியாக சென்னை மாநகரம் தேர்வு செய்யப்பட்டு, 9.10.2007 அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் வழங்கிய மத்திய அரசின் விருதினைப் பெற்றுள்ளது. இன்று மருத்துவத் துறையிலும் உலக மக்களின் கவனத்தை ஈர்த்து நிற்கிறது.

இந்தியாவின் பொருளாதார நகரமாக மும்பை விளங்குவது போல இந்தியாவில் மருத்துவத் துறையின் தலைநகரமாக சென்னை மாநகரம் வளர்ந்து வருகிறது. குறைந்த செலவில், சிறந்த தரத்தில் உயர்ந்த தொழில்நுட்பங்களின் துணையோடு இதய அறுவை சிகிச்சை, மூட்டுமாற்று அறுவை சிகிச்சை முதலிய மருத்துவ வசதிகள் சென்னை மாநகரில் எளிதாகக் கிடைக்கின்றன. இதன் காரணமாக அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, சூடான், ஆப்கானிஸ்தான், இலங்கை, பியூஜி தீவுகள் முதலிய பல்வேறு நாடுகளில் இருந்தும் பலர் சென்னை மாநகருக்கு வருகை புரிந்து மருத்துவ சிகிச்சைகள் செய்துகொண்டு மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கின்ற காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் நம்மால் காண முடிகிறபோது நம்முடைய தமிழ் மருத்துவர்களின் திறமையை போற்றாமல், பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

**மத்திய–மாநில அரசுகளின் ஒத்துழைப்பு**

சில ஆண்டுகளுக்கு முன்புவரை கடுமையான நோய்களுக்கு உரிய சிகிச்சைகளை மேற்கொள்ள மேலை நாடுகளை நம்பி இருந்த நமது தமிழகத்தில், இன்று பலர் வெளிநாடுகளில் இருந்து சிகிச்சைக்காக வந்து செல்கின்ற வாய்ப்பு குவிந்துள்ளமைக்கு, இங்கு அரசுத் துறையில் மட்டுமல்லாமல் தனியார் துறையில் அமைந்துள்ள பல்வேறு தனித்தன்மை வாய்ந்த மருத்துவ மனைகளும் முக்கிய காரணங்கள் ஆகும். அவை சுதந்திரமாகவும், சிறப்பாகவும் செயல்படுவதில் நமது மத்திய – மாநில அரசுகள் அளித்துவரும் ஒத்துழைப்புகளும் உதவிகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

இன்று தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளும், மருத்துவப் பணிகள் சார்ந்த பிற கல்வி நிறுவனங்களும் தமிழ்நாடு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் சீரிய ஒத்துழைப்புடன் இயங்கி வருகின்றன.

பட்டம் பெற்றுச் செல்கின்ற மாணவச் செல்வங்களாம் நீவீர் இன்று பெற்றுள்ள பட்டம் மருத்துவத் தொண்டுபுரியும் வாய்ப்பினை உங்களுக்கு வழங்குகிறது; கற்றதுபோதும் என நீங்கள் எண்ணிடக் கூடாது. கற்கும் வாய்ப்புகள் மருத்துவ உலகில் குவிந்து கிடக்கின்றன.

உளம் விழையும் துறைகளில் ஈடுபட்டு, ஆய்வுகள் மேற்கொண்டு உலகம் புகழும் மருத்துவ மேதைகளாகத் திகழ்வீர்களாக!

**நோயாளிகள்பால் கனிவு காட்டுங்கள்**

மருத்துவப் பணியில் ஈடுபட்டுத் தொண்டுகள் புரிந்து, செல்வம் ஈட்டிச் சிறப்புடன் நீங்கள் வாழ்ந்திட வேண்டும். அல்லும் பகலும் நீங்கள் ஆற்றும் மருத்துவத் தொண்டுகளின் போது உங்களைத் தேடிவரும் நோயாளிகள்பால் கனிவு காட்டிட வேண்டும். அந்தக் கனிவே உங்களை நாடி வருவோரின் நோயை விரைந்து குணமாக்கும் மருந்தாகும்.

'உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'

'நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து துணைபுரிபவர் என மருத்துவமுறை நான்கு வகையாக அமைந்துள்ளது' – எனும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளையும், அது தரும் பொருளையும் எண்ணிப் பார்த்திடுவீர்.

ஒருவனின் நோயைத் தீர்க்கும் மருந்தின் கூறுகள் நான்காகும். அவற்றில் ஒன்று 'தீர்ப்பான்' என்பது; இந்த 'தீர்ப்பான்' எனும் சொல் நோயைப் போக்குகின்ற மருத்துவர் ஆகிய உங்களைக் குறிக்கிறது. எனவே நீங்கள் நோயாளியின் நோய் தீர்க்க மருந்து அளித்திடும் மருத்துவர்கள் மட்டுமல்ல; நோயாளிகளிடம் நீங்கள் காட்டும் கனிவு, மருந்தாகவும் அமைவதால் உங்களை மருந்தின் ஒரு பகுதியாகவே குறிக்கிறார் அய்யன் திருவள்ளுவர். எனவே தான் இரக்க உணர்வின் அடிப்படையில் எழும் கனிவு மருத்துவத் தொழிலில் ஈடுபடும் உங்கள் அனைவரையும் அணி செய்திட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

**ஏழைகளுக்குத் தொண்டு செய்க**

உங்களுடைய மருத்துவ வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதும் ஒன்றாக அமைந்திட வேண்டும்.

நமது சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்துவரும் ஏழை எளிய மக்கள் ஆண்டாண்டு காலமாக அடக்கி

ஒடுக்கப்பட்டவர்கள். வாழ்வின் எந்த ஒரு சுவையையும் நுகர்ந்து அறியாதவர்கள், கல்வி வாய்ப்புகள் காலம் காலமாக மறுக்கப்பட்டவர்கள். முன்னேற்றத் திசையின் வாயிற்படிகளைக்கூட கண்டறியாதவர்கள். அத்தகையவர்கள் உழைக்க மட்டுமே பிறந்தவர்களாகக் கருதப்படுபவர்கள். அத்தகையவர்களைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'சாமானியர்கள்' என்று குறிப்பிடுவார்கள். அந்தச் சாமானியர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான், வாழ்வின் முழு சுவையையும், அவர்கள் காண வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களுக்குக் கல்வி வாய்ப்புகளும், வேலைவாய்ப்புகளும் தடையின்றிக் கிடைத்திட வேண்டும் என்பதற்காகத்தான், தந்தை பெரியார் அவர்களும், பெருந்தலைவர் காமராசர் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பாடுபட்டார்கள். அவர்களுக்குப் பின்னால் தமிழகத்தில் அமைந்துள்ள இந்த அரசும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

### அதிக நிதியை அளிக்கும் அரசு

நோய்நொடி என்றால் ஏழை எளியோர் எந்த மருத்துவமனைக்குச் சென்று இன்றைக்கு இருக்கின்ற நவீன வசதிகளைப் பெற முடியும் என்பதை எண்ணிப் பார்க்கின்றபோதுதான் அந்த வசதிகள் அவர்களுக்கும் கிடைத்திட வேண்டும், எல்லோரும் அந்த வசதிவாய்ப்புகளைப் பெற்று நலவாழ்வை நுகர்ந்திட வேண்டும் என்று கருதி மருத்துவத் துறைக்கு நமது தமிழக அரசு ஆண்டுதோறும் அதிக நிதியை ஒதுக்கீடு செய்கிறது; புதிய புதிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது; தகுதிவாய்ந்த மருத்துவ வல்லுநர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

2006–ஆம் ஆண்டு மே திங்களில் தமிழகத்தில் இந்த அரசு அமைந்த பிறகு அரசு மருத்துவமனைகளில் 2,297 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

முதுநிலை மருத்துவப் பட்டம் மற்றும் பட்டயம் பயின்ற 203 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்; பல ஆண்டுகளாக நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்டங்களில் மருத்துவர் பணியிடங்கள் 30 முதல் 50 விழுக்காடு வரை நிரப்பப்படாமல் இருந்து வந்தன. தற்போது அம்மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றில் நூறு சதவீத மருத்துவர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு மருத்துவர்கள் இல்லை என்ற குறை அறவே அகற்றப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 1,405 மருத்துவர்களுக்கு நவம்பர் 2006 முதல் கால முறை ஊதியம் அளிக்கப்பட்டு, மருத்துவ வல்லுநர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

**"உங்களுடைய மருத்துவ வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய்வதும் ஒன்றாக அமைந்திட வேண்டும்".**

### புதிய மருத்துவக் கல்லூரிகள்

அதேபோல, தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த 2,540 செவிலியர்கள், 419 மருந்தாளுநர்கள், 280 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் அனைவரும் காலமுறை ஊதிய விகிதத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளனர். மொத்தம் உள்ள 13,000 காலியிடப் பணியிடங்களில் இதுவரை 9,000 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பிட ஆணைகள் வழங்கப்பட்டு, நிரப்பும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற கோட்பாட்டின்கீழ் விழுப்புரம், திருவாரூர், தருமபுரி மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்படுகின்றன.

அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையை, சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்கு நிகராக 100 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டு, முதல் தவணையாக இந்த ஆண்டு 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் வாழ்பவர்களுக்கும் மருத்துவ உதவிகள் சென்று சேர வேண்டும் என்ற சிந்தனையோடு 30.12.2006 முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள "வருமுன் காப்போம்" திட்டத்தின் மூலம் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்த ஆணையிடப்பட்டு, 5.10.2007 முடிய 3,766 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் 39 இலட்சத்து 95 ஆயிரத்து 89 பேர் பயனடைந்துள்ளனர்.

### தரமான மருத்துவ வசதிகள்

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் " டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ்'' 15.9.2006 முதல்

இதுவரை மொத்தம் 4 இலட்சத்து 78 ஆயிரத்து 512 ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு மொத்தம் 211 கோடியே 53 இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படுகின்ற 270 வட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளைச் சீர்செய்யவும், விரிவுபடுத்தவும் 597 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

85 கோடி ரூபாய் செலவில் அரசு மருத்துவ மனைகளில் MRI ஸ்கேன், சிறுநீரக கல் அகற்றும் கருவி, சி.டி. ஸ்கேன் போன்ற அதிநவீன மருத்துவ சாதனங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

அலோபதி மருத்துவ முறையுடன் இந்திய மருத்துவ முறையையும் தீவிரமாகச் செயல்படுத்தும் நோக்குடன், அரசு மருத்துவமனைகளில் 150 சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இத்தகைய பணிகள் தமிழக அரசின் மருத்துவத் துறையில் நிறைவேற்றப்படுவதன்மூலம், தரமான மருத்துவ வசதிகள் தடையின்றிக் கிடைக்க வழிவகுக்கப்படுகின்றன.

**தொண்டு மனப்பான்மை**

இந்த அடிப்படையில் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழுகின்ற மக்களுக்கு உழைத்திட வேண்டுமென்னும் தொண்டு மனப்பான்மை உங்களிடமும் அமைந்திட வேண்டுமென விரும்புகிறேன்.

அமெரிக்க அதிபராகத் திகழ்ந்த உட்ரோ வில்சன் என்பார் பொதுத் தொண்டில் ஈடுபடுபவர்கள், சமுதாயம் சீரமைக்கப்பட வேண்டும் என்பவர்கள் தங்கள் பணியை அடித்தளத்தில் இருந்து தொடங்கிட வேண்டும் என்கிறார்.

'Nations are renewed from the bottom, not from the top... real wisdom of human life is compounded out of the experiences of ordinary men... The great struggling unknown masses of the men who are at the base of everything are the dynamic force that is lifting the level of society. A Nation is as great and only as great as her rank and file'.

"சமுதாயச் சீரமைப்பு என்பது கீழ் மட்டத்திலிருந்து தொடங்கப்பட வேண்டுமே தவிர, மேல்மட்டத்திலிருந்து அல்ல. சாதாரண சராசரி மனிதனது எண்ணங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் எண்ணியுணர்ந்து, இணைத்துச் சிந்தித்துச் செயலாற்றிட வேண்டும். அதுதான் மனிதத் தன்மை...

"நமது நாட்டிலும் அடித்தள மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக பாடுபடக்கூடிய வழி வந்தவர்கள் நாம் என்பதால்; உங்களுடைய தொண்டின் ஒரு பகுதி அந்த ஏழை எளிய மக்களுக்கான தன்னலமற்ற அர்ப்பணிப்புப் பணியாகத் திகழ வேண்டும் என நான் உங்களிடம் உரிமையுடன் வேண்டுகிறேன்."

......குறிப்பிட்ட வகையில் புறக்கண்களுக்குத் தெரியாவிட்டாலும் சமுதாய முழுமையிலும், உலகு எங்கணும் பல்கிப் பெருகி நீக்கமற நிறைந்திருக்கும் சாமானிய மனிதர்களது எண்ணமும் எழுச்சியும் வாழ்வும் தாழ்வுந்தான் சமுதாயச் சீரமைப்பின் பேரியக்கச் சக்தியாக செயல்பாட்டுத் திறனாக உள்ளது.

சாமானிய சராசரி மக்களின் எழிலையும் ஏற்றத்தையும் பொறுத்தே எந்த ஒரு சமுதாயத்தின் பெயரும் பெருமையும் சீரும் சிறப்பும் அமையும்."

என்ற உட்ரோ வில்சனின் இந்தக் கருத்துகள் அமெரிக்க நாட்டிற்கு மட்டுமல்ல; உலகின் எந்த நாட்டிற்கும் பொருந்தும் பொதுக்கருத்தாகும். அதனால்தான் நமது நாட்டிலும் அடித்தள மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக பாடுபடக்கூடிய வழி வந்தவர்கள் நாம் என்பதால்; உங்களுடைய தொண்டின் ஒரு பகுதி அந்த ஏழை எளிய மக்களுக்கான தன்னலமற்ற அர்ப்பணிப்புப் பணியாகத் திகழ வேண்டும் என நான் உங்களிடம் உரிமையுடன் வேண்டுகிறேன்.

'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு' – என்று அய்யன் திருவள்ளுவர் கூறிய அருமையான குறளுக்கு ஓர் இலக்கணமாய் எடுத்துக்காட்டாய் நமது தமிழகத்தை, தாய்த் திருநாட்டை உருவாக்கிட முனைந்து உழைத்திடுவீர்! உயர்ந்திடுவீர்!!

★ ★ ★

# தமிழ்நாட்டின் வளம்பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை

திருச்சிராப்பள்ளியில்
29.9.2007 அன்று
நடைபெற்ற மாநகராட்சி
குடிநீர் விரிவாக்கத் திட்டம்
மற்றும் வளர்ச்சித்
திட்டங்களுக்கு அடிக்கல்
நாட்டுவிழாவில் பங்கேற்று
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
ஆற்றிய உரை.



நீண்ட நேரம் இந்த விழாவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் விரிவாக, விளக்கமாக, திருச்சி மாவட்டத்திலும் இந்த மாநகரத்திலும் தி.மு.கழகத்தினுடைய ஆட்சியில் நடைபெற்ற, நடைபெறப்போகிற, நடைபெற்று வருகின்ற, நடைபெறுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்ற சாதனைகளை யெல்லாம் விளக்கிக் கூறியிருக்கின்றார்.

அதற்கு மேல் நான் அதையே விவரித்துப் பேசுவது தேவையில்லாத ஒன்று. "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்" என்பதைப் போல, நான் பேச நினைத்ததையெல்லாம் தம்பி ஸ்டாலின் பேசி விட்டக் காரணத்தால், நான் அவற்றையெல்லாம் மீண்டும் தொட்டுப் பேச விரும்பவில்லை. எத்தனை முறை பேசினாலும் அனுபவ ரீதியாக இந்த ஆக்கப் பணிகளை நுகர்கின்ற உங்களுக்குத் தெளிவு ஏற்படாது என்று நான் சொல்லமாட்டேன். அந்தத் தெளிவு உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால்தான் இன்னும் சொல்லப் போனால், எங்களிடத்திலே நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை, நாளுக்கு நாள் விரிவடைகிற காரணத்தினால்தான், வளர்கின்ற காரணத்தினால்தான், ஒரே நாளில், நேற்று இதே திருச்சியினுடைய ஒரு பக்கத்திலே இலட்சக்கணக்கிலே குழுமினீர்கள். அடுத்த

24 மணி நேரத்திற்கெல்லாம் இந்தப் பகுதியிலே இலட்சக்கணக்கிலே குழுமியிருக்கின்றீர்கள்.

நேற்று ஒரு பத்திரிகையில் எந்தப் பத்திரிகை என்று பெயர் சொல்ல விரும்பவில்லை. அந்தப் பத்திரிகையிலே ஒரு செய்தி படம் வந்திருக்கிறது. அதிலிருந்தே அந்தப் பத்திரிகையினுடைய பெயரை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கருணாநிதிக்கு இப்போது கூட்டமே சேருவதில்லை என்று எழுதியிருக்கிறார்கள். நான் அந்தப் பத்திரிகையினுடைய நிருபர் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தால் இதெல்லாம் கூட்டம் தானா? அல்லது மக்கள் வெள்ளமா என்பதற்கான விரிவுரையை அவர் அந்தப் பத்திரிகையிலே எழுதிக் காட்டுவார் என்று நான் நம்புகிறேன்.

**பெரியார் அண்ணா பாசறை**

நான் பத்திரிகைகாரர்களிடத்திலே எங்களுடைய கூட்டம் பெரிய கூட்டமாக இருந்தாலும் அதைப் பெரிய அளவிலே போடுங்கள் என்று நான் சொல்ல மாட்டேன். உள்ளதை உள்ளபடியே போடுங்கள். உள்ளதை உள்ளபடியே வெளியிடுங்கள் என்பதுதான் என்னுடைய வழக்கமான வாதமாக இருந்திருக்கிறதே தவிர, இப்போதும் இருக்கிறதே தவிர, அதை திரித்துப் போடுங்கள் அல்லது பெரிதாகப் போடுங்கள் அல்லது விவரமாக போடுங்கள் என்றெல்லாம் நான் யாரையும் என்றைக்கும் மிரட்டியது கிடையாது. மிரட்டப் போவதுமில்லை. மிரட்டியும் பழக்கப்பட்டவனும் அல்ல. காரணம், நான் பேரறிஞர் அண்ணாவினுடைய பாசறையிலே, அரசியல் பயின்றவன். தந்தை பெரியார் அவர்களுடைய பாசறையில் சமுதாயம் பயின்றவன்.

பெரியாரிடத்திலே விடியற்காலை 6 மணிக்கெல்லாம் அவரைச் சூழ்ந்து நாங்கள் ஈரோடு குடியரசு அலுவலகத்திலே பணியாற்றியபோது அவருடைய இல்லத்திலே அமர்ந்திருப்போம். இப்போது என்னுடைய தம்பிமார்களெல்லாம் என்ன இவ்வளவு சீக்கிரம் எழுந்து விடுகிறீர்களே என்று ஆச்சரியப்படுகிறார்கள். என்ன செய்வது? நான் பெரியாரிடத்திலே அப்படிப்பட்ட பாடத்தைப் பயின்றிருக்கிற காரணத்தால், அண்ணாவிடத்திலே அந்த பாடத்தை பயில முடியாமல் அதற்கு முன்பே நான் பெரியாரிடத்திலே அந்தப் பாடத்தைப் பயின்றவன். அதனால் 6 மணிக்கெல்லாம் எழுந்து பெரியாரைச் சுற்றி உட்கார்ந்துகொள்வோம். நான், தவமணிராஜன், ஏ.பி.ஜனார்த்தனம், கருணானந்தம் என்று ஐந்தாறு பேர் அமர்ந்திருப்போம். அப்போது அங்கே சங்கரய்யா என்று ஒருவர் வேலை பார்த்தார். அவர் பெரியாரிடம், அய்யா என்றார். என்னப்பா என்பார் பெரியார். பெரியாரிடத்திலே சங்கரய்யா சொல்லுவார், இதோ பாருங்கள் இன்றைக்கு உங்களை ரொம்ப கிண்டல் செய்து இந்தப் பத்திரிகையிலே கார்ட்டூன் போட்டிருக்கிறார் என்று ஆத்திரத்தோடு சங்கரய்யா பெரியாரிடத்திலே அந்தப் பத்திரிகையைக் கொடுப்பார். பெரியார் அதை வாங்கிப் பார்த்து, ஏன் அதற்காக ஆத்திரப்படுகிறாய், இதையாவது போட்டார்களே என்று சந்தோஷப்படு. நம்மை எப்படியோ, திட்டியோ அல்லது நம்மை திருப்திப்படுத்த வேண்டுமென்று பாராட்டியோ, எப்படி செய்தி போட்டாலும், நம்மைப் பற்றி செய்தியே போடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தவர், போட்டுத்தான் தீர வேண்டும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்களல்லவா? அதற்காக சந்தோஷப்படு என்று சங்கரய்யாவிடத்திலே பெரியார் சொல்வார்.

**குடிநீர்த் திட்டப் பணிகள்**

அதைப்போலதான் அண்ணா ஒரு முறை சென்னை கடற்கரையிலே பேசும்போது சொன்னார். இன்றைக்குப் பத்திரிகைகளெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செய்திகளை ஒரு வரி, இரண்டு வரியாவது போடுகிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இந்த ஏடுகளெல்லாம் ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாதுரையும் அந்தக் கூட்டத்தில் பேசினார் என்று ஒரு வரியிலேதான் என்னுடைய செய்திகளைப் போடுவார்கள். அவர்கள் இன்றைக்கு மாறியிருக்கிறார்கள் என்றால் மாற்றத்திற்குக் காரணம் நான் அல்ல தம்பிமார்களே, நீங்கள் தான் அந்த மாற்றத்திற்கு காரணம் என்று அண்ணா அவர்கள் சொல்லுவார்கள்.

இப்போது திருச்சி நகரத்திலே நேற்றும் கூட்டம், இன்றைக்கும் கூட்டம், நான்கூட தம்பி நேருவிடத்திலே கேட்டேன். என்னய்யா, 24 மணி நேரத்திற்குள்ளாக ஒரே நகரத்தில் இரண்டு கூட்டங்களா? இரண்டு விழாக்களா? மக்கள் வருவார்களா? என்று கேட்டேன். அந்தக் கவலை உங்களுக்கு ஏன் என்று சொன்னார். நான் திருச்சியில் இரண்டு கூட்டமல்ல, திருச்சி மாநகரத்தில் ஒரே நாளில் மூன்று கூட்டங்கள் போட்டாலும் கவலைப் படமாட்டேன். மக்கள் வருவார்கள் என்றார். ஏனென்றால் இன்றைக்கு மக்களுக்கு தமிழகத்திலே இருக்கின்ற எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கை நட்சத்திரமாக தி.மு.கழகமும் அதனுடைய கூட்டணி அமைப்பும்தான் இருக்கிறது என்பதை நானும் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையில் இன்று நாம் இந்தப் பெரும் மைதானத்தில் கூடியிருக்கின்றோம். இது உழவர் சந்தையை ஒட்டிய மைதானம். அண்ணாநகர், உழவர் சந்தை மைதானம். இந்த உழவர் சந்தை



மைதானத்தை உபயோகத்திற்குத் தகுதியில்லாமல் கூட ஆக்குவதற்கு சில சில காரியங்கள் எல்லாம் நடைபெற்று ஆனாலும் தமிழகத்திலே 103 உழவர் சந்தைகள் செயல்பட முடியாத அளவிற்கு செய்யப்பட்டாலும், கடந்து 5 ஆண்டு கால ஆட்சியில் திருச்சி உழவர் சந்தை மாத்திரம் தப்பித்துக்கொண்டது என்பதை நான் கேள்விப்பட்டேன். அப்படி தப்பிய காரணத்தால்தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய மாநாடு போன்ற ஒரு கூட்டத்தைத் தாங்குகின்ற அளவிற்கு இந்த உழவர் சந்தை மைதானத்திலே நாமெல்லாம் குழுமியிருக்கின்றோம்.

144 கோடி ரூபாய் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணி ஆரம்பமாகி யிருக்கிறது என்று தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னார். ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகை ரூ.144 கோடி! 144 என்பது கொஞ்சம் மிரட்டுகின்ற எண். அதை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். தவறு செய்தால் ஒதுக்கப்பட்ட பணம் 144 என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என்று தவறு செய்ய எண்ணுகிறவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அல்லது அங்கத்தினர்களாக இருந்தாலும், அல்லது அன்பர்களாக இருந்தாலும், நண்பர்களாக இருந்தாலும் யாராக இருந்தாலும் 144 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மனதிலே வைத்துக் கொண்டு அதை ஒழுங்காக, செம்மையாக, சீராக, செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### வெள்ள சேதத் தடுப்புக்கு ரூ.87 கோடி

நண்பர்கள் எல்லாம் இங்கே குறிப்பிட்டதைப் போல் இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு, இன்னும் சொல்லப் போனால் கடந்த புயல் மழை தமிழகத்தைத் தாக்கிய போது திருச்சி மாநகரம் வெள்ளத்திலே மூழ்கிய போது நானும் கூட இடுப்பளவு தண்ணீரில் இந்தப் பகுதியிலே நடந்து வந்தேன். என்னை அழைத்து வந்தவர்கள், வேதனைப்பட்டார்கள், எந்த அளவிற்கு தலைவரை நனைய விட்டு, நீந்திச் செல்கிற அளவிற்கு நிலைமை ஏற்பட்டு, அதற்கு நாம் காரணமாக இருந்த விட்டோமே என்று கண் கலங்கினார்கள். கவலைப்படாதீர்கள், இந்தக் கண்ணீர் இப்போது பெருகியிருக்கிற தண்ணீரைத் துடைப்பதற்கு, இந்தப் பகுதியிலே வளத்தை உருவாக்குவதற்குப் பயன்படட்டும், அந்தப் பணியை ஆற்றுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

அப்போது உய்யக்கொண்டான் சீர்படுத்தப்பட வேண்டுமென்ற மனுக்களை நான் சென்ற திக்கெல்லாம் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் என்னிடம் அளித்தார்கள். தம்பி துரைமுருகன் அப்போது என் பக்கத்திலே இருந்த காரணத்தால் உடனடியாக துரைமுருகனிடம் சொல்லி, இந்த உய்யக்கொண்டான் ஆற்றை ஒழுங்குபடுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணித்தேன். அன்றைக்கு அவர் எடுத்த முயற்சி உடனடியாக பலிக்காமல் போனதற்குக் காரணம், நீங்கள் அதன் பின் உடனடியாக எங்களை வீட்டுக்கு அனுப்பி விட்டீர்கள், அது தான் காரணம்.

உய்யக்கொண்டான் வந்தால், உய்வதற்கு முடியும், திருச்சி மாநகரம் உய்யும், மக்கள் உய்வார்கள், ஏழையெளிய மக்கள் வாழ்கின்ற குடிசைகளுக்கெல்லாம் நற்கதி ஏற்படும் என்கின்ற அந்த நிலையில் நீங்கள் செய்த காரியம் நாங்கள் தொடர்ந்து ஆட்சியிலே அமர முடியாமல், உய்யக்கொண்டானை நாங்கள் தொடர முடியவில்லை.

ஆனால் இன்றைக்கு உய்யக் கொண்டானை மீண்டும் தொடருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, இன்னும் சொல்வேன், குடமுருட்டி கால்வாய்கள் வழியாக ஏற்படும் வெள்ள சேதத்தைத் தடுப்பதற்கு 87 கோடி ரூபாய்க்கு அரசாணை 27–9–2007 அன்று பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றைக்கு அரசு மீண்டும் வரும், உய்யக் கொண்டானும் வரும் என்று சொன்னேன். அரசு மீண்டும் வராததற்கு நான் காரணமல்ல, நீங்கள் காரணம். வராத காரணத்தால், உய்யக்கொண்டான் அப்படியே உட்கார்ந்துவிட்டது. இன்றைக்கு மீண்டும் வந்த காரணத்தால் உய்யக்கொண்டானுக்கு உய்வு ஏற்பட்டிருக்கின்றது. அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பணி தொடங்கப்படவுள்ளது.

அது மாத்திரமல்ல, கரூர், திருச்சி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் காவேரி, கொள்ளிடம் ஆகிய ஆற்றுக் கரையை பலப்படுத்த 207 கோடி ரூபாய்க்கு நபார்டு ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டிருந்தோம். இந்த நல்ல நேரத்தில் அந்த நல்ல செய்தியைச் சொல்லுகிறேன். அந்த ஒப்புதலும் நபார்டு மூலமாகக் கிடைத்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாலின் பேசியதை விட புதுச் செய்தி சொல்ல வேண்டுமல்லவா? அதனால் இதைச் சொல்லுகிறேன்.

## அழகாக சீர்படுத்தப்பட்டுள்ள குளம்

கட்டடப் பிரிவில் அடிக்கல் நாட்டும் புதிய புதிய திட்டங்களின் திறப்பு விழா மதிப்பீடு இன்றைக்கு 30 கோடி ரூபாய் ஆக இன்றைய தினம் பொதுப்பணித் துறையின் மூலமாக மட்டும் 118 கோடி ரூபாய்க்கு வேலைகள் தொடங்கப்படுகிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற பணிகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறோம். இங்கே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் மக்கள் பணியிலே நல்ல ஆர்வம் படைத்தவர். இளைஞர். அவர் ஒரு அழகான புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். ஒரு தொகுப்பு நூல். அந்த நூலில் பல வண்ணப் படங்கள், பளபளப்பான படங்கள்–வெறும் பளப்பளப்பு மாத்திரம் என்னைக் கவரவில்லை. என்னைக் கவர்ந்தவைகள், திருவரம்பூரில் வெட்டப்பட்டிருக்கின்ற குளம். மேம்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அந்தக் குளத்தைப் பார்த்தேன். மஞ்சத் திடல் குளத்தைப் பார்த்தேன். திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமப் பகுதியிலே இருக்கிறோமா? அல்லது சிகாகோ போயிருந்த போது, அங்கே அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் இருக்கிறோமா என்கின்ற அளவிற்கு அவ்வளவு அழகாக இந்தக் குளம் சீர்படுத்தப்பட்டிருக்கின்றது.

இப்படி இந்தப் புத்தகம் முழுவதும் குளங்கள், நீர்நிலைகள், வாய்க்கால்கள் எல்லாம் வளமாக எழிலோடு அத்தனையும் செம்மைப்படுத்தப் பட்டிருக்கின்றன, சீர்படுத்தப் பட்டிருக்கின்றன. இங்கு மாத்திரமல்ல நான் மாமல்லபுரம் பக்கத்திலே காஞ்சிபுரம் மாவட்டத்திலே சில பகுதிகளை இரண்டு வாரத்திற்கு முன்பு சென்று பார்த்தேன். தம்பி ஸ்டாலினும், நம்முடைய அருமை நண்பர் ஆர்க்காட்டார் அவர்களும், தம்பி துரைமுருகனும், தம்பி பொன்முடியும், தம்பி வேலுவும் என்னோடு வந்தார்கள். அவர்களோடு அந்தக் குளத்தைச் சென்று நான் பார்த்த போது எந்த அளவிற்கு அந்தக் கிராமம் எழில் பெற்றிருக்கிறது, வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறது. வசதி என்றால் சாதாரணமல்ல, அந்த ஊரிலே யாராவது இறந்து விட்டால் அவர்களைக் கொண்டு போய் புதைக்க அல்லது தகனம் செய்ய இந்த இரண்டு காரியங்களுக்காகக் கட்டப்பட்டிருக்கின்ற அந்த மேடை இருக்கிறதே, அந்த மேடைக்கு மேலே கட்டப்பட்டுள்ள மண்டபம் இருக்கிறதே, அதையெல்லாம் பார்த்தபோது நாமே கூட சாகலாம் போல் இருக்கிறது. அவ்வளவு அழகான எழில் மயமான அற்புமான வசதிகள் நிறைந்த மயானத்திற்கு யாராவது சென்றால், பிணத்தை எடுத்துக் கொண்டு போய்ப் புதைக்கவோ எரிக்கவோ சென்றால், செல்லுகின்ற ஊரார் அந்தக் கிராமத்து மக்கள் அங்கே உட்கார, ஓய்வு பெற, தண்ணீர் அருந்த ஏன் சாப்பிடக் கூட அவ்வளவு வசதிகளோடு, தகனம் செய்கின்ற இடம் அல்லது சமாதி வைக்கின்ற இடம் கூட அங்கே அமைக்கப்பட்டுள்ளது.

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அங்கேயுள்ள ஒரு குளம், பெரிய பணக்காரர்கள் வீட்டிலே உள்ள நீச்சல் குளத்தைப் போல அமைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எந்தத் திட்டத்திலே வந்தவைகள் என்றால் கிராம ஊராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக செய்யப்பட்டவை. அதைப் போல இப்போது பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – இந்த இரண்டு திட்டங்களும் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் நிறைவேறுகின்ற காரணத்தால், அந்தந்த பகுதிகளிலே இருக்கின்ற

கிராமப்புற மக்கள் எல்லாம் ஏற்றமிகு வாழ்வு காண்கிறார்கள். எழில் குலுங்கும் ஊர்களைக் காணுகிறார்கள், தோட்டங்களைக் காணுகிறார்கள். குரோட்டன்ஸ் செடியே பார்க்காதவர்கள் எல்லாம், தோட்டங்களிலே குரோட்டன்ஸ் செடிகளை வைத்து, அதைப் பார்த்து மகிழ்கிறார்கள். அதையெல்லாம் பார்க்கும் போது நமக்கும் அவர்கள் கொள்கின்ற மகிழ்வில் – ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றாரே அண்ணா, அதைப்போல கிராமப்புறத்திலே இருக்கின்ற அந்த ஏழைகளின் சிரிப்பில் நான் இறைவனைக் கண்டேன், கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு மாமல்லபுரம் பகுதியிலே நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட போது.

இது ஒரு மாமல்லபுரம் பகுதிக்கு மாத்திரம் போதாது. அதைப் போல ஒரு திருச்சி, திருவரம்பூர் பகுதிக்கு மாத்திரம் போதாது. தஞ்சையின் ஒரு வல்லம் பகுதிக்கு மாத்திரம் போதாது, தமிழ்நாடு முழுதும் இப்படிப்பட்ட நீர்த்தேக்கங்கள், வசதி வாய்ப்புகள், நகர்ப்புறத்திலே கிடைக்கின்ற அவ்வளவு வசதிகளையும் இந்தியாவின் முதுகெலும்பு என்று சொன்னாரே உத்தமர் காந்தி அடிகள், அந்த முதுகெலும்பாம் கிராமப்புறத்திலே இருக்கின்ற சாதாரண ஏழைக்கும் கிடைத்தாக வேண்டும். அப்போது தான் நாம் உண்மையான சுதந்திர இந்தியாவிலே வாழ்கிறோம் என்று பொருள். அப்போதுதான் நாம் உண்மையான தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு மத்தியில் வாழ்கிறோம் என்று பொருள். அந்த நிலையை நோக்கித்தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடைபோடுகின்ற நேரத்தில் தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னதைப் போல் ஆங்காங்கு சில இடையூறுகள், தடங்கல்கள் தோன்றலாம். இது சகஜம். அதற்காக நாம் நம்முடைய பணிகளை விட்டு விலகிட முடியாது.

வீட்டுக்குள்ளே தாய், பொங்கலுக்காக மா கோலம் போடுவாள். அப்படி மா கோலம் போடுகின்ற நேரத்தில், அவள் பெற்ற குழந்தை, இரண்டு வயது அல்லது மூன்று வயது குழந்தை விளையாட்டாக அல்லது விஷமத்தனமாக அந்தக் கோலத்தை ஒரு பக்கத்திலே அழித்துக்கொண்டே இருக்கும். அந்தக் கோலத்தை அழிக்கிறதே குழந்தை என்பதற்காக அந்தக் குழந்தையை அவள் அடிக்கமாட்டாள், அதற்காக குழந்தையைத் தூக்கி ஒரு புறத்திலே உட்கார வைத்துவிட்டு கோலத்தை அவள் தொடருவாள், கோலத்தைப் போட்டு முடிப்பாள். அதைப் போலத் தான் இந்த அரசு, இந்த ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர்கள், இந்த ஆட்சிக்கு துணையாக இருக்கின்ற தோழமைக் கட்சிகளின் நண்பர்கள் அத்தனை பேரும் கோலம் போடுகிறோம், சேர்த்து கோலம் போடுகிறோம், அப்படி போடுகின்ற அந்தக் கோலத்தை குழந்தைத் தனமாக யாராது அழிப்பார்களானால், பாவம் குழந்தை தானே என்று தூக்கி ஒரு புறத்திலே உட்கார வைத்து விட்டு, கோலத்தை முடிப்போமே தவிர, வீட்டை அலங்கோலமாக ஆக்கமாட்டோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலத் தான் நாட்டையும் நாங்கள் கவனிப்போம், வாழ வைப்போம். அதற்கு எங்களுக்கு தேவையான காலத்தை இயற்கை வழங்குமேயானால், அதைப் பயன்படுத்திக் கொள்வோம்.

இந்த ஆட்சி உடனடியாக விலக்கப்பட வேண்டும், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், இப்படிப்பட்ட அருமையான வசனங்களை சில பேர் பெரிய மனிதர்கள் குறிப்பாக பா.ஜ.க. வின் தலைவர்கள், அத்வானி போன்ற நண்பர்கள், வாஜ்பாயைத் தவிர மற்றவர்கள் – குடியரசுத் தலைவரிடம் சென்று கருணாநிதி ஆட்சியை உடனடியாகக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏன் தெரியுமா? இங்கே பேசினார்களே, அரிசி விலை கிலோ இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள், ஆகவே கலை – கருணாநிதி ஆட்சியைக் கலைத்து விடு – ஏன்? கிராமங்கள் தோறும் நீர் நிலைகள், குளங்களை வெட்டுகிறார்கள், ஆகவே கருணாநிதி ஆட்சியைக் கலைத்துவிடு. ஏன்? கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்கிறாய் என்று கேட்டால், அவர்கள் இலவச மின்சாரம் தருகிறார்கள், ஆகவே கலைத்துவிடு என்று ஏன் சொல்கிறார்கள் என்றால் மிக முக்கியமான காரணம், கோவில்களிலே அர்ச்சகர்களாக ஆதிதிராவிடர்களும் வரலாம் என்று சொல்லுகிறார்கள், ஆகவே கருணாநிதி ஆட்சியைக் கலைத்து விடு, ஏன் ஆதிதிராவிடர்கள் வந்தால் என்ன? கோவிலுக்குள்ளே நந்தன் வரவில்லையா? நந்தன் விதி விலக்கு. நாங்கள் அதை அனுமதிக்கவில்லை, இப்போதும் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள்.

## தமிழ்நாட்டை வாழவைக்கும் திட்டம்

தமிழில் அர்ச்சனை செய்யச் சொல்கிறான் கருணாநிதி, ஆகவே ஆட்சியைக் கலைத்து விடு என்கிறார்கள். இதையெல்லாம் விட முக்கியமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று கல்வியில், வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு இருந்ததை, இந்துக்களுக்கு மாத்திரமல்ல, முஸ்லீம்களுக்கும் உண்டு, கிறித்தவர்களுக்கும் உண்டு என்று ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்திருக்கிறான், ஆகவே அந்த ஆட்சியைக் கலைத்து விடு, அந்தச் சட்டம் தான் நீதி மன்றம் வரை போய், அது செல்லும் என்று தீர்ப்பளித்து விட்டார்களே, பிறகு ஏன் கலைக்கச் சொல்கிறாய் என்று கேட்டால், எங்களுக்குப் பிடிக்கவில்லை, நாங்கள் இந்துக்களைப் போல் கிறித்தவர்களை, முஸ்லீம்களை படிப்பறிவு உள்ளவர்களாக வேலைவாய்ப்புப் பெற்றவர்களாக இருப்பதை எங்களால் பார்க்க முடியாது. நாங்கள்

எல்லாம் இந்துக்கள். எங்களால் இதைத் தாங்கிக் கொள்ள முடியாது, ஆகவே ஆட்சியைக் கலைத்து விடு என்கிறார்கள்.

இவ்வளவிற்கும் மேலாகத்தான் நான் நேற்றைக்கு திருச்சியில் சொன்னதைப் போல, இன்று காலையில் வல்லத்தில் ஓரளவு விளக்கியதைப் போல் மிகப் பெரிய திட்டம், தமிழ்நாட்டை வாழ வைக்கக் கூடிய திட்டம், பிரமாண்டமான திட்டம், ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி ரூபாயில் நிறைவேற வேண்டிய திட்டம் – சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அல்ல, என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணா காலத்திலிருந்து இன்று வரையில் கேட்கப்படுகின்ற திட்டம், பல பொறியாளர்கள், பல விற்பன்னர்கள், வித்தகர்கள், விஞ்ஞானிகள், வரலாற்றுப் பேராசிரியர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொன்ன திட்டம் – அந்தத் திட்டம் வந்தால் தமிழ்நாடு வாழும். தமிழ்நாடு உலகத்திலே இருக்கின்ற வேறு பல நாடுகளைப் போன்ற ஒரு வல்லரசாக மாறக் கூட தமிழ்நாட்டிற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டின் வளம் பெருக சேது சமுத்திரத் திட்டம் தேவை, அப்போது தான் தமிழன் தமிழனாக நடமாட முடியும்.

ஒரு காலத்திலே திராவிடத்தின் உலகத் தொடர்புகள் என்பதைப் பற்றி அறிஞர் அண்ணா அவர்கள் எனக்கு ஆணையிட்டு திருச்சி மாநாட்டிலே பேசும்படி சொல்லி, இங்கே நான் பேசும்போது திராவிடத்தின் உலகத் தொடர்புகள் பற்றி 1956 ஆம் ஆண்டு திருச்சி மாநில மாநாட்டில் அந்தத் தலைப்பிலே பேசும்போது நான் குறிப்பிட்டேனே அந்தத் தொடர்புகள் எல்லாம் திராவிடத்துத் தொடர்புகள் எல்லாம் மீண்டும் நிலைநாட்டப்பட, மீண்டும் வர, நாம் வளர வாழ ஏழையெளியவர்கள், இல்லாதவர்கள், ஏதுமற்றவர்கள் அவர்கள் எல்லாம் வளம் பெற செல்வநாடுகளோடு போட்டி போடக் கூடிய அளவிற்கு நாமும் செழிப்படைய ஒரு திட்டம், ஒரு பெரிய திட்டம் வரப்பிரசாதம்போல் நமக்கு இயற்கை கொடுத்த திட்டம்–

அந்தத் திட்டம் நிறைவேறினால் தமிழன் தலைநிமிர்ந்து நிற்பான் என்று பொறாமை கொண்ட – அசூயை கொண்ட சிலபேர் இன்றைய தினம் அந்தத் திட்டத்தை இராமர் பெயரைச் சொல்லி அழிக்கப் பார்க்கிறார்கள், கெடுக்கப்பார்க்கிறார்கள். நாமும் இராமர் பெயரை அதற்காக தேவையற்ற முறையிலே பயன்படுத்தவில்லை. இராமருக்கும் அதற்கும் சம்மந்தமில்லை. இராமர் கோயிலிலே இருக்கிறார். அனுமார் கோயிலிலே இருக்கிறார். இராமர் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் பிள்ளையார் மாத்திரம் பிடிக்கிறாரா நமக்கு? பிள்ளையார் பிடிக்கவில்லை என்றால் தமிழ்நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே பிள்ளையார் சதுர்த்தி விழா நடைபெற்று வருகிறதா இல்லையா? அதையா போய் தடுத்தோம்.

## கடைசித் தமிழன் உள்ளவரை போராடுவான்

பிள்ளையார் சதுர்த்தி வேண்டாம் என்றா சொன்னோம். பெரியார் பிள்ளையார் சிலையை உடைக்க வேண்டும் என்று சொன்னபோதுகூட, பிள்ளையார் மீது எங்களுக்கு எந்தக் கோபமும் இல்லை. பிள்ளையாருக்கு தேங்காயும் உடைக்க மாட்டோம், பிள்ளையாரையும் உடைக்கமாட்டோம் என்று சொன்னவர் நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா. அந்த வழியிலே அரசியல் நடத்துகிறவர்கள் நாம். எனவே இராமர் மீது நமக்கு எந்தக் கோபமும் இல்லை. கோபம் இருப்பதாகக் காட்டிக் கொண்டு நம்முடைய அருமையான திட்டத்தை – நம்மை வாழ வைக்கக்கூடிய திட்டத்தை – வருங்காலத்திலே தமிழகத்தை செல்வ பூமியாக ஆக்கக்கூடிய திட்டத்தை, இப்போது கருவிலே அழித்துவிட வேண்டுமென்று ஒரு கூட்டம் – ஒரு குள்ளநரிக் கூட்டம், ஒரு குடிலர் கூட்டம் இன்றைக்கு இந்தியாவிலே குறிப்பாக தமிழ்நாட்டிலே அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா இந்தத் திட்டத்தை சேதுசமுத்திரத் திட்டத்தை வேண்டுமென்று வலியுறுத்தி போர்க்குரல் கொடுத்தபோது ஆமாம், இந்தத் திட்டம் வேண்டுமென்று சொன்னவர்கள் இன்றைக்கு வேண்டாமென்று சொல்வதற்குக் காரணம் இந்தத் திட்டம் வந்தால் சோனியா காந்திக்குப் புகழ் வந்துவிடும், இந்தத் திட்டம் வந்தால் மன்மோகன் சிங்கிற்குப் புகழ் வந்து விடும், இந்தத் திட்டம் வந்தால் கருணாநிதிக்குப் பெயர் வந்துவிடும் என்கின்ற நல்ல (?) பொறாமை உள்ளம் இவர்களெல்லாம் காந்தாரிகளாக மாறி அந்தத் திட்டத்திற்கு அணைபோட எண்ணுகிறார்கள்.

ஆனால் நான் சொல்கின்றேன், கடைசித் தமிழன் உள்ள வரை அந்தத் திட்டத்திற்காக போராடுவான்– வாதாடுவான் அந்தத் திட்டத்திற்காக தன்னை ஒப்படைத்துக் கொள்வான் என்பதை மாத்திரம் அந்தச் சூளுரையை மாத்திரம் இந்த மாநாடு போன்ற பொதுக் கூட்டத்தில் – பொதுவிழாவில் உங்களுக்கு எடுத்துச் சொல்லி நம்முடைய திட்டங்கள் – அரசின் செயல்திட்டங்கள், நலத்திட்டங்கள் இவற்றைப் பற்றியெல்லாம் நம்முடைய அமைச்சர் பெருமக்களும், நண்பர்களும் இங்கே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் (ஒலிபெருக்கி நின்றது) ஒலிபெருக்கிக்கு தடங்கல் வந்ததுபோல சேதுசமுத்திரத் திட்டத்திறகும் இடையில் தடங்கல் வந்துள்ளது. மீண்டும் இப்போது ஒலிபெருக்கி வந்துள்ளது. சேது சமுத்திரத் திட்டம் என்ற இனிய திட்டமும் மீண்டும் வந்தது என்ற தென்றலோடு கலந்த இனிய செய்தியும் நம்முடைய இதயங்களில் வீசும் என்ற அந்த நம்பிக்கையோடு உங்களிடம் இருந்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

# கடந்த ஓராண்டு கால கழக அரசு 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் மூலம் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் அறிவிப்பு

திருப்பெரும்புதூர் கெபாரோ பொறியியல் கம்பெனியின் அலுவலகங்களைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தருணத்தில் சுவராஜ்பால் அவர்கள் இங்கே இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர் தமிழகத்தின் நலனில் மிகவும் நாட்டம் கொண்டவராவார்.

## 1,500 தொழிலாளர்களுக்கு வேலை

இந்தத் திட்டத்தை விரைவாக அமல் நடத்தியமைக்காக கெபாரோ நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். கெபாரோ நிருவாகம் மேலும் இன்னொரு திட்டத்தை மோட்டார் தொழில் உதிரிபாகங்கள் தயாரிப்புக்காக ஒரகடம் பகுதியில் அமைக்கவிருக்கிறது. அதற்காக ரூ.300 கோடி முதலீடு செய்யவிருக்கிறது. இந்த இரண்டாவது திட்டத்திற்காக கெபாரோ நிறுவனம் தமிழக அரசுடன் 8.3.2007 அன்று ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒரகடம் திட்டம் 2008–ஆம் ஆண்டு பல்வேறு கட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த ஒரகடம் திட்டமும், திருப்பெரும்புதூர் நிறுவனமும் சேர்ந்து சுமார் 1,500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எங்களது அரசு மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில், தொழில் வளர்ச்சியைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. “சிப்காட்” வளாகத்தில் கெபாரோ நிறுவனம் அதன் உற்பத்தித் தொழிற்சாலையை அமைக்க முன்வந்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை பகுதியில் அவர்கள் கேட்டிருந்த 20 ஏக்கர் நிலம் சிப்காட்

நிறுவனத்தால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முன் முயற்சிக்காக கெபாரோ நிறுவனத்தைப் பாராட்டுகிறேன். அரசு அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்த முன் முயற்சிக்காக அளிக்கும்.

எங்களது அரசு கடந்த 2006–ஆம் ஆண்டு மே மாதம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு கெபாரோ உள்பட 11 நிறுவனங்களுடன் 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த பதினோறு திட்டங்களும் ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று நம்பப்படுகிறது. மேலும் பல திட்டங்கள் பேச்சுவார்த்தையில் உள்ளன. வருகின்ற மாதங்களில் நாங்கள் இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் பல்வேறு முதலீட்டுத் திட்டங்களை அறிவிக்க இருக்கிறோம்.

**திட்டங்கள் விரைந்து நிறைவேற்றம்**

நாங்கள் வெறுமனே புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதுடன் நிற்கமாட்டோம். எங்களது அரசு அந்தத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கிறது. அரசின் ஒற்றைச்சாளர முறை துரிதமாக்கப்பட்டுள்ளது. எங்களது அரசின் இந்தச் செயலூக்கம் கொண்ட அணுகுமுறையை எடுத்துக்கூற நான் கீழ்க்கண்டவற்றை உதாரணங்களாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாங்கள் 7.6.2006 அன்று அமெரிக்காவின் "மோட்டோரோலோ" நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் அவர்களுடைய திருப்பெரும்புதூர் ஆலையிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளாகவே உற்பத்தியைத் தொடங்கிவிட்டார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

14.9.2006 அன்று அமெரிக்காவின் 'டெல்' நிறுவனத்துடன் கம்ப்யூட்டர் பாகங்களைத் தயாரிக்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் வணிக ரீதியான உற்பத்தியை 2007–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கிவிட்டார்கள்.

19.9.2006 அன்று நாங்கள் தொழில் ரீதியான பின்தங்கிய பகுதியான செய்யார் என்ற இடத்தில் காலணி உற்பத்தித் தொழிற்சாலையைத் துவக்க "குரோத் – லிங்க் ஓவர்சீஸ்" லிமிடெட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். இந்தத் திட்டத்தின் மூலம் 15,000 பேர்களுக்கு, மிகப் பெரும்பாலும் கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தத் திட்டம் கட்டுமானப் பணியில் மிக முன்னேறிய நிலையில் இருக்கிறது. வரும் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதவாக்கில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

10.11.2006 அன்று நாங்கள் மின் அணுவியல் பொருட்களை மிக அதிக அளவில் உற்பத்தி செய்யும் கொரியா நாட்டைச் சேர்ந்த "சாம்சங்" நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். அவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை 2007–ஆம் ஆண்டு 6–ஆம் தேதி வணிக ரீதியில் உற்பத்தி செய்யத் துவங்கிவிட்டார்கள் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**உலகத்தரத்தில் உள்கட்டமைப்பு வசதிகள்**

நாம் மாநிலத்தின் மேலும் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் 2007–ஆம் ஆண்டுக்கான புதிய தொழிற் கொள்கையை வெளியிடப் போகிறோம் என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் கொள்கை பரந்த அளவிலான ஆலோசனைக்குப் பிறகு உருவாக்கப்பட்டது.

தொழில் அமைப்புகள் மற்றும் என் தலைமையிலான தொழில் அமைப்புகளின் தலைவர்களது ஆலோசனையிலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்தக் கொள்கை அனைத்துப் பிரிவினரின் நலன்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. எங்களது கவனம் தொழில்களின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு உலகத் தரத்திலான நவீன

*இதன் தொடர்ச்சி 45ஆம் பக்கத்தில்*




# எனக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ்நாட்டு வளர்ச்சிதான்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர்** அவர்களின் உரை

இன்று சேலத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு அரசு விழாவா? அல்லது வழக்கம் போல் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் நடத்திக் காட்டுகின்ற ஒரு அரசியல் மாநாடா? என்பது எனக்கும் புரியவில்லை, உங்களுக்கும் புரிந்திருக்க நியாயம் இல்லை, பலர் வியப்புறும் வண்ணமும், சுப்புலட்சுமி போன்றவர்கள் பொறாமைப்படுகின்ற வகையிலும், இந்த விழா நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

உள்ளபடியே இந்த விழாவில் ஒரு கோடி ரூபாயை சேலம் மாவட்ட தி.மு.கழகம் சார்பாக தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் கழக முன்னணியினர் பலரை கலந்துகொண்டு பெரியார் வழியில் ஆய்வு நடத்த, அண்ணா வழியில் ஆய்வு நடத்த ஒரு ஏற்பாட்டை அந்த ஒரு கோடி ரூபாயை முதலீடாகக் கொண்டு, வருகின்ற வட்டியிலிருந்து நடத்தவேண்டும் என்று கூறி அதை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு என் வாயிலாக இன்றைய தினம் வழங்கியிருக்கின்றார்.

இந்த மக்கள் நல்வாழ்வு நிதியளிப்பு விழா மாநாட்டில் இது மற்றொரு நிதியளிப்பு விழாவாகும். ஒன்று மக்கள் பிரச்சினைக்காக நடைபெற்ற நிதியளிப்பு விழா, அவர்களுடைய பொருளாதாரத் துறையில் அவர்களுடைய சமுதாயத் துறையிலே, அவர்கள் மேலோங்கி நிற்பதற்கு வாழ்வதற்கு வழியமைப்பதற்கு நடைபெற்ற நிதியளிப்பு விழா, என்னிடத்திலே வழங்கி பெரியார் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அந்த அறக்கட்டளைக்காக நிதியளிப்பு விழா, இப்பொழுது இருக்கின்ற மக்கள் பிரச்சினைக்காக அல்ல, இப்பொழுது வாழுகின்ற மக்களுக்காக அல்ல. எதிர்காலத்திலே, அதாவது வருங்காலத்திலே வாழப்போகிற மக்களுக்காக, இளஞ்செல்வங்களுக்காக, அவர்களுக்கு எத்தகைய பகுத்தறிவு நீரூற்றி அவர்களையெல்லாம். பசுமையாக வளர்க்க வேண்டும் என்பதற்காக அடிகோலுகின்ற ஆக்கப் பூர்வமான ஏற்பாடுகள் அது என்பதை நான் இங்கே உறுதிப்படுத்திக் கொள்கிறேன்.

## திராவிட இயக்க ஆட்சி

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் இப்படிப்பட்ட ஒரு ஆழமான முயற்சியிலே இன்றைக்கு ஈடுபட்டு அதை நிறைவேற்றியிருக்கிறார் என்பதை எண்ணும்போது நான் மற்ற நண்பர்களையும் கேட்டுக்கொள்கிறேன். ஆடம்பரத்திற்கு, ஆக்கப்பூர்வமற்ற வேலைகளுக்கு ஆரவாரம் என்று மாத்திரம் இடம் அளித்து பணத்தையோ அல்லது உழைப்பையோ செலவிடுவதைவிட எதிர்காலத் தலைமுறையை வாழவைக்க, இருண்டு கிடக்கின்ற சமுதாயத்தை விளக்கேற்றி வைத்து நடமாடச் செய்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களுடைய வழியிலே நடமாடச் செய்ய நாம் நம்முடைய உழைப்பை, நம்முடைய முயற்சியை, நம்முடைய அறிவை, ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு இந்த நாள் ஒரு தூண்டுதலாக இருக்கும் என்றும், அந்த ஊக்க உணர்வை தம்பி வீரபாண்டி ஆறுமுகம் இன்றைக்குச் செய்து காட்டியிருக்கின்ற இந்தக் காரியத்தின் மூலம் அனைவரும் பெற வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது எனக்கு என் பெயரால் அறக்கட்டளைகள் அமைத்து அதிலே ஆய்வரங்கங்கள் நடத்த வேண்டும் என்று நான் சொல்லவில்லை. பொதுவாக ஆய்வு அரங்கங்கள் நடத்தப்பட்டு அந்த மன்றங்களிலே பல்வேறு விஷயங்கள் அலசி ஆராயப்பட்டு, வாழ்ந்த தமிழன் வீழ்ந்தது ஏன்? அந்த வீழ்ந்த தமிழனை மறுபடியும் வாழவைப்பது எவ்வாறு என்ற இவைகளுக்கெல்லாம் விடை காணுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த இன்றைக்கு நாம் கொடியேற்றியிருக்கிறோம். அந்தக் கொடி சேலத்திலே ஏற்றுவது மிகமிகப் பொருத்தமான ஒன்று என்பதிலே இருவேறு கருத்துக்கு இடமில்லை.

திராவிட இயக்கம் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறது தமிழகத்தில். இது திராவிட இயக்கத்தின் ஆட்சி என்று ஒத்துக்கொள்ளாதவர்கள் சிலபேர் இருக்கிறார்கள். இந்த அரசை "மைனாரிட்டி அரசு" என்றும், இது எண்ணிக்கையிலே குறைந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் ஏளனத்திற்கு உரியதாக "மைனாரிட்டி அரசு" என்று அழைக்கப்படக்கூடிய அரசு என்று இன்றைக்கும் எழுதுகிறார்கள், பேசுகிறார்கள், அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றார்கள்.

## அருமையான பிரகடனம்

நான் கூட சட்டசபையிலே சொன்னேன். மைனாரிட்டி அரசுதான், அதை விரைவிலே நிரூபிப்போம் என்று சொன்னேன், இன்றைக்கு நம்முடைய கோ.க.மணி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். ஒரு அருமையான பிரகடனத்தை செய்துவிட்டு முதலமைச்சர் இங்கே வந்திருக்கிறார் என்று பாராட்டினார்கள். அவரைப் போலவே பல தலைவர்கள் நேற்றைய தினம் நான் வெளியிட்ட பிரகடனத்தை இன்றைக்குப் பாராட்டியிருக்கின்றார்கள். நேற்றைக்கு வரிசை வரிசையாக இஸ்லாமியப் பெரியோர்களும், கிறித்தவப் பெரியோர்களும் என் இல்லம் நாடிவந்து உள்ளம் திறந்து உவகை பொங்க என்னை வாழ்த்தியிருக்கின்றார்கள். எதற்குத் தெரியுமா? சொல்லித் தெரியவேண்டியதில்லை உங்களுக்கே தெரியும்.

நீண்ட நாட்களாக இருந்த வந்த ஒரு கோரிக்கையை இன்னும் சொல்லப்போனால் அன்றைக்கு ஜஸ்டிஸ் கட்சி ஆண்டபோது, நீதிக் கட்சியினுடைய ஆட்சி நடைபெற்ற போது எந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அன்றைக்கு இருந்ததோ, அது இடையிலே கவிழ்ந்து போய் மாறிப்போய், இருட்டடிப்புச் செய்யப்பட்டு இல்லாமல் போனதோ அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் படிப்பில், வேலைவாய்ப்பில் இஸ்லாமியர்களுக்கு எவ்வளவு இடம், பிராமணர்களுக்கு எத்தனை இடம், பிராமணர்கள் அல்லாதாருக்கு எத்தனை இடம், கிறிஸ்தவர்களுக்கு எத்தனை இடம், ஆதிதிராவிடர்களுக்கு எத்தனை இடம் என்ற நிலை ஜஸ்டிஸ் கட்சி ஆண்டபோது எத்தனை இடங்கள் இருந்ததோ அந்த இடம் ஏன் இருந்தது, எப்படி இருந்தது, எந்த வகையிலே பிரிக்கப்பட்டு இருந்தது என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து இடையிலே அதற்கு வந்த ஆபத்து என்ன, யாரால் வந்தது, எந்த நீதிமன்றத்தால் வந்தது, அந்த ஆபத்தை எதிர்த்து, காத்து இன்றைக்கு மறுபடியும் நம்மிடத்திலே அதனுடைய மூலப்பொருளை வழங்கியது யார்? அந்த மூலப்பொருளை பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு நாம் பெற்றிருக்கின்ற வெற்றியினுடைய ஒரு பகுதிதான் இஸ்லாமியர்களுக்கு கிறித்தவர்களுக்கு இரண்டு சமுதாயத்தினருக்கும் சேர்த்து 7 சதவிகிதம் கல்வியில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு என்பதாகும்.

இப்பொழுது புரிகிறது அல்லவா? நம்மை" மைனாரிட்டி அரசு" என்று சொன்னார்களே இஸ்லாமியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் மைனாரிட்டி சமுதாயம் என்று ஒரு பெயரே உண்டு. அந்த மைனாரிட்டி சமுதாயத்திற்காகப் பாடுபட்டு அவர்களுக்காக இன்றைக்கு இடஒதுக்கீடு செய்திருக்கிறோம் அல்லவா, அதனால்தான் நாம் மைனாரிட்டி அரசு என்பதற்கு மிகமிகப் பொருத்தமானோம். இந்தப் பெயரிட்டு அழைத்தவர்களுக்கு எங்களுடைய தாயார் தகப்பனார்கூட எங்களுக்கு இந்த பொருத்தமான பெயரை வைத்ததில்லை. இவர்கள் இந்தப் பொருத்தமான பெயரை "மைனாரிட்டி அரசு" என்று அழைத்தற்காக அவர்களுக்கு நாம் இந்த மாபெரும் மக்கள் வெள்ளத்திலிருந்து அவர்கள் இருக்கும் திக்கு நோக்கி நன்றி கூறிக்கொள்கிறேன். எங்கு இருக்கிறார்களோ தெரியாது? இருந்தாலும் அந்த திக்கு நோக்கி நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த இயக்கம், இந்த அரசு, இந்த அரசை நடத்துகின்ற இந்தக் கட்சி, தோழமைக் கட்சிகளுடைய உதவியோடு அவர்களுடைய ஆதரவோடு தேர்தலில் நின்று வென்று அவர்களும் நாங்களும் இணைந்து இந்த அரசை உருவாக்கி ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலமாக நடைபெற்று வருகின்றது. இந்த ஒன்றரை ஆண்டு காலத்திலே என்னென்ன வசதிகளை மக்களுக்குச் செய்கிறோம் என்பதிலே ஒரு பகுதிதான் இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சியினுடைய வெளிப்பாடு.

வீரபாண்டி ஆறுமுகம் எப்படியோ இவைகளையெல்லாம் சாதித்து விட்டார். இத்தனை காரியங்களை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் பொறாமைப்பட்டுப் பயனில்லை. அவரைப்போல் என்னையாரும் பிடிவாதமாக வந்து நெருக்கடி கொடுக்க வேண்டாமென்று யாருக்கும் சொல்லவில்லையே. யார் வந்தாலும் அவர்களோடு இணைந்து நானும் மக்களுக்காக அந்தத் தேவைக்காக அவர்களைப் போலவே பாடுபடத் தயாராக இருப்பவன் தான். அவர் சொன்னார், சேலம் இரும்பாலை உருக்காலை எப்படி வந்தது என்பதைச் சொன்னார். சேலம் உருக்காலை வந்த ஆண்டு நான் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஆண்டு. அந்த ஆண்டு தான் சேலம் உருக்காலை வந்தது. அது என்னுடைய கனவு அல்ல. அண்ணா கண்ட கனவுகளில் ஒன்று.சேலம் உருக்காலை.

சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி நிலக்கரி இவைகளெல்லாம் அண்ணா கண்ட கனவுகள். இவைகள் எல்லாம் தமிழ்நாட்டிற்கு வருமேயானால், தமிழ்நாட்டிலே மேலும் வளம் கொழிக்கும். மேலும் தொழில்வளம் உருவாகும். மேலும் பொருளாதாரப் பூரிப்பு ஏற்படும் என்பது அண்ணாவுடைய திட்டம்.

## எழுச்சி நாள்

அதற்காகத் தான் ஜூன் மாதம் அண்ணா முதலமைச்சர் ஆகிறார் என்றால் ஜூலை மாதம் தமிழ்நாடு முழுவதும் "எழுச்சி நாள்" கொண்டாடுகிறார்கள். எதற்கு? ஒரு முதலமைச்சர் ஆட்சியின் தலைவர் எங்களைப் போன்றவர்களை யெல்லாம் அமைச்சர்களாக ஆக்கி, அருகிலே உட்காரவைத்துக் கொண்டவர். அவர் முதலமைச்சராக இருந்து அறிக்கை விடுத்து தமிழ்நாடு முழுதும் எழுச்சிநாள் கொண்டாடுங்கள் என்று அறிக்கை விடுகிறார். எதற்கு?

நெய்வேலி நிலக்கரி வேண்டும். அங்கே இரண்டாவது சுரங்கம் வெட்டப்படவேண்டும். அதைப்போலவே சேலத்தில் உருக்காலை வேண்டும், அதைப் போலவே சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம் போன்ற திட்டங்கள் வேண்டும். இவைகளுக்காக எழுச்சிநாள் கொண்டாடுவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தாலும் பரவாயில்லை. ஆட்சிக்கு வந்தது மாத்திரம் எங்களுக்கு நிம்மதியைக் கொடுக்கக் கூடிய ஒன்றல்ல. அதுவே எங்களுடைய கனவல்ல. ஆட்சிக்கு வந்திருப்பதே நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்து கேட்ட கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளத்தான் என்று தான் "எழுச்சி நாள்" கொண்டாடச் சொன்னார்.

அந்த "எழுச்சி நாள்" கொண்டாடினோம். தம்பி ஆறுமுகம் சொன்னதைப்போல் அண்ணா மறைந்த பிறகு டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்களுடைய மாநாடு – இன்னும் சொல்லப்போனால் எல்லா மாநில முதலமைச்சர்களும் கலந்துகொண்ட தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம். அந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பாக அப்போதுதான் முதலமைச்சராக ஆகியிருக்கிற நான், என்னோடு நண்பர், அமைச்சர் மதியழகனும் சென்று கலந்து கொள்கிறோம். அங்கே வரைவு ஏடுகள் தரப்படுகின்றன. இந்த ஐந்தாண்டு என்னென்னத் திட்டங்கள் என்று. ஒவ்வொரு மாநிலத்திலும் என்னென்னத் திட்டங்கள் வகுக்கப்படவிருக்கின்றன என்ற வரைவு ஏடுகள் தரப்படுகின்றன.

## இரண்டு கோரிக்கைகள்

தமிழ்நாட்டை புரட்டிப் பார்க்கிறேன். அதில் ஏதேதோ திட்டங்களெல்லாம். சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தைக் காணவில்லை, சேலம் தொழிற்சாலையைக் காணவில்லை. வரிசையாக ஒவ்வொரு முதலமைச்சரிடமும் கேட்டு வருகிறார்கள். என் வரிசை வருகிறது. என்னைப் பார்க்கிறார்கள். நான் எழுந்து எங்களுடைய சேலம் திட்டம் இல்லாத இந்த ஐந்தாண்டுத் திட்ட வரைவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராகயில்லை என்று சொல்லிவிட்டு வெளியே வருகிறேன்.

நான் அப்போது முதலமைச்சர் வேலைக்கும் புதிது. அந்தக் கூட்டத்திற்கும் புதிது. அப்போது தான் சி.சுப்பிரமணியம் சொன்னார். இப்படியெல்லாம் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வெளிநடப்பு செய்யக் கூடாது. அது மரபு அல்ல என்று சொன்னார். எனக்கு "டெல்லி மரபு" எல்லாம் அப்போது தெரியாது. இப்போதல்லவா டெல்லி மரபு தெரிகிறது. நாடாளுமன்றத்தையே நடத்தவிடாமல் செய்கிறார்களே. அது அல்லவா டெல்லி மரபு இப்பொழுது. எனக்கு இந்த மரபெல்லாம் தெரியாதய்யா, எனக்குத் தெரிந்ததெல்லாம் தமிழ்நாட்டு வளர்ச்சி தான் அந்த வளர்ச்சியிலே ஒன்றாக நான் சேலத்தைச் சொல்வேன் என்று சொன்னேன்.

ஆனால், அந்த நாளில் நான் எடுத்துரைத்த கோரிக்கை இரண்டு. ஒன்று சேலம். மற்றொன்று



வங்கிகளை தேசியமயம் ஆக்கவேண்டும் என்பது. அப்போது பிரதமர் இந்திராகாந்தி துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய். இந்திராகாந்தி அம்மையார் நான் சொல்வதை புரிந்து கொண்டு அதை வரவேற்பதைப் போல் பேசினார். ஆனால் உறுதியளிக்கவில்லை. நான் சொன்னதை இந்திராகாந்தியை விட தெளிவாகப் புரிந்து கொண்ட மொரார்ஜி தேசாய், வங்கிகளை தேசியமயமாக ஆக்கமுடியாது. இதெல்லாம் வீண் கற்பனை. வங்கிகளை தேசியமயமாக்கினால் இந்தியா சொர்க்கலோகமாக ஆகிவிடுமா என்று கேட்டார். இது அன்றைக்கு நடந்தது.

### சேலம் தொழிற்சாலை

ஆனால் அடுத்த வாரம் எனக்கு டெல்லியில் பிரதமரிடமிருந்து அழைப்பு வந்தது. என்ன அழைப்பு தெரியுமா? சேலம் தொழிற்சாலைக்கு நாங்கள் அனுமதி கொடுக்கிறோம். அதைப்பற்றி பேச டெல்லிக்கு வா என்று அழைப்பு வந்தது. டெல்லிக்குச் சென்றேன். அப்போது நம்முடைய அருமை நண்பர் ராஜாராம் அவர்களும், அங்கேயிருந்தார். இருவரும் இந்திராகாந்தி அம்மையாரைச் சந்தித்துப் பேசினோம். உடனடியாக அந்த அனுமதிக் கடிதத்தை அம்மையார் என்னிடம் கொடுத்தார். ‘நீங்கள் வந்து திட்டத்தைத் தொடங்கி வைக்கவேண்டும்’ என்று கேட்டேன், அதற்கும் வந்தார், தொடங்கி வைத்தார். அதுதான் இப்பொழுது உருக்காலையாக மாற்றப்பட வேண்டும் என்ற நம்முடைய அடுத்த கோரிக்கைக்கு இலக்காயிருக்கின்ற சேலம் தொழிற்சாலை.

நாங்கள் பல நேரங்களில் நானும் தம்பி ஆறுமுகமும் மற்றவர்களும் அந்த வழியாகச் சென்றிருக்கின்றோம். பார்த்திருக்கின்றோம். இந்தப் பகுதியே இன்றைக்கு புதுக்கோலம் கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். அதற்கு முன்பும் பார்த்திருக்கின்றோம், அந்தத் தொழிற்சாலை இருந்த இடத்தை, இப்பொழுது இருக்கிற இடத்தைப் பார்க்கிறோம். தொழிற்சாலை வந்ததற்கே இவ்வளவு பெரியமாற்றம் சேலத்திலே ஏற்பட்டிருக்கிறது. சேலத்திலே வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சேலத்திலே ஒரு புது வளம் குலுங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு பொருளாதார மேன்மை உருவாகியிருக்கிறது. அது இன்னும் நேர்த்தி ஆக்கப்பட்டால் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடிகிறது.

ஆகவே ஒரு மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தேவைகள் நிறைவு செய்யப்பட்டாலும், அதனை ஆராய்ந்து அதற்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் சேலத்தினுடைய இரும்புத் தொழிற்சாலை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். அதைப்போல சேலத்திலே மருத்துவமனை. இந்த மருத்துவமனை தம்பி ஆறுமுகம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போலவும் ஏடுகளிலே வெளிவந்திருக்கின்ற செய்திகளைப் போலவும், விளம்பரங்களில் வந்திருக்கின்ற தகவல்களைப் போலவும். அந்த மருத்துவமனை நவீனமாக, மிகத் தூய்மையாக உருவாக விருக்கிறது. அதற்கு மாநில அரசும் ஒரு பகுதி பங்கினை அளிக்கிறது. மத்திய அரசும் பெரும்பகுதி நிதி தருகிறது. இரண்டு அரசும் சேர்ந்து அந்த மருத்துவமனையை இங்கே உருவாக்குகிறார்கள் என்பதை நாம் பார்க்கும் பொழுது பிறகு மீண்டும் மீண்டும் என்று சொல்வது கூடத் தவறு. அப்பொழுதும் எனக்கு அண்ணாவின் நினைவுதான் வந்தது. வராத நாளில்லை, இருந்தாலும் சிறப்பாக இந்தச் செய்தியை படிக்கிறபோது அண்ணாவின் நினைவு வந்தது.

### அண்ணாவின் பொன்மொழிகள்

அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் காஞ்சி பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதினார். அந்த கட்டுரையினுடைய தாத்பரியம் என்னவென்றால் :

“நாம் நீண்ட காலமாக மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநில சுயாட்சியென்றால் மத்திய அரசுக்கு எதிரானதல்ல. இந்தியா முழுமையும் இருக்கின்ற மாநிலங்கள் கூட்டாட்சி அமைப்பில் உருவாகி அது இந்தியாவினுடைய இறையாண்மையை

ஒப்புக்கொண்டதாக கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஏற்படையதாக ஆட்சியை அமைக்கவேண்டும். இதுதான் தம்பி மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்ற கோரிக்கையினுடைய அர்த்தம்'' என்று அண்ணா சொல்லிவிட்டுச் சொல்லுகிறார்,

"அதற்காக தம்பீ, இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட் சொன்னதைப் போல நான் மத்திய அரசோடு மோதிக் கொள்ளமாட்டேன். மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து நல்ல கருத்துக்களை ஆராய்ந்து மக்களுக்குத் தேவையானவற்றை யோசித்து இருவரும் சேர்ந்து மக்களுக்குப் பாடுபட வேண்டும். மோதுதல் கூடாது மோதுகின்ற போக்கை நாம் என்றைக்கும் கடைப்பிடிப்பவர்கள் அல்ல. ஆகவே மத்திய மாநில உறவுகள் என்பது மோதுதல் இல்லாமல் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை''

அண்ணா அதிலே அழகாகக் குறிப்பிடுகிறார். அந்த வேதவாக்கைப் போன்ற அண்ணாவின் பொன்மொழிகள், இன்றளவும் என்னுடைய உள்ளத்திலே பதிந்து, எனக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

### மருத்துவமனை

அதனால் தான் மோதுதல் இல்லாமல் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். மாநில அரசு, மத்திய அரசு இரண்டுக்கும் இடையிலே எந்தவிதமான கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், அந்தக் கருத்து வேறுபாடுகளை அறநெறியில், அறவழியில், சாத்வீகமான முறையில், ஜனநாயக வழியில் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்காக போர்க் குணத்தைக் காட்டலாம். சேலத்திலே இந்த ரயில்வே நிலையத்திற்காக போர்க் குணத்தை நீங்கள் காட்டவில்லையா? அதைப்போல! அதனால் வெற்றி பெறவில்லையா? அதைப்போல்! அந்த உரிமைகளை நிலைநாட்டலாம். அதற்காக மாநில அரசு, மத்திய அரசுக்கு எதிர்ப்பாகத்தான் இருக்கவேண்டும் என்றல்ல. மோதிக்கொள்ளாமல், காரியங்களை இருவரும் சேர்ந்து சாதிக்கலாம். அதற்கு அடையாளமாகத் தான் இங்கே மருத்துவமனைவரை, மத்திய அரசின் நிதியைக் கொண்டும், மாநில அரசு நிதியைக் கொண்டும், இன்னும் சொல்லப்போனால், தம்பி ஆறுமுகம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல மாநிலத்தின் மூலமாகத் தரப்படுகின்ற பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள நிலத்தை இந்த நிலம், நிதி இவைகளைச் சேர்த்து மத்திய, மாநில அரசுகள் எப்படி இந்தத் திறப்புவிழா அல்லது இந்தத் தொடக்கவிழா ஒரு மருத்துவமனைக்காக நடத்தப்படுகிறதோ அதை நாம் மறந்துவிடக்கூடாது.

அந்த நிலையிலே தான் மத்திய, மாநில அரசுகளுடைய போக்கிலும், நிருவாகத்திலும் மக்கள் பிரச்சினையை அணுகுகின்ற முறையிலும் இருந்திட வேண்டும் என்பது என்னுடைய ஆசை.அந்த ஆசை நிறைவேறுகின்ற வகையிலே தான் இங்கே தம்பி ஆறுமுகம் எடுத்துக்காட்டியதைப்போல நம்முடைய மருத்துவமனைக்கும் மத்திய நிதியும், மாநில நிதியும் சேர்த்து இரண்டுபேரும் சேர்ந்து இதைச் செய்திருக்கிறோம். அதனால் தான் மத்திய அரசினுடைய சுகாதார அமைச்சர் அன்புமணியும் இதில் கலந்து கொள்வார் என்று நான் எதிர்ப்பார்த்தேன். நம்முடைய அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அன்புமணிக்கு உடல் நலமில்லாத காரணத்தால் அவர் வரமுடியவில்லை என்று எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அது நேற்றைக்கு எனக்குக் கிடைத்தது. அவர் வரவில்லை என்றாலும் கூட பலபேர் எதிர்பார்த்தார்கள். அன்புமணி வரவில்லையா? கோ.க.மணியும் வரமாட்டார். எந்த மணியும் வரமாட்டார்கள் பாருங்கள், பாருங்கள். சேலத்து விழா என்னாகிறது. அவ்வளவு தான் "படார்'' பா.ம.க. –தி.மு.க. "படார்'' என்று பத்திரிக்கைகளெல்லாம் பேனாவை வாள்களாக ஆக்கிக் கொண்டு, சாட்டைகளாக ஆக்கிக்கொண்டு தயாராகயிருந்தார்கள்– பாவம் அவர்களுடைய வாயிலே மண் விழுந்தது. அப்படியொரு நிகழ்ச்சி அவர்கள் எதிர்பார்த்ததைப் போல நடைபெறவில்லை. நாம் எதிர்பாத்ததைப் போலத் தான் நடந்திருக்கிறது.

### வாக்குறுதிகள் நிறைவேற்றம்

எங்களுக்குள்ளே ஆயிரமிருக்கலாம், எங்களுக்குள்ளே பல தகராறுகள் இருக்கலாம், சண்டைகள் இருக்கலாம். ஆனால், நீ வந்து நுழைய நாங்கள் இடம் தரமாட்டோம். நீ என்பது, கட்சிகளை அல்ல. நீ என்பது வஞ்சகம், சூது, பொறாமை, சூழ்ச்சி இவைகள் வந்து நுழைய நாங்கள் இடம் தர மாட்டோம். நாங்கள், நாங்களாகவே இருப்போம். நாங்கள் எங்களைக் காப்பாற்றிக்கொள்ள கற்றிருக்கிறோம். நாங்கள் எதிரி யார்? நண்பர் யார்? என்பதையும் புரிந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய மூலக்கொள்கையே தமிழ்நாட்டிற்கு ஒரு நல்லாட்சி வேண்டும் என்பது தான். ஒரு நல்லாட்சி வேண்டும், இருக்கிற ஆட்சியை மாற்றிவிட்டு ஒரு புது ஆட்சி கொண்டுவர வேண்டும். அது பொன்னான ஆட்சியாக இருக்க வேண்டும். அது நல்லாட்சியாக இருக்க வேண்டும். ஊழல் ஆட்சியாக இருக்கக் கூடாது என்றுதானே நாங்கள் கூட்டணி அமைத்தோம். அந்தக் கூட்டணியினுடைய ஆட்சி தானே இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியின் மூலமாக நடைபெற்ற நல்ல காரியங்கள், மக்களுக்கான சாதனைகள், மக்களுக்கான நல்ல உதவிகள், இவைகளெல்லாம் நாங்கள் தேர்தல் நேரத்திலே தேர்தல் அறிக்கையினால் இந்தியாவிலேயே ஒரு கட்சியினுடைய தேர்தல் அறிக்கை கதாநாயகனாகக் கருத்தப்படுகிறது என்று மத்தியில் உள்ளவர்களே பேசினார்களே. அப்படிப்பட்ட தேர்தல் அறிக்கையிலே என்னென்ன வாக்குறுதிகளை அளித்தோமோ அவைகளையெல்லாம் ஒன்று தவறாமல் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். சிலபேர் தேர்தல் அறிக்கையிலே சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்றார்கள். இன்றைக்கு சேது சமுத்திரம்

திட்டத்திற்கு அவர்கள் தான் முதல் எதிரிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய தேர்தல் அறிக்கைக்கும், அவர்களின் இன்றைய நடவடிக்கைக்கும் ஏதாவது சம்மந்தம் உண்டா? அன்றைக்கு சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வந்தே தீருவோம் என்று தோள்தட்டியவர்கள், வீறாப்பு பேசியவர்கள் இன்றைக்கு எங்கே போனார்கள்? நாங்கள் தான் அதைக் கண்டுபிடித்தவர்கள், சேது சமுத்திரத் திட்டத்தையே முதன் முதலிலே சொன்னவர்களே நாங்கள் தான், அதற்காக 45 மணி நேரம் நாடாளுமன்றத்திலே பேசியவர்கள் நாங்கள் தான் என்றெல்லாம் புயலென சீறினார்களே, அந்தப் புயல் போன இடம் என்ன? எங்கே போய்ச் சேர்ந்தது அணிவகுத்துக் கிளம்புகிறார்கள், ஆகா, ஊகு என்றெல்லாம் பேசுகிறார்கள், நான் அவர்களைக் கேட்கிறேன்,17 இலட்சம் வருடங்களுக்கு முன்பு இராமாயணம் நடந்ததாகச் சொல்கிறீர்கள், அதிலே இராமர் என்பது ஒரு அவதாரமே அல்ல, இராமர் என்று ஒருவர் இல்லையென்று மத்திய சர்க்கார் சார்பிலேயே அது ஒரு கற்பனைக் கதாபாத்திரம் என்று உச்ச நீதிமன்றத்திலே எழுதிக் கொடுத்து விட்டு, நேற்றைக்கு எழுதிக் கொடுத்து, இன்றைக்கு அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்கள் என்றால்– ஆட்சி கிடக்கட்டும், கேவலம் ஆட்சி, நாம் ஏற்றுக்கொண்ட பகுத்தறிவு என்ன ஆவது? நாம் ஏற்றுக் கொண்ட சுயமரியாதைக் கொள்கை என்ன ஆவது? அந்தத்



அந்தப் புயல்? இப்போது யார் சொல்லுகிறோம்? நாமல்லவா? சேது சமுத்திரத் திட்டத்திற்காக தேர்தல் நேரத்து வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம், உழைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்கான ஆய்வுகளிலே ஈடுபட்டிருக்கிறோம். அதைத் தடுப்பதற்கு வருகின்றவர்கள் யார்? அது வேண்டுமென்று அப்போது சொன்னவர்கள். அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோமென்று சொல்லி மக்களிடம் வாக்குப் பெற்றவர்கள், இன்றைக்கு அந்தத் திட்டத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் மறந்துவிடக்கூடாது. இராமர் பாலத்தைக் காட்டி 17 இலட்சம் வருஷத்திற்கு முன்பு இராமாயண காலத்தில் இராமர் பாலம் கட்டினார், அந்தப் பாலத்தை இடித்தால் நாங்கள் சும்மாவிட மாட்டோம் என்று பா.ஜ.க.வினர், புராணிகர்கள் இன்றைக்குப் போர்க்கொடி தூக்கியிருக்கிறார்கள், கூட்டம் போடுகிறார்கள், ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்,

தன்மான உணர்ச்சி என்ன ஆவது? நேற்று வரையில் இராமாயணம் ஒரு கற்பனை என்று சொன்னவர்கள், சொன்னதற்கு ஆதாரம் தந்தவர் சாதாரணமானவர் அல்ல, பண்டித ஜவகர்லால் நேரு. நேருவே சொன்னார், இராமாயணம் நடந்த கதையல்ல, இராமாயணம் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடைபெற்ற போராட்டத்தை வைத்து எழுதப்பட்ட ஒரு கற்பனை என்று பண்டித நேருவே சொன்னார். அந்த நேருவை இன்றைக்குத் தூக்கி எறிந்து விட்டு, இராமர் இருந்தார் என்றும், அவர் பாலம் கட்டினார் என்றும் அந்தப் பாலத்தை இடிக்கக் கூடாதென்றும் சொல்கிறார்கள். நேற்று என்னிடம் ஒருவர் சந்தித்தே பேசினார். கடவுள் எல்லாம் இருக்கட்டும், இராமர் எல்லாம் இருக்கட்டும், லெட்சுமணன் எல்லாம் இருக்கட்டும், அந்தப் பாலம் அணுகுண்டு தயாரிக்கின்ற ஒப்பற்ற உலோகத்தை அடக்கிக் கொண்டிருக்கின்ற பாலம், அதை இடிக்கக் கூடாது, அது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும் என்று சொன்னார்.

நான் சொன்னேன், நாங்கள் நாளை முதல் இந்தப் பேச்சை விட்டுவிடுகிறோம், நீங்கள் மாத்திரம் ஒரு கூட்டம் போட்டு, இந்த உண்மையை அங்கே சொல்லுங்கள், நாங்கள் இராமர் பெயரைப் பயன்படுத்துவது, அந்தப் பாலத்தின் மீதுள்ள பக்தியினால் அல்ல, அதிலே தோரியம் இருக்கிறது. அது அணுகுண்டு தயாரிக்கப்பயன்படுவது, அது ஆயிரம் ஆண்டுகளுக்கு இந்தியாவைக் காப்பாற்றும், இராமருக்காக இராமன் பாலம் அல்ல, அந்தத் தோரியத்திற்காகத் தான் இராமர் பாலம் என்ற உண்மையை நீங்கள் ஊரறிய ஒரு கூட்டத்திலே உரைத்தால், மறுநாளே நாங்கள் உங்களிடத்திலே மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, உங்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன், முடியுமா? என்று கேட்டேன்.

நாங்கள் கட்சி நடத்த வேண்டாமா? என்று அவர் சொன்னார். அவர்கள் கட்சி நடத்த வேண்டுமாம், பா.ஜ.க.வை நடத்த வேண்டுமாம், இந்து மகா சபையை நடத்த வேண்டுமாம், அதற்கு நாம் தான் இளிச்சவாயர்களாம். தி.மு.கவும், பா.ம.கவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் – இந்தக் கட்சிகள் தான் இளிச்சவாய் கட்சிகளாம். நாமெல்லாம் ஏமாறவேண்டுமாம். இவர்கள் எப்படியோ அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாம். போரை ஆரம்பித்து விட்டார்கள், முடிக்கத் தெரியாமல் விழிக்கிறார்கள். ஆகவே நம்மிடம் வந்து பேரம் பேசுகிறார்கள்.

## சிறந்த திட்டம்

இது நாட்டைக் கெடுக்கக் கூடிய, நாட்டின் வளத்தைக் கெடுக்கக் கூடிய ஒரு பெரிய பொருளாதார விஷயத்தைப் புரிந்துகொள்ளாத, புத்திசாலித்தன மற்றவர்களுடைய கேலிக்கூத்து, எவ்வளவு காலமாகச் சொல்லி வருகிறோம்? இந்தச் சேது சமுத்திரத் திட்டம் மாத்திரம் நிறைவேறினால், கப்பல் போக்குவரத்து இலங்கையைச் சுற்றி வரத்தேவையில்லை. இப்போது இலங்கையைச் சுற்றிக்கொண்டு தான் கப்பல் போகிறது. 500 மைல் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கான பொருளாதாரச் செலவு எவ்வளவு? இந்தப் பாதை அமைத்து விட்டால் குறுக்கே போகலாம். இலங்கைத் தீவைச் சுற்றிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே நம்முடைய பயணச் செலவும் குறைவு, தூரமும் குறைவு, சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலே சிறந்த திட்டம் என்று வல்லுனர்கள், விஞ்ஞானிகள், பொருளாதார மேதைகள் அத்தனை பேரும் அறிவித்த பிறகு கடவுள் பெயரைச் சொல்லி சொல்லுகிறார்கள்.

அதே அடிப்படையில் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தில் முன்னாள் முதல் அமைச்சரும், தேர்தல் நேரத்திலே தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக சேதுசமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவோம் என்று எழுதி வாக்களித்தவருமான ஜெயலலிதா உச்ச நீதிமன்றத்திலே இராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்று வழக்கு போட்டிருக்கிறார். இவர்களுடைய கட்சிக்குப் பெயர் அண்ணாவின் பெயர்! அண்ணா, உனக்காக நாங்கள் வெட்கப்படுகிறோம். உனக்காக நாங்கள் அழுகிறோம், உனக்காக நாங்கள் துயரப்படுகிறோம், உனக்காக நாங்கள் முக்காடு போட்டுக் கொள்கிறோம். நாங்கள் எல்லாம் உயிரோடு இருக்கும் போது, உன்பெயரைச் சொல்லி உன்னை ராமருக்கு அடிமையாக ஆக்குகிறார்களே என்பதை எண்ணி நாங்கள் வெட்கப்படுகிறோம்.

## மலை போன்ற உறுதி

''கம்பரசம்'' எழுதிய அண்ணாவே – இராமாயண ஆராய்ச்சி''எழுதிய பெரியாரே, உங்கள் பெயர்களை எப்படியெல்லாம் இன்றைக்கு களங்கப்படுத்துகிறார்கள், அவர்களும் ஒரு கட்சி நடத்துகிறார்கள், நாங்களும் இருக்கிறோம் உயிரோடு. உன்னுடைய தம்பிமார்கள், பெரியாரின் தொண்டர்கள் என்று பெயர் சொல்லிக் கொண்டு இருக்கிறோம்.

இதையெல்லாம் நான் இந்தப் பெரிய விழாவிலே அரசியலாக ஆக்குகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. இந்தச் சமுதாயம் – நம்முடைய இனத்திற்காகப் பேசப்படுகிற பேச்சு. இங்கேதம்பி அறுமுகம் ஒரு கோடி ரூபாய் கொடுத்து ஆய்வு நடத்தப்போகிறோம் என்று சொன்னாரே, அப்படி நடத்துகின்ற ஆய்வுகளிலே இதுவும் ஒரு ஆய்வு தான், இந்த ஆய்வின் வெளிப்பாடுதான். அதைத் தான் நான் இங்கே சொல்லுகிறேன்.

ஆகவே நாம் திருந்துவோம், நம்முடைய நாட்டைத் திருத்துவதற்கு முன்பு. நம்முடைய நாட்டு மக்களைத் திருத்துவோம், நம்முடைய நாட்டை வல்லரசுகளில் ஒன்றாக ஆக்க வேண்டுமேயானால், மக்களை வீரர்களாக ஆக்க வேண்டும், விவேகிகளாக ஆக்க வேண்டும், விஞ்ஞான உலகிலே அவர்களை உலவ விட வேண்டும். இப்படிப்பட்ட தவறான தத்துவார்த்தங்களுக்கெல்லாம் அவர்களை தாசர்களாக ஆக்காமல் பாதுகாப்போம். அந்த உறுதியை இது போன்ற விழாக்களிலே, சேலத்திலே நாம் எடுத்துக் கொண்டால், சேலத்திலே எடுக்கின்ற உறுதி, மாறாத உறுதியாக, மலை போன்ற உறுதியாக, யாரும் வெல்ல முடியாத உறுதியாக, அசைக்க முடியாத உறுதியாக இருக்கும் என்று சொல்லி, இவ்வளவு பெரியவாய்ப்பை எனக்குஏற்படுத்திக் கொடுத்த என்னுடைய அருமைத் தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் உங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்..

சேலம் மாநகரில் 14.9.2007 அன்று நடைபெற்ற அதிநவீன சிறப்பு மருத்துவமனை, தகவல் தொழில்நுட்பப் பூங்கா, பெரியார் பல்கலைக்கழக கலை அறிவியல் கல்லூரி (மேட்டூர்), மேட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவற்றின் அடிக்கல் நாட்டுவிழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
அவர்கள் ஆற்றிய உரை



மாண்புமிகு முதலமைச்சர்
கலைஞர் அவர்களிடம்,
மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை
அமைச்சர்
திரு.தங்கம் தென்னரசு அவர்கள்,
புதுடெல்லியில் இந்தியா டுடே சார்பில்
நடைபெற்ற ஸ்டேட் ஆப் ஸ்டேட்
கான்கலேவ்–2007 நிகழ்ச்சியில்
"நுகர்வோர் சந்தை மற்றும்
முதலீடுகளில் முன்னேறிய மாநிலமாக"
தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு
முதலமைச்சர் சார்பாக பெற்ற
விருதுகளைக் காண்பித்தார்.(17.9.2007)




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னிலையில், தமிழக அரசின் சார்பில் சிப்காட் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் என்.கோவிந்தன் – கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் சார்பில் அதன் நிருவாக இயக்குநர் திரு.சுனில் பஹிலாஜனிக்கும், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தமிழக அரசின் தொழில்துறைச் செயலாளர் திரு.சக்திகாந்த தாஸ்,இ.ஆ.ப., உடனிருந்தார். (12.9.2007)

36ஆம் பக்கத்தின் தொடர்ச்சி



உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதாகும்.

சாலைக் கட்டமைப்பு வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது. நாங்கள் மேலும் மேம்பட்ட தொடர்புகளை உருவாக்கிக் கொடுப்பதற்காக கோயம்பேடு – மதுரவாயல் – சுங்குவார்சத்திரம் நெடுஞ்சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்ற மத்திய அரசுடனும், தேசிய நெடுஞ்சாலைக் கழகத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

இந்தப் பகுதிகளில் மேம்பாடு என்பது, உள்ளூர் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் என்று நாங்கள் உறுதியாக எதிர்பார்க்கிறோம். அவர்கள் இந்த வெற்றி சகாப்தத்தின் பகுதியாக இருந்து, இந்த வசதிகளால் கிடைக்கும் புதிய வேலைவாய்ப்புகளின் ஆதாயங்களைப் பெற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

எனவே நான் கெபாரோ மற்றும் புதிய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்கும் அனைத்துத் தொழிற்சாலைகளும், உள்ளூர் வேலை வாய்ப்புகளை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய தேர்ந்தெடுத்தமைக்காக நான் கெபாரோ நிறுவனத்தை மீண்டும் பாராட்டுகிறேன். உலகம் முழுவதும் இருந்து பல்வேறு நிறுவனங்கள், இங்கே முதலீடு செய்து நீண்டகால பயன்பெற்றது போல் கெபாரோ நிறுவனமும் தமிழ்நாட்டில் முதலீடு செய்ததற்காக நான் அவர்களை மீண்டும் பாராட்டுகிறேன். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மகுடத்தில் மேலும் ஒரு அணிகலனாக கெபாரோ பரிணமிக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, முனைவர் க.பொன்முடி, கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன் மற்றும் ஆ.கிருஷ்ணசாமி, எம்.பி., டி.யசோதா, எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சித் தலைவர் தா.துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*திருப்பெரும்புதூர் அருகே சுங்குவார் சத்திரத்தில் ரூ.300 கோடி மதிப்பிலான கெபாரோ நிறுவனத்தின் கார் உதிரிபாகங்கள் தொழிற்சாலையை 4.10.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரை.*




# தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி அளவு ரூ.20 ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டது

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி**
அவர்களின் உரை

**செ**ன்னை நந்தம்பாக்கத்தில் 'கனெக்ட் – 2007' எனும் தலைப்பில் 17.9.2007 அன்று நடைபெற்ற நிகழ்வில் கூட்டத் தொடரைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :–

'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்பது தான் எப்போதுமே எனது தாரகமந்திரமாக இருந்து வந்துள்ளது.

சரியாக ஓராண்டுக்கு முன்னால் 'கனெக்ட் – 2006' என்ற தலைப்பில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்டபோது, அறிவால் உந்தப்பட்ட அமைப்பை உருவாக்கியும், தொழில் முனைப்பை முடுக்கிவிட்டும், 2011ஆம் ஆண்டுவாக்கில் இந்தியா தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் 25 விழுக்காடு உற்பத்திப் பங்கினை அடையும் வகையில் சமூகரீதியில் இணைந்த வளர்ச்சியை மேம்படுத்தி தமிழ்நாடு தெற்காசியாவின் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கேந்திரமாக உருவாகும் என்ற தொலைநோக்குத் திட்டம் பற்றிப் பேசினேன்.

இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை வென்றெடுப்பதில் நாங்கள் தொய்வின்றி முன்னேறி வருகிறோம் என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தகவல்களும் அதை உறுதிப்படுத்துகின்றன. தமிழ்நாட்டிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி அளவு ரூபாய் இருபதாயிரம் கோடியைத் தாண்டிவிட்டது. இது கடந்த ஆண்டை விட 45 சதவீதம் அதிகமாகும். மாநிலம் முழுவதும் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை தங்களது செயல்பாட்டை – சென்னையில் மட்டுமின்றி மாநிலத்தின் இதரப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி வருகின்றன.

கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஏற்றுமதி அளவு அதிகமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தற்போது ஏற்றுமதிக்காக விருதுகள்




பெற்றுள்ள மென்பொருள் நிறுவனங்களை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

மென்பொருளில் மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளதுடன், தமிழ்நாட்டில் மின்னணுவியல் வன்பொருள் உற்பத்தித் துறையும் வளர்ந்து வருகிறது.

இந்த மென்பொருள் – வன்பொருள் இணைப்பு உலகத்தில் தனிச் சிறப்பு உடையது. நமக்கான இலக்கை நாம் அடைய முடியும் என்ற உறுதியான நம்பிக்கையை இது அளிக்கிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலம்**

'கனெக்ட் – 2006' நிகழ்வில் பங்கேற்ற உங்களில் பலருக்கு, கடந்த ஆண்டு எனது உரையில் என்ன கூறினேன் என்பது நினைவிருக்கும். அதை நினைவுபடுத்தி இப்போது எடுத்துக் கூறுகிறேன்.

"தகவல் மற்றும் தொடர்புத் தொழில் நுட்பமானது, (ICT) இதுவரை தொடாதவர்களைத் தொடுவதற்கும், அணுகப்படாதவர்களை அணுகுவதற்கும், சமுதாயத்தில் இதுவரையில் விலக்கி வைக்கப்பட்டிருந்தவர்களை இணைந்த வளர்ச்சிக்குள் கொண்டு வர உகந்த வாய்ப்புகளை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்று அப்போது கூறியிருந்தேன்.

இந்த நம்பிக்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில் நாங்கள் இரு முனை உத்திகளை உருவாக்கியுள்ளோம். ஒருபுறம், கோவை, மதுரை, சேலம், ஓசூர், நெல்லை ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான (ITES) சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைத்து பூகோள ரீதியிலான இணைப்பைக் கொண்டு வருகிறோம்.

மறுபுறம், இந்த மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் சேருவதற்கு உதவும் வகையில் தனிச் சிறப்புடன் கூடிய திறமை வளர்ச்சிக்கான முன் முயற்சிகளைத் தொடங்குகிறோம்.

தமிழ்நாடு தகவல் தொடர்பு, தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் மற்றும் நிறைவு செய்யும் பள்ளி ஆகியவை, உருவாகி வரும் பல்வேறு முயற்சிகளில் இரண்டாகும். திறமை மேம்பாடு என்பது எனது அரசின் முன்னுரிமையாக உள்ளது. இவற்றைக் கொண்டு மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம். இந்த முன் முயற்சிகளில் செயலாக்கத்துடன் பங்கு பெறும்படி இந்தியத் தொழில் கூட்டமைப்பினரையும் (CII) மற்றும் இங்குள்ள அனைவரையும் வரவேற்கிறேன்.




## தொழிற்கல்விக்கு சிறப்பு நடவடிக்கை

நாம் அனைவருமாகச் சேர்ந்து, வேலைகள் கிடைப்பது சில உயர்தர நிறுவனங்கள் அல்லது முன்னேறிய குழுக்களைச் சார்ந்தவர்கள் போன்றோருக்கு மட்டுமின்றி அனைவருக்கும் வெளிப்படையான இணைந்த வளர்ச்சிக்கான தொரு மாதிரியை உருவாக்குவோம்.

இந்த வளர்ச்சி வேகத்தைத் தக்க வைத்துக்கொள்ள, கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துவதற்குப் பெருமளவு முதலீடுகள் தேவை என்பதை நான் அறிவேன். தமிழ்நாட்டில் பொதுவாக தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக தகவல் தொடர்புத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவ உலகத்தரத்திலான கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு எங்களது அரசு கடமைப் பட்டுள்ளது.

அதே நேரத்தில், மாநிலத்திலுள்ள மனிதவள ஆதாரங்கள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும் என்பதையும் நான் உணர்ந்துள்ளேன். என்னுடைய முன்முயற்சியால், மத்திய அரசு சென்னைக்கு அருகில் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முறைக்கான இந்திய தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை அமைத்து வருகிறது. மேலும் மதுரையில் கூடுதலாக ஒரு இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி.) நிறுவனமும், திருச்சியில் இந்திய அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமும், (ஐ.ஐ.எஸ்.ஈ.ஆ.) கோவையில் இந்திய நிருவாகவியல் கல்வி நிறுவனமும் (ஐஐஎம்) அமைக்கும்படி மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டுள்ளேன். மாநிலத்தில் தொழிற்கல்வி முறையை வலுப்படுத்துவதற்கு சிறப்பு நடவடிக்கைகளை எங்களது அரசு எடுத்துள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் தகுதி வாய்ந்த பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களின் திறமையை மேம்படுத்த பயிற்சி மிகவும் தேவையானதாகும். மாணவர்களுக்கும் தொழில்களுக்கும் பயனளிக்கும் வகையில் பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பயிற்சி நிறுவனங்களை அமைப்பதில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு (CII) முன்னணி வகிக்க முடியும். மாநில மொழி

கணினியியல் துறையில் ஏற்பட்டுள்ள முக்கியத்துவம் வாய்ந்ததொரு வளர்ச்சியைப் பற்றி எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**தமிழுக்குப் புதிய கணினி முறை**

கடந்த ஆண்டு கனெக்ட் – 2006 நிகழ்வின் போது தமிழ் கணினியியலில் புதிய தரங்களைக் கொண்டு வர வேண்டிய தேவை பற்றிய பரிந்துரைகளை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அளித்தது. இந்தத் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழுக்குப் புதிய கணினி முறை உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வார்த்தைகளைவிட செயல் உரத்து ஒலிக்கும் என்பார்கள். இதுவரையில் எங்களது நடவடிக்கைகள் முன்னேறிச் செல்ல வேண்டும் என்கிற எங்களது மனஉறுதியை எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் பயன்கள் மிகவும் திருப்திகரமாக இருப்பினும், இந்தப் பெருமையில் மனநிறைவு அடைந்து நாங்கள் வாளா திருக்கவில்லை. நமது பயணம் தொடர்கிறது.

பட்டினி, தேவை, வேலையின்மை மற்றும் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிலிருந்து விடுபட்ட தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு இன்னமும் நாங்கள் நெடுந்தூரம் செல்ல வேண்டியுள்ளது. நாம் அனைவரும் இணைந்து தமிழ்நாட்டையும்,தமிழக மக்களையும் அனைத்துத் துறைகளிலும் முதன்மை நிலைக்குக் கொண்டு செல்வோம்.

தமிழகத்தில், மோசர் பேர் நிறுவனம் ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அதன் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் தீபக்பூரி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறைவாக இந்த கனெக்ட் – 2007 கருத்தரங்கை தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

---

## ஆதிதிராவிடர் நலன்

- *அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில், பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும், குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் குறைவாகவும் உள்ள ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவ, மாணவிகளில் மாவட்டம் ஒன்றுக்கு 10 பேர் வீதம் 30 மாவட்டங்களிலிருந்து 300 மாணவ / மாணவிக்ள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நற்பெயர் பெற்றுள்ள தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு மாணவ/மாணவிக்கு இரண்டு வருடங்களுக்கு ரூ.56,000 வீதம் 300 மாணவ / மாணவிகளுக்கு ரூ.168 இலட்சம் செலவு மேற்கொள்ள அரசு முடிவு செய்து இத்திட்டத்தை நடைமுறைபடுத்தி வருகிறது.*
- *துப்புரவுத் தொழில் பணியாளர்களுக்கு சுயதொழில் போன்ற மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு "தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம்" அமைத்துள்ளது.*
- *ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதி மாணவ/மாணவியருக்கு போர்வை வழங்க ரூ.112 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் மூலம் 1,06,055 மாணவ / மாணவிகள் பயன் பெற உள்ளனர்.*

செய்தியாளர் கூட்டத்தில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களின் அறிவிப்பு (21.9.2007)

# அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள்

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

## கதர்த் தொழிலாளருக்குக் கைகொடுப்பீர்!

அண்ணல் காந்தியடிகளின் எண்ணப்படி தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்களின் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது.

அண்ணல் காந்தியடிகள் அறிமுகம் செய்த கதர்த் துணிகளின் உற்பத்தியையும், பயன்பாட்டினையும் அதிகரித்து கிராமப்புற மக்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்கி, அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்திடவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

மேலும், கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப் பொருள்களையும், இதர வசதிகளையும் பயன்படுத்திப் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்திடவும் உதவுகிறது.

கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான கைவினைஞர்களின் வாழ்க்கைக்குத் துணை நிற்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து அனைத்து கதர்த் துணி இரகங்களுக்கும் ஆண்டு முழுதும் வழங்கி வரும் 30 விழுக்காடு தள்ளுபடியினைப் பயன்படுத்திக் கதர்த் துணிகளை அதிக அளவில் வாங்கிப் பயன்படுத்திக் கதர்த் தொழிலாளருக்குக் கைகொடுப்பீர் என மாணவ, மாணவியர் அரசு ஊழியர்கள், ஆலைத் தொழிலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நன்னாளில் அன்புடன் வேண்டுகிறேன்.

**மு. கருணாநிதி**

*வாழ்த்துவோம் வாழ்த்துவோம் காந்தியடிகளை வாழ்த்துவோம்!!*
*உடுத்துவோம் உடுத்துவோம் கதர் ஆடையை உடுத்துவோம்!!*

# கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு

# உத்தமர் காந்தி ஊராட்சி விருது

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்



கிராம ஊராட்சிகளுடைய பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு, அவற்றின் செயல்பாடுகளில் போட்டியுணர்வை ஏற்படுத்தி துரிதப்படுத்தும் நோக்கத்துடன், அவை மேலும் சிறப்பாகச் செயல்பட வழிவகை செய்திட, கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாட்டின் அடிப்படையில், அவை மேற்கொண்டுள்ள புதுமையான முயற்சிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் கிராம ஊராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுத் தொகையாக ரூபாய் 5 இலட்சம், கேடயம் ஆகியவையும், ஊராட்சித் தலைவர்களுக்கு அவர்களின் தனிநபர் திறன் அடிப்படையில் பதக்கம் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும் என்று 11.8.2006—அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

இந்த மாநில அளவிலான விருது 2001—2006—ஆம் ஆண்டு வரையிலான கிராம ஊராட்சிகளின் சிறப்பான செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் என்று அரசு ஆணையிட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கிராம சுயாட்சியை வலியுறுத்திய காந்தியடிகள் பெயரினை நினைவூட்டும் வகையில் இந்த விருதிற்கு "உத்தமர் காந்தி ஊராட்சி விருது" என்று பெயர் சூட்டியுள்ளார்.

மாநில அளவில் சிறப்பான முறையில், புதுமையான திட்டங்களை முன் மாதிரியாகக் கொள்ளத் தக்க வகையில் செயல்படுத்தி சாதனை நிகழ்த்தியுள்ள 124 கிராம ஊராட்சிகள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டன. இவற்றிலிருந்து 46 கிராம ஊராட்சிகளை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், தலைமையில் அமைக்கப்பட்ட குழு தேர்வு செய்தது.

இந்த 46 கிராம ஊராட்சிகளிலும், ஊரக வளர்ச்சி (பயிற்சி) இயக்குநர், தலைமையிலான குழுவினர் நேரடியாக ஆய்வு செய்து 2006—2007 ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்குத் தகுதியுடைய 15 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தனர்.

விருது பெறுவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 15 கிராம ஊராட்சிகளில், 8 ஊராட்சிகளில் கடந்த முறை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர்களே தற்போதும் தலைவராக உள்ளனர். இவர்களுக்கும், இதர 7 கிராம ஊராட்சிகளின் முன்னாள் மற்றும் தற்போதைய தலைவர்கள் 14 பேருக்கும் ஆக மொத்தம் 22 தலைவர்கள் 11—10—2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை, கேடயம், பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின்வரும் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது.

இராமநாதபுரம், மைக்கேல்பட்டினம் ஊராட்சி–திருமதி சே. சேசுமேரி, சேலம், சின்னனூர் ஊராட்சி– ஏ. சேகர் திருவாரூர், கீழத்திருப்பாலக்குடி ஊராட்சி – தி.மு. மதிவாணன், கன்னியாகுமரி, திக்கணங்கோடு ஊராட்சி – எஸ். அருளானந்த ஜார்ஜ், திருச்சி, வாளாடி ஊராட்சி – செ. ஜெயச்சந்திரன், நாமக்கல், காடாச்சநல்லூர் ஊராட்சி– கே.எம். முனியப்பன், காஞ்சிபுரம், பாப்பநல்லூர் ஊராட்சி– திருமதி ப. கற்பகம், திண்டுக்கல், கொ. கீரனூர் ஊராட்சி– ஆ.மு. நாட்டுதுரை, கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும்.

பரிசுத் தொகை மற்றும் கேடயம் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின் வரும் ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், ஒடந்துரை ஊராட்சி, எஸ். லிங்கம்மாள், ஈரோடு, திண்டல் ஊராட்சி, கு. மணிமேகலை சிவகங்கை, நாலுகோட்டை ஊராட்சி, சு. ப. இராஜேஸ்வரி, வேலூர், காட்டுப் புதூர் ஊராட்சி, க. விஸ்வநாதன், தேனி, லெட்சுமிபுரம் ஊராட்சி, வீ.ல.கி. ஜெயபாலன், கடலூர், எம். கொளக்குடி ஊராட்சி, கே. பாபுராஜன், விழுப்புரம், ஜக்கம்பேட்டை ஊராட்சி, கே. கம்சலா,

மேலும், சிறப்பாகச் செயல்பட்டமைக்காக பதக்கம் மற்றும் நற்சான்றிதழ் ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பின்வரும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், ஒடந்துரை, ஊராட்சி, ர. சண்முகம், ஈரோடு, திண்டல் ஊராட்சி, தி.செ. குமாரசாமி, சிவகங்கை, நாலுகோட்டை ஊராட்சி, என்.ஒ.வி.எஸ்.ராமநாதன், வேலூர், காட்டுப்புதூர் ஊராட்சி, அ. சந்திரிகா, தேனி, லெட்சுமிபுரம் ஊராட்சி, பி. ஞானமணி, கடலூர், எம். கொளக்குடி ஊராட்சி, பா. கலையரசி, விழுப்புரம், ஜக்கம்பேட்டை ஊராட்சி, கே.பிரேம்குமார், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கி, பாராட்டி கௌரவிக்கப்பட்ட இந்த கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் 22 பேருக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துகளைத் தெரிவித்து தேநீர் விருந்து அளித்தார்.

* * *

# பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர். மு. கருணாநிதி** அவர்கள் உரை.





**கா**வலர்களுக்கென சுமார் 900 வீடுகள் அமைக்கப்பட்டு, அதனைத் திறந்து வைக்கின்ற அரிய பணியினை நான் பெறுகின்ற வாய்ப்பினை வழங்கிய காவல் துறையினருக்கு என்னுடைய நன்றியை, நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நல்லரசுக்கு அடையாளம்**

ஒரு அரசில் எந்தத் துறையானாலும், தொடர் பணிகள் இடையிலே விட்டுப்போகாமல் நடைபெற வேண்டுமென்பது நியதி. அதுதான் ஒரு அரசுக்குரிய நியாயம், முறை. ஏற்கெனவே தி.மு.கழக அரசு பதவிப் பொறுப்பிலே இருந்த போது, அனுமதிக்கப்பட்ட திட்டங்கள், அடுத்து வந்த அரசினால் கைவிடப்பட்டன என்றாலுங்கூட, இந்த அரசைப் பொறுத்தவரையில் நல்லவைகள் எதுவாக இருந்தாலும், அதை யார் அனுமதித்திருந்தாலும், யார் அதற்கு ஒப்புதல் கொடுத்திருந்தாலும், அவர்கள் கொடுத்த ஒப்புதலை நாம் எதற்காக நிறைவேற்ற வேண்டுமென்று இல்லாமல், அந்த ஒப்புதலை மதித்து, யார் அந்தப் பணிகளுக்கு, பயன்களைப் பெறுவதற்கு உரியவர்களோ அவர்களிடத்திலே அந்த நன்மைகளை ஒப்படைப்பதுதான் ஒரு நல்லரசுக்கு அடையாளம் என்ற அந்த வகையில், கடந்த காலத்திலே 2003இல் அனுமதிக்கப்பட்ட சில காரியங்களையும் இந்த அரசு செய்திருக்கிறது. அதிலே ஒன்று தான் இன்றைக்கு இங்கே திறந்து வைக்கப் பட்டிருக்கின்ற இந்த வீடுகள். திறந்து வைத்த காரணத்தாலேயே, இவைகளையெல்லாம் நானே கட்டிக் கொடுத்தேன் என்று காவலர்களும் எண்ணமாட்டார்கள், நீங்களும் எண்ணத் தேவையில்லை, நானும் அப்படி எண்ணிக் கொள்பவனல்ல. சிலர் அப்படி எண்ணிக் கொள்ள வேண்டுமென்று கருதினால், அதற்கு வழி விடக் கூடியவனும் அல்ல நான்.

காவலர்களுடைய பணி என்பது நாட்டிலே நடைபெறுகின்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பது – தடுப்பது இனி நடைபெறாமல் அவர்களைத் தண்டிப்பதற்கேற்ற பொறுப்புக்கு மாத்திரம்தான் அனுமதிக்கப்பட்டவர்கள். இதற்கு மாத்திரம்தான் நாங்கள் ஊதியம் பெறுகிறோம், மற்ற நீதிமுறைகளை, நெறிமுறைகளைக் கையாளுவது, அதற்கேற்ற வகையில் நடந்து கொள்வது என்பது மாத்திரமல்ல. அவர்களுக்கு ஒரு அரசில் தாங்கள் இந்தப் பொறுப்புகள் எங்களுக்கு உரியவைகள் என்று யார் சொன்னாலும் அவைகளை ஏற்க முடியாதென்று அரசுத் துறையிலே இருக்கின்ற யாரும் சொல்லக் கூடாது.




**சமூகத் தொண்டர்கள்**

எல்லா காரியங்களையும் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய எல்லாப் பணிகளையும் இந்தப் பணிக்கு என்று நாம் விடப்பட்டிருக்கிறோம், அடுத்த பணிக்குச் செல்லக் கூடாது என்றில்லாமல் பொதுப்பணியை அனைவரும் ஏற்று, ஆற்றி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். நான் காவல் துறையைச் சேர்ந்தவன், திருட்டை மாத்திரம்தான் கண்டுபிடிப்பேன், கொலையை மாத்திரம்தான் கண்டுபிடிப்பேன், கொள்ளை அடிப்பவர்களை மாத்திரம் தான் பிடிப்பேன், அவர்களைத் தான் கைது செய்வேன் என்றில்லாமல், சமுதாயத்தின் தேவைகள் அனைத்தையும் பொறுப்போடு கவனிக்கின்ற அந்தப் பணியையும் காவலர்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டவன். அந்த எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்னை காவல்துறை நண்பர்கள் நடந்து காட்டியிருக் கிறார்கள். உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், திடீரென்று சென்னையிலே குப்பைகூளங்கள் கோபுரம் போல் உயர்ந்து விட்டன. இதை நான் பத்திரிகைகளிலே பார்த்துத் திடுக்கிட்டேன். குப்பை வீடுகள் கோபுரங்களாக உயர வேண்டும் என்று "பராசக்தி"யில் வசனம் எழுதினேன். ஆனால் இன்றைக்கு குப்பைகளே கோபுரங்களாக உயர்ந்து நிற்கிறதே, என்ன செய்வது என்ற வருத்தத்தோடு, நான் அந்த வருத்தத்தை மாற்றிக் கொள்கின்ற அந்தத் கணத்திற்கு முன்பே சென்னை காவல் துறையிலே உள்ள நண்பர்கள், அவர்கள் காவலர்களாக இல்லாமல், தங்களை சமூகத் தொண்டர்களாக ஆக்கிக் கொண்டு, சென்னை மாநகரத்திலே அவர்களே அந்தக் குப்பைகளையெல்லாம் அகற்றிய அந்தக் காட்சியை நான் தொலைக்காட்சிகள் மூலமாகக் கண்டேன், கேள்விப்பட்டேன். அவர்களை யெல்லாம் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நான் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நாம் இந்தப் பொறுப்பிலே இருக்கிறோம், இன்னொரு பொறுப்பை நாம் கவனிக்கக் கூடாது என்று இல்லாமல், பொதுவாக பொதுப்பணியில் எந்தப் பொறுப்பானாலும் மக்களுக்காற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுகின்ற மனப்பக்குவத்தை எல்லோரும் பெற வேண்டும். அந்த வகையில் சென்னைக் காவல் துறை நண்பர்கள் – எல்லா நண்பர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்ததை நான் எண்ணி எண்ணி வியப்படைகிறேன், அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்.

அதனால் தான் இந்தத் திறப்பு விழாவிற்கு நான் வரவேண்டுமென்று கேட்ட மாத்திரத்தில், அவர்களுக்கு சாக்குப் போக்குச் சொல்லாமல் உடனடியாக நான் இங்கே வந்து கலந்து கொண்டதற்குக் காரணமே, அந்த நன்றியை உணர்த்துவதற்காகத் தான் வந்தேன் என்பதை தெரிவித்து இப்படி நான் அடிக்கடி நன்றி கூறுகின்ற சந்தர்ப்பத்தை எனக்கு நீங்கள் அளிக்க வேண்டும். அதைப்போல பொதுமக்களும், குப்பையைப் போடுபவர்களும் அந்தச் சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடாது, குப்பையில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், எல்லோருக்கும் கடமை இருக்கிறது, எப்படி போலீஸ்காரர்களுக்கு அந்தக் குப்பைகளை அகற்றுவதற்கான கடமை உந்தித் தள்ளியதோ, அதைப் போல அவைகள் குவியாமல் இருப்பதற்கான அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மாநகராட்சிக்கு மாத்திரமல்ல, பொதுமக்களுக்கும் இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைத்து நம்முடைய நகரத்தை சீர்மிகு நகரமாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்த இல்லங்களில் குடி புகுவோர் நல் வாழ்வு வாழ்ந்திட என்னுடைய இனிய வாழ்த்துக்களை அவர்களுக்கெல்லாம் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
13.10.2007 அன்று சென்னை மாம்பலம் –
காவலர் குடியிருப்பு வளாகத்தை திறந்து
வைத்து ஆற்றிய உரை.

❖ ❖ ❖

# 2,82,674 அமைப்புசாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் உதவித்தொகை

தமிழகத்தில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் நோக்கில் ஒவ்வொரு வகைத் தொழிலுக்கும் ஒரு நல வாரியம் தொடங்கப்பட்டு, அந்த நல வாரியங்களின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் 7.8.2006 அன்று தொடங்கப்பட்டு 71 இலட்சத்து 5 ஆயிரத்து 307 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 1 கோடியே 59 இலட்சத்து 85 ஆயிரத்து 391 தொழிலாளர்கள் உறுப்பினர் களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப்பட்டு, அதன் மூலம் பெண் உறுப்பினர்களின் / மகள் திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவித் தொகை; ஆண் உறுப்பினர்/மகன் திருமணத்திற்கு 3,000 ரூபாய் உதவித் தொகை; உறுப்பினரின் மகன்/மகளின் கல்வி வளர்ச்சிக்கு முதுகலைப் படிப்பு வரை விடுதிச் செலவுடன் படிப்பு உதவித் தொகை; கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, 60 வயதானவர் களுக்கு முதியோர் ஓய்வூதியம் மாதம் 400 ரூபாய்; இயற்கை மரணங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய், விவசாயப் பணிகளின்போது விபத்துகளால் ஏற்படும் மரணங்களுக்கு 1 இலட்சம் ரூபாய், ஈமச் சடங்குகளுக்கு 2,500 ரூபாய் என இத்திட்டத்தின் கீழ் நிதியுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 31.8.2007 வரை மொத்தம் 1 இலட்சத்து 4 ஆயிரத்து 671 விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 35 கோடியே 36 இலட்சத்து 71 ஆயிரத்து 509 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.



அதுபோலவே, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்தில் 3 இலட்சத்து 95 ஆயிரத்து 453 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 64 ஆயிரத்து 247 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 14 கோடியே 78 இலட்சத்து 21 ஆயிரத்து 799 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியத்தில் 22 ஆயிரத்து 763 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்து 61 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 36 இலட்சத்து 33 ஆயிரத்து 401 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியத்தில் 15 ஆயிரத்து 621 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் ஓராயிரத்து 561 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 29 இலட்சத்து

45 ஆயிரத்து 40 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் 9 ஆயிரத்து 754 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 1,522 பணியாளர் களின் குடும்பங்களுக்கு 24 இலட்சத்து 26 ஆயிரத்து 795 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 49 ஆயிரத்து 874 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 25 ஆயிரத்து 691 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 4 கோடியே 90 இலட்சத்து 27 ஆயிரத்து 351 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தில் 22 ஆயிரத்து 300 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 1,177 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 23 இலட்சத்து 27 ஆயிரத்து 160 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத்தில் 14 ஆயிரத்து 840 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 395 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 7 இலட்சத்து 20 ஆயிரத்து 100 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியத்தில் 78 ஆயிரத்து 59 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 15 ஆயிரத்து 818 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 3 கோடியே 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காலணி தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர் நல வாரியத்தில் 3 ஆயிரத்து 168 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 340 பணியாளர் களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 7 ஆயிரத்து 38 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பொற்கொல்லர் நலவாரியத்தில் 5 ஆயிரத்து 481 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 364 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 67 ஆயிரத்து 124 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் 3 ஆயிரத்து 313 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 302 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 6 இலட்சத்து 7 ஆயிரத்து 192 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தில் 47 ஆயிரத்து 170 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களின் 2 ஆயிரத்து 214 பணியாளர்களின் குடும்பங்களுக்கு 40 இலட்சத்து 29 ஆயிரத்து 330 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 31.8.2007 வரை 4 இலட்சத்து 46 ஆயிரத்து 864 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அவர்களின் 62 ஆயிரத்து 226 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு 19 கோடியே 41 இலட்சத்து 30 ஆயிரத்து 625 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆக விவசாயத் தொழிலாளர் நல வாரியம், உடல் உழைப்புத் தொழிலாளர் நலவாரியம் முதலான 13 அமைப்பு சாராத் தொழிலாளர் நலவாரியங்கள், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய அனைத்து வாரியங்கள் மூலமும் 13.5.2006இல் இந்த அரசு அமைந்த பிறகு 31.8.2007 வரை ஏறத்தாழ 15 மாதங்களில் 1 கோடியே 72 இலட்சத்து ஓராயிரத்து 312 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில், 2 இலட்சத்து 82 ஆயிரத்து 674 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 79 கோடியே 28 இலட்சத்து 43 ஆயிரத்து 139 ரூபாய் பல்வேறு இனங்களின் கீழ் உதவித் தொகைகளாக வழங்கப்பட்டு அமைப்பு சாரா தொழிலாளர்களின் நல வாழ்வுக்கும், வள வாழ்வுக்கும் அளப்பரிய உதவிகளை ஆற்றியுள்ளது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு.

# காமன்வெல்த் மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழக விளையாட்டு வீரர்களுக்கு 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகள் !

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வழங்கினார்**



தமிழகம் விளையாட்டுத் துறையில் முன்னோடி மாநிலமாக உயர்ந்து உலகப்புகழ் பெற வேண்டும் என்ற நோக்கில் தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தமிழக அரசு ஆண்டுதோறும் ஊக்கப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறது. அத்திட்டத்தின்படி ஒலிம்பிக் போட்டி, காமன்வெல்த் போட்டி, ஆசிய விளையாட்டுப் போட்டி, தெற்காசிய விளையாட்டுப் போட்டி போன்ற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்றுச் சாதனை படைத்துவரும் தமிழக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மேலும் பல வெற்றிகளைப் பெறுவதற்கு ஊக்கம் அளித்திடும் வகையில் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

அந்த வகையில், அண்மையில் மெல்போர்னில் நடைபெற்ற 18ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளிலும், இலங்கையில் நடைபெற்ற 10ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பதக்கங்களைப் பெற்றுச் சாதனைகள் படைத்துள்ள 28 வீரர்களுக்கும், 10 வீராங்கனைகளுக்கும் மொத்தம் 1 கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுத்தொகை ஏற்கெனவே தமிழக அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 17 வீரர்களுக்கும், 11 வீராங்கனைகளுக்கும் மொத்தம் 96 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5.10.2007 அன்று வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.

# பார்வையற்ற மாணவர்களுக்கு
# அரசுக் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்கள் விலக்களித்து
# மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர், தங்களது 15–அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 26.9.2007 முதல் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், மாண்புமிகு சமுகநலத் துறை அமைச்சர் டாக்டர். பூங்கோதை அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட பார்வையற்றவர்களை 29.9.2007 அன்று காலை நேரில் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.9.2007 அன்று சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க இருப்பதாகவும், எனவே போராட்டத்தை உடனே கைவிடுமாறும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் சங்கப் பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டார்.

இதனை ஏற்று, பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் போராட்டத்தை 29.9.2007 அன்று கைவிடுவதாக அறிவித்தனர்.

30.9.2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டனர்.

பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித் தொகையை உயர்த்துவதற்கும், பி.எட். வகுப்புகளில் 7 அரசுக் கல்லூரிகளில் மொத்த 35 இடங்கள் பார்வையற்றவர்களுக்கு 2008ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு நீட்டித்து வழங்கவும், அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கல்விக் கட்டண விலக்கு, தேர்வுக் கட்டண விலக்கு மற்றும் தேர்வு எழுத ஒரு மணி நேரம் கூடுதலாக ஒதுக்கக் கோருதல் சம்பந்தமாக ஏற்கெனவே உள்ள அரசாணையை அனைத்து பல்கலைக் கழகங்களும், உடனடியாகப் பின்பற்றவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், பட்டதாரி ஆசிரியர் மொத்தப் பணியிடங்களில் இரண்டு சதவிகிதம் பார்வையற்றோருக்கு வழங்குவது சம்பந்தமாகவும், சிறப்பு நிகழ்வாக பட்டதாரி ஆசிரியர்



பணியிடங்கள் பார்வையற்றோர்களுக்கு வழங்குவது சம்பந்தமாகவும் பள்ளிக் கல்வித் துறையுடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணச் சலுகை வழங்குவது சம்பந்தமாக போக்குவரத்துத் துறையுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அறிவித்தார்கள். மேலும், மற்ற கோரிக்கைகளை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்குமென்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்தச் சந்திப்பின்போது மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்கள், நிதித்துறைச் செயலாளர், சமூகநலத் துறை செயலாளர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் ஆகியோர் உடன் இருந்தனர்.

# 10, 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் சாதனை படைத்த 12 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகள், பாராட்டுக்கள்

## ஐ.ஏ.எஸ் முதன்மைத் தேர்வுக்குச் செல்லும் 5 மாணவ - மாணவிகளுக்கு தலா ரூ.25,000 ஊக்க உதவித் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வழங்கினார்



ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் 2007 மார்ச்சுத் திங்களில் நடத்திய 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருவண்ணாமலை அ.வைஷ்ணவி, மாணவர் விருதுநகர் கு.சுகதேவ், பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் ந.ஜனனி, மாணவர் விழுப்புரம் இரா.விஜய்ராம்குமார், கிறித்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி வேலூர் பிரியங்கா விக்டர், மாணவர் நாகப்பட்டினம் டி.எம்.ஏ. ஜெயபாலன் ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதமும்,

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் ஆ.ஸ்ரீநித்யா, மாணவர் பா.சுவீர்மன், பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி சேலம் மு.சுகாசினி, மாணவர் நாமக்கல் ஜே.ச. சந்தோஷ், கிறித்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருச்சி ஜோ. இக்னேசியஸ் நான்சி, மாணவர் விழுப்புரம் ஜே.ஜோபிரவின்குமார் ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 27.9.2007 அன்று பரிசுத் தொகைகளை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், ஐ.ஏ.எஸ். பதவிக்கான முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதவிருக்கும் ஆதிதிராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 100 இளைஞர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் எம். பூங்கொடி, சென்னை கே. சபரி ராஜ்குமார், தூத்துக்குடி ஏ.கனகராஜ், மதுரை ஜி. வீரபாண்டியன், மதுரை என். நந்தினிப் பிரியா ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலா ரூ.25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. தமிழரசி, செயலாளர் திரு. சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., இயக்குநர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் முனைவர் சிவசூரியன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

# சென்னை இராணிமேரி கல்லூரியில் கலைஞர் வளாகம்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்






**மா**ண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் கல்வித் துறை மானியக் கோரிக்கை கொள்கை முடிவாக சென்னை இராணிமேரி கல்லூரியில் போதுமான வகுப்பறை இல்லாத குறையினைக் களையும் பொருட்டு ரூ.2.5 கோடியில் புதிய கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து அரசாணை எண்.273/ உயர் கல்வித்துறை (டி1), நாள் 6.8.2007, ரூ.2.50 கோடியில் "டாக்டர் கலைஞர் கட்டடத் தொகுதி" என்ற பெயரில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இக்கட்டடமானது கான்கிரீட் தூண்களால் (Framed Structure) தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் உள்ளதாக உருவாக்கப்பட உள்ளது. ஒவ்வொரு தளத்திலும் கட்டப்பட உள்ள கட்டடத்தின் அளவுகள் விவரம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தரைத்தளம் 828 ச.மீ. (8,908 ச. அடிகள்) இத்தளத்தில் ஐந்து வகுப்பறைகள், நூலகம், அலுவலக அறை மற்றும் அலுவலர்கள் அறை அமைய உள்ளது. முதல் தளம் 780 ச.மீ (98,392 ச.அடிகள்) கல்லூரி நிருவாக அலுவலகம், முதல்வர் அறை, தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம், தலைவர் அறை, கருத்தரங்குக் கூடம் மற்றும் வகுப்பறைகள் அமைய உள்ளது.

இரண்டாம் தளம் 780 ச.மீ. (8,392 ச. அடிகள்) இரண்டாம் தளம் முழுவதும் வகுப்பறைகள் அமைய உள்ளது.

இக்கட்டடத்தின் வகுப்பறைகள் மற்றும் நடைவழி ஆகியவற்றிற்கு இராஜஸ்தான் கற்கள் மற்றும் செராமிக் ஓடுகளால் தரை பதிக்கப்படும். சன்னல்கள் அலுமினியத்தால் அமைக்கப்படும்.

இக்கட்டடத்திற்கு தேவைப்படும் மின்சாரம், சுகாதாரம், தண்ணீர் மற்றும் அனைத்து வசதிகளும் செய்யப்படும். இக்கட்டடத்தின் முகப்புத் தோற்றம் திராவிடப் பராம்பரிய கலைநயத்துடன் விளங்கும்.

சென்னை, இராணி மேரி கல்லூரியில் 11.10.2007 அன்று நடைபெற்ற விழாவில் 'கலைஞர் வளாகம்' புதிய கட்டடத்திற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர். க.பொன்முடி, மற்றும் உயர்கல்வித்துறைச் செயலாளர், கல்லூரி முதல்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ✶

# அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை




**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

தமிழகத்தில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்று திண்டிவனத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

•

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 21.9.2007 அன்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு. க.பொன்முடி, மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை இணை அமைச்சர் திரு. க.வேங்கடபதி, ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் திரு. அசோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., இயக்குநர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலாளர் திரு. தீனபந்து இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிருவாக இயக்குநர் திரு.ஸ்வரண்சிங், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர் கோபால் இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. பிரஜேந்திர நவ்நீத், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசியதாவது:

விழுப்புரத்தில் கடந்த மார்ச் திங்கள் கூட்டம் நடத்தினோம். தற்போது திண்டிவனத்தில் ஆய்வுக் கூட்டம் நடத்தி, திட்டப் பணிகள் விரைவாக நடைபெற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தி உள்ளோம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் 10 மாவட்டங்களில் பணி நடைபெற்று வருகிறது. அதில் விழுப்புரம் மாவட்டத்தில் 74 விழுக்காடு பணிகள் முடிவுற்றது. இப்பணிகளுக்காக ரூ.166 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.120 கோடி அளவிலான பணிகள் சிறப்பாக நடைபெற்று உள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 12,618 ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், விழுப்புரம் மாவட்டத்தில் 7,550 பணிகள் எடுக்கப்பட்டு, அதில் 5,339 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,000 பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில், திருவெண்ணைநல்லூர், கோட்டகப்பம் மற்றும் மரக்காணம் ஆகிய பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 9 கோடியே 92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண விழுப்புரம் மாவட்டம் 2 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்கான பணியாளர்களும் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம் சார்பாக இதுவரை 650 திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளது.

கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். விழுப்புரம் நகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு, அடுத்த வாரம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

செஞ்சி, விழுப்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஓராண்டிற்குள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். விழுப்புரத்தில் வணிக வளாகம், பூங்கா அமைப்பது போன்ற பணிகள் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்" இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.



## ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு விமான பணிப்பெண் பயிற்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் 2006–2007 ஆம் ஆண்டில் 100 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவியருக்கு விமான பணிப்பெண் பயிற்சி அளிக்க ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகின்றது. இப்பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி அவர்கள் 8.10.2007 அன்று ஆய்வு செய்தார். அங்கு பயிற்சி பெறும் மாணவிகளுடன் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார். பயிற்சி பெறும் மாணவிகள் இப்பயிற்சி பயனுள்ளதாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இப்பயிற்சி பெறும் அனைத்துப் பெண்களுக்கும் வேலை பெற்றுத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தை கேட்டுக் கொண்டார். ★

# பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்முறைக் கையேடு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 2007–08 ஆம் ஆண்டு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்துப் பேரூராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இது குறித்து, "பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை – செயல்முறை கையேடு" எனும் நூல் பேரூராட்சி நிருவாகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. அறிவியல் முறையில் திடக்கழிவுகளைக் கையாளுதல் மற்றும் மேலாண்மை முறைகளை நெறிப்படுத்த பேரூராட்சி களின் செயல் அலுவலர்கள், துப்புரவு ஆய்வாளர்கள், பேரூராட்சிப் பொறியாளர்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளுக்கேற்ப திடக்கழிவு பதனீடு மற்றும் புதைக்களம் தேர்வு செய்தல், வீட்டுக்கு வீடு மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்தல் மற்றும்

"பேரூராட்சிகளில் தற்போது செயல்பாட்டில் உள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதரத் திட்டங்கள் மூலம் மேம்பாடும் அடையும் இந்த வேளையில், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி, தூய்மையுள்ள பேரூராட்சியே நம் பேரூராட்சி என்பதனை உறுதி செய்திட வேண்டும்."

மறுசுழற்சிக்கான வழி முறைகள், திடக்கழிவு மேலாண்மை கையாளுதல் மற்றும் மேலாண்மை விதிகள் 2000இன் செயல் இலக்குகள், அறிக்கை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் போன்றவைகள் குறித்த விவரங்கள் அடங்கியுள்ளன.

மேலும், இத்திட்டம் தொடர்பான புகைப்படங்களுடன் கூடிய மாதிரிகள், செய்யக்கூடிய மற்றும் செய்யக் கூடாத வழிமுறைகள், இத்திட்டத்தில் உபயோகிக்கும் கருவிகள் மற்றும் உபகரணங்களில் பயன்பாடுகள், பல்வேறு செயலாக்க வழிவகைகள், மாதிரி புதைக்களம் போன்ற விவரங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி வீட்டுக்கு வீடு குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிக்கும் முறையினை இந்நிதி ஆண்டு முதல் நடைமுறைப் படுத்துதல் பேரூராட்சிகளின் தலையாய கடமையாகும். இதனை ஊக்கப்படுத்தும் விதமாக பணியாளர்களுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கும் போதிய பயிற்சி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னோடியாக, இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகள் மிகவும் உபயோகமாக அமையும். இந்த செயல்முறைக் கையேடு அனைத்துப் பேரூராட்சி செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் பொதுநல ஆர்வலர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

பேரூராட்சிகளில் தற்போது செயல்பாட்டில் உள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதரத் திட்டங்கள் மூலம் மேம்பாடு அடையும் இந்த வேளையில், இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி முறைகளைப் பின்பற்றி, தூய்மையுள்ள பேரூராட்சியே நம் பேரூராட்சி என்பதனை உறுதி செய்திட வேண்டும்.

இந்நூல் வெளியீட்டினை காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த அச்சரப்பாக்கம், மாங்காடு, பெருங்களத்தூர், செம்பாக்கம், மாமல்லபுரம், நந்திவரம்–கூடுவாஞ்சேரி, போரூர் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளின் மன்றத் தலைவர்கள் அனைத்துப் பேரூராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சிகளின் இயக்குநர் டாக்டர்.கே.கோபால்,இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

* * *



# சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் கண்கவர் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகள்

**மா**ண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 17.9.2007 அன்று, மத்திய புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள கோயம்பேட்டில், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் புதிய அதிநவீன குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வைத்தும், புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித் தடங்கள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தும், பயணச்சீட்டு வழங்கும் கையடக்க மின்னணு கருவியினை அறிமுகப்படுத்தியும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உடனடி தளம் வழிப்பதிவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தும், போக்குவரத்துத் துறையில் புதிய எல்.பி.ஜி. ஆட்டோக்களுக்கான அனுமதிச் சீட்டு வழங்கியும் மற்றும் கணினி தேர்வு மூலம் பழகுநர் ஓட்டுநர் உரிமம் வழங்கும் சிறப்புத் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு தலைமை வகித்தார். மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி முன்னிலை வகித்தார். போக்குவரத்துத்துறை செயலாளர் திரு.தேவேந்திரநாத் சாரங்கி மற்றும் நிருவாக இயக்குநர் திரு.இரா.பாலசுப்பிரமணியம் ஆகியோர் உடனிருந்தனர்.

நவீனத் தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப் பட்டிருந்த பேருந்துகள், எழிலுற ஊர்ந்து சென்ற காட்சி அனைவரையும் கவர்ந்தது.



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பல்வேறு நிலைகளில்
# பணி நியமனங்கள்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பணி நியமன ஆணைகளை 26.9.2007 அன்று வழங்கினார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில், குடிநீர்த் திட்டங்களையும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் விரைவாகச் செயல்படுத்திட, காலியாக உள்ள பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று 12.4.2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப் பட்டது.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அலுவலக பணிகளையும், களப் பணிகளையும் விரைவுப்படுத்திட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, காலி பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இரண்டாவது கட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறைகளின்படி தகுதி வாய்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்று, கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் 17 நபர்களுக்கு ஓட்டுநர் பணி நியமனமும், உரிய தகுதி உள்ள இளங்கலைப் பட்டம் பெற்று கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்கள் 36 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பணி நியமனமும், உதவியாளராகப் பதவி உயர்வு பெற உரிய தகுதிகள் பெற்ற இளநிலை உதவியாளர் / தட்டச்சர் 95 நபர்களுக்கும் / 3ஆம் நிலை சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 23 நபர்களுக்கு உதவியாளராகப் பணி மாற்றல் முறை

ஆணைகளும் 26.9.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் முந்தைய ஆட்சியில் பல ஆண்டுகளாக முடக்கி வைக்கப்பட்டிருந்த பணி நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் சலுகைகளை கழக அரசு பதவியேற்ற பின்பு மீண்டும் வழங்கிட ஆணையிட்டதன் பயனாக இந்த பணி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிருவாகத் துறைச் செயலாளர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரண்சிங், வாரியப் பொறியியல் இயக்குநர் திரு.பி.கே. நடேசன் மற்றும் வாரிய உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 2006ஆம் ஆண்டு முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், குறுகிய காலத்தில் பணியாளர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டன. அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் 858 தொகுப்பூதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். 173 மதிப்பூதியப் பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி முதலிய வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி உத்தரவிடப்பட்டது.

20 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. 10 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது. 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–05ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை 28.8.2006லும், 2005 – 06 ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டன. ஐந்து ஆண்டு காலமாகப் பதவி உயர்வுகள் வழங்கப்படாதிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

புதிதாக 19 உதவிப் பொறியாளர்கள் நியமனம் மற்றும் கீழ்நிலைப் பதவிகளில் பணியாற்றி பொறியியல் பட்டம் பெற்ற 67 நபர்களுக்கு உதவிப் பொறியாளராகப் பணி நியமன ஆணை 23.7.2007 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற ஆணைகள் வழங்கியதற்கிணங்க, மாபெரும் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைத் துரிதமாகச் செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டது.

இதைப்போல ஊரகக் குடிநீர்த் திட்ட வேலைகள் துரிதமாகச் செயல்படுத்திட திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டது. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



## தமிழக சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்துக்கு ரூ.25 இலட்சம் ஊக்கத்தொகை

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

தமிழ்நாட்டைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர் திரு.விஸ்வநாதன் ஆனந்த், 2007 செப்டம்பர் மாதம் மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று இரண்டாவது முறையாக உலக சதுரங்க சாம்பியன்ஷிப் பட்டம் வென்று, தமிழகத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். மிகச் சிறந்த இந்த வெற்றியைப் பாராட்டியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக அரசின் சார்பில் அவருக்கு ஊக்கத் தொகையாக 25 இலட்சம் ரூபாய் வழங்கிட ஆணையிட்டுள்ளார்

# ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள்

**மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்**



சென்னை ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.9.2007 அன்று ரூ.2.40 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூபாய் 87.85 இலட்சத்திலான திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சர்வீஸ் சாலையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 22 இலட்சத்து 60 ஆயிரத்து 770 மதிப்பிலான பூங்காவினைத் திறந்துவைத்து எழில்மிகு நீர்வீழ்ச்சியினை இயக்கி வைத்தார். இப்பூங்கா 33,100 சதுர அடி பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளது. 160 மீட்டர் நடைபாதையும், 2,670 சதுர மீட்டர் சிறுவர் விளையாடுமிடமும், 1,070 சதுர அடியில் புல்வெளிகள், கழிப்பறை, குடிநீர் வசதிகளும் உள்ளன. வாகனங்கள் நிறுத்துவதற்கு 2,136 சதுர அடி ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலையில் ரூபாய் 42.60 இலட்சம் மதிப்பிலான பகுப்பாய்வுக் கூடத்தினை மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார்.

இப்பகுப்பாய்வுக் கூடத்தில் ஏழை, எளிய மக்கள் பயன் பெறுவதற்காக எக்ஸ்ரே, இ.சி.ஜி., மலம், சிறுநீர் பரிசோதனைகள் மற்றும் அனைத்து வகையான இரத்தப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு சென்னையின் மேயராக இருந்தபொழுது மேற்கொண்ட சீரிய முயற்சியினால் வள்ளுவர்கோட்டம், சைதாப்பேட்டை, ஈ.வெ.ரா. சாலை, பெரம்பூர் ஆகிய இடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பகுப்பாய்வுக் கூடங்கள், ஆய்வுக்கூடங்கள் தொடங்கப் பட்டன. பின்னர் அவை சென்ற ஆட்சியாளர்களால் மூடப்பட்டது. தற்போது மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பகுப்பாய்வுக் கூடத்தின் பயன்பாட்டிற்காக ரூபாய் 40

இலட்சம் செலவில் உபகரணங்கள், 5 இலட்சம் செலவில் மரத்தளவாடப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன

தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லேக் ஏரியா முதல் பிரதானசாலை மற்றும் 7ஆவது குறுக்குத் தெருக்களில் ரூபாய் 79.62 இலட்சம் மதிப்பிலான சிமெண்ட் கான்கிரீட் சாலை போடும் பணியினைத் தொடங்கி வைத்தார். இப்பணியின் நீளம் 383 மீட்டர். பரப்பளவு 3,903 சதுர மீட்டர் ஆகும்.

வள்ளுவர்கோட்டம் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக அரிமா சங்கம் மூலம் ரூபாய் 2 இலட்சம் செலவிலான குடிநீர் சுத்திகரிப்புத் தொட்டியையும், மாதிரிப் பள்ளி சாலையில் ரூபாய் 7 இலட்சம் மதிப்பிலான உடற்பயிற்சிக் கூடத்தினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

பின்னர் ஒயிட்ஸ் சாலை – வெஸ்ட் காட் சாலை சந்திப்பில் 24 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின்விளக்குகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார். இதன் மதிப்பு ரூபாய் 5. 74 இலட்சமாகும்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் மீர் பக்ஷி அலி தெருவில் 32 குடியிருப்புகளுக்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன் அவர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

இதன் பரப்பளவு 4,364 சதுர அடியும், கட்டட பரப்பளவு 6,304 சதுர அடியும், தரைத்தளத்துடன் மூன்று தளங்களுடன் கட்டப்படவுள்ளது. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 56 இலட்சமாகும்.

தோமையப்பன் தெருவில் 60 குடியிருப்புகளுக்கான அடிக்கல் நாட்டினார். கட்டட பரப்பளவு 12,000 சதுர அடியாகும். தரைத்தளத்துடன் மூன்று தளங்கள் கட்டப்படவுள்ளன. இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1கோடியே 5 இலட்சமாகும்.

பின்னர் எல்டாம்ஸ் சாலையில் 40 எண்ணிக்கையிலான புதிய தெருவிளக்குகளை ரூபாய் 8.43 இலட்சத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இயக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் மா.சுப்பிரமணியன் அவர்கள், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி,இ.ஆ.ப., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன், துணை மேயர் திருமதி ஆர்.சத்தியபாமா மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.


100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

TNSC BANK

TNSC வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

இணையதளம் : www.tnscbank.com

செ.ம.தொ.இ/1664/வரைகலை/2007

# நிலக்கோட்டை சிப்காட் வளாகத்தில் இரண்டு தொழில் நிறுவனங்கள் அமைக்க மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் முதலீட்டின் அவசியம் குறித்து அவ்வப்போது வலியுறுத்தி வருகிறார்கள். இது குறித்து அரசின் முயற்சிகளின் காரணமாக கீழ்வரும் இரண்டு நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான திண்டுக்கல்லில் அமைந்துள்ள நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் நிறுவ முன்வந்துள்ளன.

1) பென்னர் (இந்தியா) லிமிடெட்

2) கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட்

சிப்காட் மற்றும் மேற்படி இரண்டு நிறுவனங்களுக்கிடையில் நிலம் ஒதுக்கீடு செய்வது, கட்டுமான வசதி மற்றும் திட்ட வசதிகள் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் 12.9.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தாகியது.

முனைவர். என்.கோவிந்தன், இ.ஆ.ப., தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் சிப்காட் சார்பாகவும், திரு.எல்.ராம்குமார், தலைவர் மற்றும் இயக்குநர் பென்னர் இந்தியா லிமிடெட்

சார்பாகவும் மற்றும் திரு.சுனில் பஹிலாஜனி, நிருவாக இயக்குநர் கெப்பாரோ இன்ஜினியரிங் சார்பாகவும் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் தொழில் துறை செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப. பங்கேற்றார்.

### தொழில் திட்டங்கள் குறித்த விவரங்கள்

1. பென்னர் (இந்தியா) லிமிடெட் நிறுவனமானது டயர், பேப்பர், சிமெண்ட், பால்பண்ணை, அக்ரோ ஜெனிடிக்ஸ் மற்றும் பிற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நடத்துகிறது. தமிழகத்தில் இந்நிறுவனம் தொழில்துறையில் சுமார் 200 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காவில் ஆயில் சீல் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் இந்நிறுவனம் தொடங்க உள்ளது.

**இந்தியாவில் இந்நிறுவனம் 16 தொழிற்சாலைகளை நிறுவி 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சென்னைக்கு அருகில் அமைந்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சிப் பூங்காவிலும், திருப்பெரும்புதூர் தொழிற் பூங்காவிலும் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் தொடங்க உள்ளது.**

நவீன தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய பெல்ட் (வி–பெல்ட், பாலி வி–பெல்ட் மற்றும் டைமிங் பெல்ட்) தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் தொடங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.35 கோடி முதலீடு செய்து 300 பேருக்கு (நேரடியாக 150 மற்றும் மறைமுகமாக 150) வேலை கொடுத்து ஓராண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பி லிமிடெட் நிறுவனம் லார்ட் ஸ்வராஜ் பால் என்பவரால் 1968ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இங்கிலாந்து நாட்டின் கெபாரோ குழுமத்தைச் சேர்ந்தது. இக்குழுமம் இங்கிலாந்து, தென் அமெரிக்கா, இந்தியா, ஸ்பெயின், துபாய் போன்ற 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 6,000 பேர்களைப் பணியில் அமர்த்தி ஒரு பில்லியன் யூரோ வர்த்தகத்தில் ஈடுபட்டு உள்ளது. இந்தியாவில் இந்நிறுவனம் 16 தொழிற்சாலைகளை நிறுவி 1,800 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சென்னைக்கு அருகில் அமைந்துள்ள ஒரகடம் சிப்காட் தொழில் வளர்ச்சிப் பூங்காவிலும், திருப்பெரும்புதூர் தொழிற் பூங்காவிலும் தொழிற்சாலைகளை இந்நிறுவனம் தொடங்க உள்ளது.

இயந்திர வில்லைகள் (Stamping Unit) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிலக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இந்நிறுவனம் தொடங்க உள்ளது. இத்தொழிற்சாலையில் ரூ.40 கோடி முதலீடு (ரூ.25 கோடி முதல் கட்டமாகவும், ரூ.15 கோடி இரண்டாம் கட்டமாகவும்) செய்து 400 பேருக்கு (நேரடியாக 250 மற்றும் மறைமுகமாக 150) வேலைவாய்ப்பளித்து, அக்டோபர் 2009 இல் உற்பத்தியை தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

★

# சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணை

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2007 அன்று தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் தொகுப்பூதிய அடிப்படையில் பணிபுரிந்து வரும் 32 பெண் மருத்துவர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளை வழங்கினார்.

சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையங்கள் மூலம் மருத்துவ சிகிச்சைகள் இலவசமாக அளிக்கப்படுகிறது. இதற்காக சென்னை மாநகராட்சியில் 93 நகர நலவாழ்வு மையங்கள், 13 குடும்பநல அறுவை சிகிச்சை நிலையங்கள், 19 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் சைதாப்பேட்டை, பெருமாள் பேட்டையில் 24 மணி நேர அவசர மருத்துவமனை செயல்படுகிறது.

2004ஆம் ஆண்டு 32 பெண் மருத்துவர்கள் தொகுப்பூதிய முறையில் பணியமர்த்தப்பட்டனர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பணி நிரந்தர கோரிக்கை ஏற்கப்பட்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி தற்போது சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தில் பணிபுரியும் இந்த 32 பெண் மருத்துவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவதுடன், காலமுறை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500 என்ற அடிப்படையில் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ள இந்த மருத்துவர்கள் பிற அரசு மருத்துவர்களைப்போல் அனைத்துப் பயன்களும் பெறுவார்கள். இந்தப் பணி நிரந்தர உத்தரவினைப் பெற்றுக் கொண்ட மருத்துவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும் சென்னை மாநகராட்சி நலவாழ்வு மையத்தின் மருத்துவப் பணிக்கு 32 மருத்துவர்கள், 56 செவிலியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நியமிக்கப்பட உள்ளார்கள். இதனால் அனைத்து மாநகராட்சி நலவாழ்வு மையங்களில் மருத்துவர்கள் பணிபுரிவதன் மூலம் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் பிரசவ கவனிப்பு, குடும்பநல கருத்தடை சிகிச்சை, கருக்கலைப்பு, குழந்தைகளுக்கு தடுப்பூசி போன்ற முக்கியமான பணிகள் எவ்வித தொய்வின்றி நடைபெறும்.



இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப., ஆணையர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) திரு.அ.மணிவேலன் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

♦ ♦ ♦

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.,

எண்.1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை—600 008.
தொ.பே.எண் 044—28411643, 044—28547952
மின் அஞ்சல்: taico@dataone.in/taico@vsnl.net

'**தாய்கோ வங்கி**' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி, தமிழக அரசின் தொழில் வணிகத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது.

தமிழகம் முழுவதும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கி நன்மைகள் பல அடைவீர்!
விவரங்களுக்கு, அருகில் உள்ள
மாவட்டத் தொழில் மையம் மற்றும் தாய்கோ வங்கி கிளைகளை அணுகவும்!

<u>தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு:</u>
காலக்கடன், நடைமுறை மூலதனக் கடன், உண்டியல் தள்ளுபடி, வங்கி உத்திரவாதம் போன்ற வசதிகள் பெறுவீர்!

<u>பொது மக்களுக்கு:</u>
வீடு அடமானக் கடன், வீடு கட்டக் கடன், அதிகபற்றுக்கடன்,
அரசு பத்திரங்களின் மீது கடன், வைப்புநிதிகளின் மீது கடன், நகைக்கடன் ஆகிய கடன்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெற்று பயனடைவீர்!

வைப்புத் தொகைகளுக்கு கூடுதலாக வட்டி பெறுவீர்!
முதியோரின் வைப்பு தொகைகளுக்கு 1% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

வைப்பு நிதிகளுக்கு அதிக வட்டி! கடன்களுக்கு குறைந்த வட்டி!
சிறந்த சேவை! நிறைந்த பாதுகாப்பு!

## தாய்கோ வங்கியில் முதலீடு செய்து பயனடைவீர்!

மேலும் விவரங்களுக்கு எங்கள் கிளைகளை தொடர்பு கொள்ளவும்.

**வங்கி கிளைகள்**

| | ☎ | | ☎ |
|---|---|---|---|
| குன்னூர் | 0423 2206003 | நெய்வேலி * | 04142 268849 |
| கோவில்பட்டி | 04632 220547 | ஈரோடு * | 0424 2268024 |
| சாத்தூர் | 04562 260359 | அம்பத்தூர்* | 044 26540223 |
| மதுரை | 0452 2343464 | காஞ்சீபுரம் | 044 27223562 |
| திருச்சி | 0431 2462745 | திருவண்ணாமலை | 04175 251058 |
| சேலம் * | 0427 2313189 | திண்டுக்கல் | 0451 2433351 |
| வேலூர்* | 0416 2212597 | காரைக்குடி | 04565 233881 |
| நாகர்கோவில் | 04652 233741 | ஆழ்வார்பேட்டை | 044 24342463 |
| சேப்பாக்கம் | 044 28547751 | ஆத்தூர்(சேலம்) | 04282 242070 |
| கோயம்புத்தூர் | 0422 2529207 | கூடலூர்(நீலகிரி) | 04262 263712 |
| தஞ்சாவூர் | 04362 238286 | எழும்பூர் | 044 28411643 |
| திருநெல்வேலி * | 0462 2322921 | தர்மபுரி | 04342 266744 |
| கரூர் | 04324 262636 | சிவகாசி | 04562 276867 |
| தேனி | 04546 252163 | வியாசர்பாடி | 044 25516566 |
| நாமக்கல் | 04286 277616 | திருவாரூர் * | 04366 220090 |

* பாதுகாப்பு பெட்டக வசதி உள்ளது

செ.ம.தொ.இ/1727/வரைகலை/2007

# நகராட்சி நிருவாகத் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை



முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் நேரடி நியமனங்களுக்கு 29.11.2001 முதல் ஒட்டு மொத்தத் தடை விதிக்கப்பட்டது. அரசுப் பணியின்போது இயற்கை எய்திய அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களைக் கருணை அடிப்படையில் நியமனம் செய்வதும் தடை செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்ற கழக அரசு மீண்டும் பதவியேற்ற பின்னர் அரசுப் பணியில் நேரடி நியமனத்திற்கு இருந்த தடையினை நீக்கியது. கருணை அடிப்படையில் நியமனம் செய்வதற்கு இருந்த தடையும் நீக்கப்பட்டது.

நகராட்சிகளில் நிரப்பப்படாமலிருந்த அனைத்துப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் நகராட்சி நிருவாகத் துறையில் 15 மருத்துவர் பணியிடங்கள், 48 உதவிப் பொறியாளர் பணியிடங்கள், 3 நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள் மற்றும் 113 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.6.2007 மற்றும் 22.6.2007 ஆகிய தேதிகளில் வழங்கினார்.

மேலும், இளநிலை உதவியாளர் பணியிடங்களில் 25 விழுக்காடு பணியிடங்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்ய அரசு ஆணையிட்டதற்கிணங்க, நிலுவையில் இருந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 78 இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் உதவியாளர் பணியிடங்களுக்கு 9.8.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் நியமனத்திற்கான ஆணை சம்பந்தப்பட்ட வாரிசுதாரர்களுக்கு நேரில் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பணியிடைக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுகளிடமிருந்து 31.12.2006 வரையில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, 18.9.2007 அன்று 26 இளநிலை உதவியாளர், 55 வருவாய் உதவியாளர், ஒரு தட்டச்சர், 4 ஓட்டுநர், 7 பணி ஆய்வர், 8 மின் கம்பி உதவியாளர் கிரேடு –II, 14 பதிவறை எழுத்தர், 24 துப்புரவுப் பணி மேற்பார்வையாளர், 2 சங்கிலியாள், 15 அலுவலக உதவியாளர், 12 காவலர், 12 மகப்பேறு ஆயா உள்ளிட்ட 180 பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, நகராட்சி நிருவாக இணை ஆணையர் வே.க.சண்முகம் மற்றும் நகராட்சி நிருவாக கூடுதல் இயக்குநர் வெ. பிச்சை மற்றும் நகராட்சி நிருவாகத் துறை உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நகராட்சிகளில் நிரப்பப்படாமல் உள்ள அனைத்துப் பணியிடங்களையும் அந்தந்த நகராட்சியின் நியமனக் குழுவின் மூலம் தொடர்ந்து பூர்த்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. ★

# பிற மாநிலங்களுக்கு முன் மாதிரியாகத் திகழும் தமிழக அரசின் செய்தித்துறை

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்களின் உரை



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
புதுடெல்லியில் 19.9.2007 அன்று நடைபெற்ற
மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்

**மா**ண்புமிகு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்களே, மாநில செய்தித்துறை அமைச்சர்களே, அரசுச் செயலாளர்களே, நண்பர்களே,

இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை ஏற்பாடு செய்துள்ள 26ஆவது மாநில செய்தித்துறை அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். தமிழ்நாட்டில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழிலில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, சிறப்பாகப் பணியாற்றுவதற்கு தமிழக செய்தித்துறையின் கரங்களை வலுப்படுத்தி, திறமையாக செயல்பட வைக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்வாழ்த்துக்களை இங்கு உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**பத்திரிகையாளர் நலன்**

நான்காவது தூண் என்று அழைக்கப்படும் பத்திரிகைத் துறையினரின் நலன் காப்பதில் தமிழகம் என்றுமே முன்னோடியாக உள்ளது. 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய பத்திரிகையாளர் எவரேனும் பணியிலிருக்கும் போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்திற்கு 'பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்' கீழ், நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அவர்களால் 1997ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ரூ.25,000 நிதியுதவியாக வழங்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இறந்துவிட்டால், அவர்களது குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார் களேயானால் ரூ.1.50 இலட்சம் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.1இலட்சம் என்றும், 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலும் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.50 ஆயிரம் என்றும் குடும்ப நல நிதி வழங்கும் திட்டம்

நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே, ஒரு பத்திரிகையாளர் 5 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால், அவர் ஓய்வூதியத்திற்கும், குடும்ப நல நிதி வழங்கும் தகுதி பெறுகிறார்.

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தையும் தமிழகம் செயல்படுத்தி வருகிறது. ரூ.3,000 மாத ஓய்வூதியம் வழங்கி வந்ததை எங்கள் அரசு ரூ.4,000 ஆக உயர்த்தி தற்போது வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ், 73 ஓய்வுபெற்ற பத்திரிக்கையாளர்கள் பயன் பெறுகிறார்கள். பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிக்கையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1998 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்பொழுது குடும்ப ஓய்வூதியத் தொகை மாதம் ரூ.1500 லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு வாங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

தமிழகத்தில் திரைப்படத்துறை உலக அளவில் பெயர் பெற்றுள்ள அதிக அளவில் படம் தயாரிக்கப்படும் துறை என்பது அனைவரும் அறிந்ததே. தமிழ்நாட்டில் திரைப்படத் தொழில் பல ஆயிரக்கணக்கான உலகத் தரம் வாய்ந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்கும் முக்கிய தொழிலாக விளங்குவதோடு, 1,662 திரையரங்குகளையும் கொண்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற போது பல்வேறு காலங்களாக தொய்வாக இருந்த திரைப்படத்துறையை தூக்கி நிறுத்த ஒரு சூழ்நிலை இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த ஓராண்டில் முன்பு எப்போதும் இல்லாத வகையில் திரைப்படத்துறை மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. பொது மக்கள் தற்பொழுது அதிக அளவில் திரையரங்கத்திற்குச் சென்று படம் பார்க்கின்றனர். அதனால் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கானோர் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்பொழுது அதிக எண்ணிக்கையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இந்த வெற்றிக் கதையை நான் விரிவாகச் சொல்ல விரும்புகிறேன். இதை மற்ற மாநிலங்களும் பின்பற்றலாம்.

## திருட்டு வீடியோ தடுத்தல்

திருட்டு வீடியோதான் திரைப்படத் தொழிலின் மிகப் பெரிய எதிரியாகக் கருதப்படுகிறது. எனவே, திருட்டு வீடியோவை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. திருட்டு வீடியோ தயாரிப்பில் ஈடுபடுவோரை 1982ன் சட்டம் 14ல் கீழ் தண்டிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டு, 43 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். இச்சட்டம் மாநில அரசுகளுக்கு, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு, சட்டங்கள் இயற்ற உதவுகிறது. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ பதிவுக் கருவிகள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும், கம்பிவடத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையிலும் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி, திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டத்தை மீறும் குற்றவாளிகளுக்கு அபராதத் தொகை அதிகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். வீடியோ திருட்டை தடுப்பதற்காக, 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு மூலமாக திரைப்படங்களைத் தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டு கையாளப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் சுங்கத் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, டி.வி.டி.க்கள் மற்றும் வி.சி.டி.க்கள் வெளிநாடுகளுக்குக் கடத்துவதையும், அவற்றை வெளிநாடுகளிலிருந்து கடத்தி வருவதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழகத்தில் திருட்டு வீடியோ நடமாட்டம் முடக்கப்பட்டுள்ளது.

மேலும், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் பணியாற்றும் காவல்துறையினருக்கு சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களுக்கு செயலாக்கம் குறித்தும் அதன் முக்கியத்துவமும் உணர்த்தப்பட்டு, அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

## திரைப்படத் தொழிலில் மறுமலர்ச்சி

இக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவிருக்கும் திரைப்படத்துறை குறித்த தலைப்பினைப் பார்க்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரைப்படத்துறை வளர்ச்சி குறைந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் திரைப்படங்களைப் பார்ப்பது குறைந்து வருவதாலும், திரையரங்குகளில் போதிய வசதியின்மை காரணத்தினாலும், டிக்கெட்டின் அதிக விலை மற்றும் தொலைக்காட்சியின் வளர்ச்சியாலும், திரைப்படத்துறை நலிந்துவருகிறது. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழில் பெயரிடப்பட்ட பழைய மற்றும் புதிய தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளித்தும், பொது இடங்களில் எடுக்கப்படும் படப்பிடிப்பிற்கான கட்டணங்களை பெருமளவில் குறைத்தும், பல்வேறு சலுகைகளை அளித்தும் ஆணையிட்டார்கள். இப்பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடையும் என்ற நோக்கத்தில் இச்சலுகைகள் வழங்கப்பட்டன.

திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் மற்றும் பிலிம் சேம்பர், திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கம், சென்னை மாநகரத் திரையரங்குகள் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய அமைப்புகள், திரையரங்குகளின் கட்டண விகிதங்களைக் குறைவாக விதிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டன. இச்சங்கங்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அரசு, திரையரங்குகள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படையில் திரையரங்குகளின் கட்டணங்களை குறைந்த மற்றும் அதிக அளவுக்குள் கட்டணங்களை மாற்றியமைத்தும் மறுநிர்ணயம் செய்தும் ஆணை பிறப்பித்தது. மேலும், புதிதாக வெளியிடப்படும்

திரைப்படங்களுக்குத் திரைப்படம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து முதல் இரண்டு வாரங்களுக்கு, உச்சவரம்பு ஏதுமின்றி திரையரங்கு உரிமைதாரர்கள் நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்துக் கொள்ளலாம் என்கிற முந்தைய ஆணையையும் அரசு ரத்து செய்துள்ளது. அரசு நிர்ணயித்துள்ள அதிக அளவு கட்டணங்களுக்கும் குறைவாக ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு கட்டணத்தை நிர்ணயிக்க திரையரங்க உரிமையாளர் விரும்பினால், உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு முன்கூட்டியே அறிவிப்பு செய்து அவ்வாறு நிர்ணயித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், பல்வேறு வணிக அமைப்புகளைக் கொண்ட திரையரங்க உரிமையாளர்கள், சென்னை மாநகர திரைப்படம் காட்டுவோர் சங்கம் ஆகியோர் தங்களின் பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்கு (Multiplex) தனியாகக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் எனக்கோரி முறையீடு செய்து கொண்டதன் அடிப்படையில் அவர்களுக்கு அரசு பல்வேறு வணிக அமைப்புகள் கொண்ட திரையரங்குகளுக்கு, அங்கு வழங்கப்படும் வசதிக்கேற்றவாறு நுழைவுக் கட்டணங்களை நிர்ணயித்து ஆணையிட்டது. ஒரே வளாகத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட திரையரங்குகள், வரைபடங்கள், கூடுதல் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் சீர்வளி வசதி கொண்ட குடும்ப கேளிக்கை மையங்களில் குறைந்த அளவு கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள், குறிப்பாக நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் நுழைவுக் கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டதோடு, திரையரங்குகளில் சுகாதார சோதனைகளும் அடிக்கடி நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தை வெகுவாகக் குறைத்து ஆணையிட்டுள்ளார்கள். இன்று அதிக இடங்களில் படப்பிடிப்பு நடத்துவதற்கு மிகக் குறைந்த கட்டமாக ரூ.3000 மட்டும் ஒருநாள் படப்பிடிப்புக்கு வசூலிக்கப்படுகிறது. மேலும், தொலைக்காட்சித் தொடர்கள் படப்பிடிப்பிற்கு திரைப்படத்திற்கு உள்ள கட்டணத் தொகையில் 50 விழுக்காடு மட்டுமே கட்டணமாக வசூலிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குவது போல் தொலைக்காட்சி நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகளை தமிழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. பன்னாட்டு விருதுபெறும் தமிழ் திரைப்படங்களுக்கு, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, புதிதாக ஊக்கத் தொகை வழங்கும் திட்டமும் தற்பொழுது செயல்படுத்தப்படுகிறது. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்த்திரைப்படங்களுக்கு மானியம் ரூ.7 இலட்சம் வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் காரணமாக தமிழக திரைப்படத்துறை மிகப் பெரிய மாற்றத்தினை கண்டுள்ளது. திரையரங்குகளில் கூட்டம் அலை மோதுகின்றன. திரைப்படங்கள் அதிக அளவில் வணிக ரீதியில் வெற்றி பெறுகின்றன. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில் முன்பு எப்போதும் இல்லாத நம்பிக்கையுடன் செயல்படுகிறது. இந்த நம்பகத் தன்மை காரணமாக திரைப்படத்துறையினர் புதிய கோணங்களில் படமெடுக்க முனைகின்றனர். இப்பெரிய மாற்றம் உண்மையிலேயே ஒரு வரலாற்று சிறப்புமிக்க மாற்றமாகும். அதுவும் டாக்டர் கலைஞர் அரசு பொறுப்பேற்ற முதல் ஆண்டிலேயே நிகழ்ந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். தொழில்நுட்பத்திற்கேற்ப விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் திரைப்படத் தொழிலுக்கு ஒரு நிலையான இடத்தைப் பெற்றுத் தருவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் உத்தேசிக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு ஒத்துழைப்பதோடு இத்திட்டங்களைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டும் என்றும் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரையரங்கம் தொடர்பான சட்டங்கள் மிகவும் பழையனதாகிவிட்டன. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்றவாறு அவை மாற்றப்படாமல் அப்படியே உள்ளன. திரையரங்கம் கட்டப்படுவதற்கும், படங்கள் திரையிடுவதற்கும் உரிமம் பெறும் வழிமுறைகள் எளிமையாக இல்லை. திரைப்படத்துறைக்கு தொழில் அந்தஸ்து அளிக்கப்பட்டாலும், நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் திரையரங்கம் அமைக்க மானியமோ அல்லது வரிவிலக்கோ அளிக்கப்படவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. திரையரங்கம் பொதுமக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு அம்சமாக விளங்குவதால் அவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். எனவே, திரையரங்கம் தொடர்பான சட்டங்களை எளிமைப்படுத்துவது குறித்தும் ஊக்கத் தொகை வழங்குவது குறித்தும் இக்கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு நில நிருவாக ஆணையர் தலைமையில் ஒரு குழு அமைத்து தற்பொழுது நடைமுறையில் இருந்து வரும் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படம் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை திரைப்படத்துறையின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாற்றியமைக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரசார் பாரதி**

பிரசார் பாரதி நிறுவனத்திற்கு பல்வேறு வரிகளிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று மத்திய அரசு கோரிக்கைகள் வைத்த வண்ணம் உள்ளது. தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி நிலையங்களுக்கு இவை மத்திய அரசுக்கு சொந்தமாக நிறுவனங்கள் என்பதால், தமிழக அரசு முக்கியமான இடங்களை ஒதுக்கித் தந்துள்ளது. தற்பொழுது இந்த இரண்டு நிறுவனங்களும் பிரசார் பாரதி கார்ப்பரேஷன் என்ற தனி அமைப்பின் கீழ் மாற்றப்பட்டுள்ளது. பிரசார் பாரதி கார்ப்பரேஷனின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று நிதி ஆதாரங்களை அதிக அளவில் திரட்டுவதாகும். இருந்தாலும், பிரசார் பாரதி கார்ப்பரேஷன் மாநில அரசின் பல்வேறு சலுகைகளைப் பெற்று வருகிறது.

பிரசார் பாரதி படிவம் 'D' தற்பொழுது விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே அரசுத் துறைகள் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 3 விழுக்காடு சலுகை வரி விதிப்பை அனுமதிக்க இயலாது. 1.4.2007 முதல் அந்தந்த

மாநிலத்துக்கு ஏற்றவாறு உரிய வரியை செலுத்த வேண்டும். எனவே, எங்களின் இந்த நிலையை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசுகளின் கொள்கைகளை விளம்பரப்படுத்துவதில் பிரசார் பாரதியின் பங்கு வெகுக்குறைவாக உள்ளது. அரசு தீட்டும் திட்டங்கள் குறித்தும், நிறைவேற்றிவரும் பணிகள் பற்றியும் மக்கள் அறியும் வண்ணம், அதற்கென்று நேரம் ஒதுக்கி, பிரசார் பாரதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கோரிக்கையை ஒவ்வொரு மாநில செய்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டிலும் வைக்கின்றோம். எனவே, மத்திய அரசு பிரசார் பாரதி கார்ப்பரேஷன் நிறுவனத்தை மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்ற அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன்**

திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் தொடர்பான பணிகளில் தமிழகம் என்றுமே முன்னோடியாக உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக அரசு கேபிள் டிவி சேவையைத் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள். சென்னையில் மல்டி சிஸ்டம் ஆபரேட்டராகவும் (MSO) மாநிலத்தின் பிற பகுதிகளில் கேபிள் டிவி ஆபரேட்டர்களாகவும் செயல்படும். இதுதொடர்பாக "அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்" என்ற நிறுவனத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

உலக அளவில் இந்தியாவை ஒரு சிறந்த திரைப்பட படப்பிடிப்புத் தளமாக முன்னேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். தமிழகம் பல்வேறு கலை கலாச்சார மையங்களுடன், பல கடற்கரைகளையும் பல்வேறு குளிர் சூழல் இடங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. உலக அளவில் வெளிநாட்டினர் விரும்பி வந்து செல்லும் இடமாகவும் விளங்குவதால், திரைப்படம் எடுக்கும் குழுவினரும் விரும்புவார்கள் என்பதில் அய்யமில்லை. இத்திட்டத்திற்கு தமிழக அரசு, மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்பதோடு தமிழகத்தின் புகழை உலக அளவில் விளம்பரப்படுத்த எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் நாங்கள் முழு ஒத்துழைப்புத் தருவோம் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இடங்களைத் தேர்வு செய்வதில் மத்திய அரசையும், தேசிய திரைப்பட வளர்ச்சிக் குழுமமும் மாநில அரசை கலந்து அதிக இடங்களைத் தெரிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களில் செய்தித்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதற்கு இம்மாநாடு வாய்ப்பளித்தது. நம் முன்னோர்கள் இயற்றிய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைய, இம்மாநாட்டை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கு நாங்கள் எடுத்துக் கூறிய பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல தீர்வை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.


**பூம்புகார்**

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்,**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

759, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 28521325, 28521798

**கொலுக் கண்காட்சி**

**புகழ்பெற்ற கலைநயமிக்க கைவினைப் பொருட்களின் அணிவகுப்பு!**

வீட்டு உபயோகப் பொருட்கள், அன்பளிப்பு பொருட்கள் அனைத்தும் பூம்புகாரில் நிறைந்துள்ளது.

நவராத்திரி பண்டிகையினை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களில் அமைந்துள்ள கொலுக் கண்காட்சிக்கு வருகை தாருங்கள்.

கைவினைப் பொருட்களை வாங்கி கைவினைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்!







கொலுக் கண்காட்சி நடைபெறும் இடங்கள் :

| | |
|---|---|
| சென்னை | (28520624, 28550157) |
| திருச்சி | (2704895) |
| தஞ்சாவூர் | (230060) |
| மதுரை | (2340517) |
| திருநெல்வேலி | (2333391) |
| கோயம்புத்தூர் | (2391055) |
| சேலம் | (2214767) |
| ஈரோடு | (2254885) |

நிறுவனத்தின் இணைய தளத்தினை கண்டு களியுங்கள்.

www.tamilnaduhandicrafts.com

Visit us at: www.tn.gov.in / www.southindia.com


வெளியீட்டு ஆணை எண்.1526/வரைகலை/விளம்பரம் 2007, நாள்: 19.09.2007

# விவசாயிகள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் மக்காச்சோளம்




தா. மனோகரன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம்

## பயன்பெற்ற விவசாயிகள் மகிழ்ச்சி

*'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'*
– என்றார் மகாகவி பாரதியார்.

ஒரு நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது உழவுத் தொழிலே. நமது நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மையையே தொழிலாகச் செய்து வருகின்றனர். உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உற்பத்தியைப் பெருக்கவும் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் உழவுத் தொழிலை மேம்படுத்தவும் தமிழகத்தின் உணவு உற்பத்தியை அதிகரித்து தன்னிறைவு பெற்ற முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்குவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதிக முக்கியத்துவம் வழங்கி அதிக நிதி ஒதுக்கீடும் செய்து ஊக்கம் அளித்து வருகிறார்.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை, பொறியியல் துறை, ஆகியவை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கும் வகையில் பணப்பயிர்களாக விளங்கும் பருத்தி, கரும்பு, வாழை, மரவள்ளி ஆகியவை அதிக அளவில் பயிர் செய்வதற்கு நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அண்மைக் காலத்தில் சேலம் மாவட்டத்தில் விவசாயிகள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகியவற்றை அதிக அளவில் பயிர்செய்து வருவாய் ஈட்டுகின்றனர்.

வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக சேலம் செய்தியாளர்கள் குழு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பயணம் செய்தது. அப்பொழுது பருத்தி மற்றும் மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளிடம் கலந்துரையாடும்பொழுது குறைந்த செலவில் அதிக வருவாய் ஈட்டக்கூடிய பணப்பயிராக மக்காச்சோளம் திகழ்கிறது என்பதை நேரில் கண்டறிய முடிந்தது.

வறுமையின் அடையாள உணவாக 'மக்காச் சோளம்' ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால் இன்றோ, அது எல்லா வகையான உணவிலும் மேலோங்கி உள்ளது. குறுகிய காலத்தில் அதிக வருவாய் ஈட்டும் பணப்பயிராகவும் உருவெடுத்துள்ளது. இதனால் நெல், பருத்தி, சாகுபடியில் ஆர்வம் காட்டிய விவசாயிகள் இப்போது மக்காச் சோளத்திற்குத் தாவி வருகின்றனர். தமிழ்நாட்டில் நெல், சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் கேழ்வரகு ஆகியவை 27 லட்சத்து 91 ஆயிரத்து 400 எக்டேரில் பயிரிடப்படுவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நெல் 20,50,455 எக்டேரிலும், சோளம் 3,16,274, கம்பு 81,925, மக்காச்சோளம் 2,02,830, கேழ்வரகு 40 ஆயிரத்து 367 எக்டேரிலும் பயிர் செய்யப்படுகிறது. நெல்லுக்கு அடுத்த இடத்தை சோளம் பெற்றிருப்பது மாநில



அளவிலான நிலையாக இருந்தாலும், சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேற்கு மண்டலப் பகுதியில் இப்போது நெல்லுக்கு அடுத்த இடத்தை மக்காச்சோளம் பிடித்து வருகிறது. இம்மாவட்டங்களில் கரும்பு, பருத்தி போன்றவை பரவலாக பயிரிடப்பட்டது. இந்நிலங்களும் வீரிய மக்காச்சோளம் உற்பத்திப் பகுதிகளாக மாறி வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் பருத்தி உற்பத்திக்குப் பெயர் பெற்ற பகுதியாக ஆத்தூர், பெத்தநாயக்கன் பாளையம், கெங்கவல்லி பகுதிகள் திகழ்ந்தன. இங்கு மட்டும் 20 ஆயிரம் எக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. இதில் கட்டுபடியான விலை கிடைக்காததால் குச்சிகிழங்கு (மரவள்ளிக்கிழங்கு) உற்பத்திக்கு மாறினர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பளவு வெறும் 300 எக்டேராக் குறைந்தது.

இதன் பின் வீரிய பி.டி.ரக பருத்திக்கு நல்ல விலை கிடைத்ததால் இப்பகுதி விவசாயிகள் பி.டி பருத்தி உற்பத்தியில் ஆர்வம் காட்டினர். இதனால் பருத்தி சாகுபடி பரப்பு மீண்டும் 24 ஆயிரம் எக்டேராக அதிகரித்தது. இப்போது எல்லா மாநில விவசாயிகளும் இதே ரக பருத்தி உற்பத்தியில் ஆர்வம் காட்டுவதால் இவற்றின் விலையில் கடுமையான சரிவு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி வடுகத்தாம்பட்டி விவசாயிகள் திரு. ராஜமாணிக்கம் செய்தியாளர்களிடம் கூறும் பொழுது ஒரு ஏக்கரில் பி.டி. ரக பருத்தி உற்பத்தி செய்தால் கிடைக்கும் நிகர லாபம் ரூ. 13 ஆயிரம் மட்டுமே, ஆனால் இதே அளவு நிலத்தில் மக்காச்சோளம் பயிரிட்டால் கிடைக்கும் நிகரலாபம் ரூ. 14 ஆயிரம். பருத்தி பயிரிடும் காலத்தில் 2 முறை வீரிய மக்காச் சோளம் உற்பத்தி எடுத்துவிடலாம் என்பதால் லாபம் 2மடங்கு கூடுதலாக கிடைப்பதாகவும் கூறினார்.

இதே கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயி திரு.சி.பி.பொன்னன் கூறும்பொழுது 100 நாட்களில் மகசூல் கிடைக்கும் மக்காச்சோளம் ஒரு ஏக்கருக்கு 3,000 கிலோ கிடைக்கிறது. 1 கிலோ ரூ. 7க்கு விற்பனை செய்கிறோம். சில ஆண்டுகளுக்கு முன் சேலம் மாவட்டத்தில் மக்காச்சோளம் பயிரிடும் நிலப்பரப்பு மிகவும் குறைவாக இருந்தது. கடந்த ஆண்டு 30 ஆயிரம் எக்டேரில் பயிர்செய்யப்பட்ட மக்காச்சோளம் இந்த ஆண்டு 40 ஆயிரம் எக்டேரில் பயிர்செய்யப்படுகிறது. பெரம்பலூருக்கு அடுத்து மக்காச்சோளம் உற்பத்தி அதிகம் நடைபெறும் மாவட்டமாக சேலம் மாறியுள்ளது. மேலும் இப்பயிர் எத்தகைய தட்பவெட்ப சூழ்நிலையிலும் பருவ காலம் ஏதுமின்றி வருடம் முழுவதும் பயிர் செய்யக்கூடிய பயிராக விளங்குகிறது என்று தெரிவித்தார்.

நாமக்கல், பல்லடம் பகுதியில் கோழிப்பண்ணை முக்கியத் தொழிலாக உள்ளது. கோழிகளுக்கான உணவாக மக்காச்சோளம் உள்ளது. இவை கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. தற்போது சேலம், தருமபுரி மாவட்டங்களில் மக்காச்சோளம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதால் கோழிப்பண்ணைகளின் தீவனத் தேவை பூர்த்தி செய்யப்படும் நிலையில் உள்ளது. ஆகவே குறுகிய காலத்தில் பணப்பயிராக மாறிவரும் மக்காச்சோளம் விவசாயிகளின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பது உறுதி.



# கோ–ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் – கோ–ஆப்டெக்ஸ்

செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

